# ரணில் இன்று விசேட அறிவிப்பு

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று (16) விசேட அறிவிப்பொன்றை வெளியிடவுள்ளார்.
பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை கடந்த வெள்ளிக்கிழமை (14) அமைச்சர் பிமல் ரத்நாயக்க வினால் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது.
அதற்கமைய, பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பிலும் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பிலும்...

02 ஆம் பக்கம்




Follow us:
வாரவெளியீடு
# தமிழன்
THAMILAN தமிழன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர் : 05, இதழ் : 37, குரோதி வருடம், பங்குனி மாதம் 02 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (16.03.2025) ஹிஜ்ரி-1446, ரமழான் - 15, 0115886187 - பக்கங்கள் 20+8+8+8
விலை ரூ.130


## நக்கல் நமசிவாயம்

சனி மாற்றம் ரணில் ஐயாவுக்கு நல்லா இல்லை போல...



## அநுராதபுரம் தமிழ் பெண் மருத்துவருக்கு நடந்த அநியாயம்



பக்கம் 03

★ பட்டலந்த அறிக்கையை சபையில் முன்வைத்த அரசாங்கம்

★ அறிக்கையை நிராகரிக்கும் ரணில் விக்கிரமசிங்க



பக்கம் 05



## பட்டலந்த வதைமுகாமில் நடந்தது என்ன?

பக்கம் 07




## மூதூரில் இருவர் வெட்டிக்கொலை

தோப்பூர் நிருபர்

திருகோணமலை, மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாஹா நகர்ப் பகுதியில் இருவர் வெட்டிக் கொலைசெய்யப்பட்டனர்.
வெட்டுக்காயங்களுடன் சடலங்கள் இருப்பதாக பொலிஸாரின் தகவலை யடுத்து உரிய இடத்துக்கு நேரடியாகச் சென்று ஸ்தல விசாரணையை மேற்கொண்ட மூதூர் நீதவான் நீதிமன்ற நீதிபதி பௌஸான் தஸ்னீம், பிரேத பரிசோதனைக்காக சடலங்களை திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கு உத்தரவிட்டார்.
இக்கொலைச் சம்பவம் வெள்ளிக் கிழமை (14) அதிகாலை 4.30 மணி யளவில் மூதூர் தாஹா நகர்ப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.
இக்கொலைச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது,
68 வயது மதிக்கத்தக்க சிறிதரன் ராஜேஸ்வரி மற்றும் அவரது சகோதரியான 74 வயது மதிக்கத்தக்க சக்திவேல் ராஜகுமாரி ஆகிய இருவருமே வெட்டுக்காயங்களுடன் சடலமாக மீட் கப்பட்டுள்ளதாக ...

02 ஆம் பக்கம்

# பட்டலந்த அறிக்கை ஜெனீவாவுக்கு!



## மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்க நடவடிக்கை

பட்டலந்த சித்திரவதை முகாம் தொடர்பில் வெளியாகியுள்ள ஆணைக்குழு அறிக்கை மற்றும் அதனால் பாதிக்கப்பட்டவர்களின் வாக்குமூலங்களைப் பெற்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்குச் சமர்ப்பிக்க மனித உரிமைகள் அமைப்புகள் நடவடிக்கை எடுத்துவருவதாக அறியமுடிகின்றது.
ஏற்கனவே இந்த அறிக்கை...

02 ஆம் பக்கம்

## வேட்புமனுக்கள் ஏற்பு 20ஆம் திகதி நிறைவு

நா.தினுஷா

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை பொறுப் பேற்கும் பணிகள் நாளை திங்கட்கிழமை (17) ஆரம்பமாகவுள்ள நிலையில், வேட்புமனுத் தாக்கல் எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமையுடன் நிறைவடையுமென்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
எனவே, வேட்புமனுத் தாக்கல் செய்யும் இறுதித் தினத்தன்று பேரணிகள், வாகனப் பேரணிகள், ஒன்றுகூடல்கள் நடத்துவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், நாளை திங்கட்கிழமை யிலிருந்து கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை ஆரம்ப மாவதால் வேட்புமனுத்தாக்கல் நிறைவடையும் தினத்திலிருந்து எதிர்வரும் 26ஆம் திகதி வரை பரீட்சை நிலையங்களுக்கு அருகில் தேர்தல் பிரசாரம் செய்வதற்கு...

02 ஆம் பக்கம்



முஸ்லிம்களின் புனித ரமழான் நோன்பு மாதத்தையிட்டு, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் பங்கேற்புடன் இப்தார் நிகழ்வு வெள்ளிக்கிழமை (14) மாலை அலரி மாளிகை யில் நடைபெற்றது. இதன்போது ஜனாதிபதி முஸ்லிம் அரசியல் தலைவர்களுடன் அளவளாவும் காட்சி.

## அதானியிடமிருந்து கைநழுவும் மின் திட்டம்

### சபையில் விடுக்கப்பட்ட எச்சரிக்கை

மன்னார் காற்றாலை மின் திட்டத்துக்கான ஒப்பந்தம் குறித்து இந்திய நிறுவனமான அதானி குழுமம் ஆர்வம் காட்டவில்லையென்றால் வேறு நிறுவனத்துக்கு இத்திட்டம் கையளிக்கப்படுமென்று இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.
வெள்ளிக்கிழமை (14.03.2025) பாராளுமன்றத்தில் உரை யாற்றிய மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி இதனை அறிவித்துள்ளார்.
"அதானியின் உள்ளூர் முகவரிடமிருந்து இறுதி பதிலுக்காக நாங்கள் காத்திருக்கிறோம். அதானி அதிலிருந்து விலக முடிவு செய்தால், திட்டத்துக்கான ஒப்பந்தம் வேறொரு...

02 ஆம் பக்கம்

## சிகரெட்டுகளுக்கான உற்பத்தி வரி நிதி அமைச்சின் அதிகாரிகள் விளக்கம்

### அரசாங்க நிதி பற்றிய குழுவில் சுட்டிக்காட்டு

1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3ஆவது பிரிவின் கீழ் சிகரெட்டின் உற்பத்தி வரியை அதிகரிப்பதற்கு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகள் விளக்கமளித்தனர்.
அரசாங்க நிதி பற்றிய....

02 ஆம் பக்கம்


செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
அதிகபட்ச முற்பணம்
ரூ. 166,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
• அதிகபட்ச இரகசியத்தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் தங்கக்கடன்
செலான் வங்கி


## யாரிடமிருந்தாவது ரியூசன் எடுத்தாவது கொலைக் கலாசாரத்தை துடைத்தெறிக!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அரசாங்கத்திடம் கோரிக்கை

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் தூண்களில் ஒன்றான பொலிஸ் துறையும் நீதித் துறையும் இன்று ஆபத்தான அச்சுறுத்தலை எதிர்கொண் டுள்ளன. சந்தேக நபர்களை நீதிமன்ற அறையில் கொலை செய்கின்றனர். நீதிமன்றம் மற்றும் நீதிபதிகள் மீது காணப்படும் அச்சம், பயம், மரியாதை முற்றாக இல்லாதுபோயுள்ளன. நீதிமன்ற அறையில் துப்பாக்கிச் சூடு நடத்தும்போது நீதிபதிகளுக்கு ஏற்படும் அதிர்ச்சியை சொல்லி முடிக்க முடியாது. இனியும் இவ்வாறானதொரு நிலை ஏற்படாதென்பதற்கு அரசாங்கம் என்ன உத்தரவாதத்தை நாட்டுக் கும் மக்களுக்கும் நீதிபதிகளுக்கும் வழங்க முடியுமென எதிர்க்கட்சித் தலைவர் அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பினார்.
நாட்டில் சட்டம், ஒழுங்கை சீர்குலைக்கும் வகையில் இடம் பெற்றுவரும் கொலைச் சம்பவங் கள் தொடர்பில் வெள்ளிக்கிழமை (14) பாராளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.
அவர் மேலும் கூறியதாவது,
இத்தருணத்திலும் கூட நீதி மன்றத்தில் கொலையை திட்டமிட்ட பெண்ணும் முன்னாள் பொலிஸ் மா அதிபரும் நீதிமன்ற பிடியாணையிலிருந்து தப்பிக்க தலைமறைவாகி யுள்ளனர்.
பொலிஸாரால் கூட முன்னாள் பொலிஸ் மா அதிபரைக் கண்டுபிடிக்க முடியாதுபோயுள்ளது. ஒட்டுமொத்த நாட்டின் பொதுமக்கள்...



02 ஆம் பக்கம்

# வேலைவாய்ப்புக்காக தனியார் முகவர்களினூடாக செல்லும்போது 1989 இலக்கத்தினூடாக அறிந்துகொள்க – அமைச்சர் விஜித ஹேரத்

''வேலைவாய்ப்புக்காக தனியார் முகவர்களினூடாக வெளிநாடு செல்லும்போது 1989 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி குறித்த முகவர் தொடர்பில் அறிந்துகொள்ள முடியும்'' - என வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.



வேலைவாய்ப்புக்காக வெளிநாட்டுக்கு அனுப்புகின்றோம் எனக் கூறி நிதி மோசடியில் ஈடுபடும் நபர்கள் தொடர்பில் அண்மையில் (12) நடைபெற்ற வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் பங்குபற்றிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கேள்வியெழுப்பினர். இதற்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் விஜித ஹேரத் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் அங்கீகரிக்கப்பட்ட முகவர் நிறுவனங்கள் மற்றும் கட்டணங்கள் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் பணியகத்தின் இணையதளத்தில் அறிந்துகொள்ள முடியுமென்றும் எந்தவொரு தரப்பினரும் அங்கீகரிக்கப்பட்ட தொகையை விட அதிகமாகப் பெற்றுக்கொண்டால் அல்லது அனுமதிப்பத்திரமின்றி ஏதேனும் செயற்பாடுகளில் ஈடுபட்டால் பணியகத்தில் முறைப்பாடு செய்ய முடியுமெனவும் அதிகாரிகள் குழுவில் தெரிவித்தனர்.

ரஷ்யாவில் வசிக்கும் இலங்கையர்கள் அந்நாட்டின் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதாகவும் அவர்கள் மிகவும் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுவதாகவும் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். இதற்குப் பதிலளித்த குழுவின் தலைவர், இந்த நிலைமையை தான் அறிந்திருப்பதாகவும் இது மிகவும் சிக்கலான சூழ்நிலை என்றும் வலியுறுத்தினார்.

சுற்றுலா வலயங்களில் இசை நிகழ்ச்சிகள் மற்றும் இரவு விருந்துகளுக்கான ஒலிபெருக்கிகளின் பயன்பாடு இரவு 10 மணியுடன் மட்டுப்படுத்தப்படுவது சுற்றுலாத்துறையின் விருத்திக்குப் பொருத்தமானதாக இருக்காதென பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவுக்குச் சுட்டிக்காட்டினர். பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் இவ்விடயம் குறித்து கவனம் செலுத்த வேண்டுமென அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரா, பிரதியமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.




அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரழி) அறிவிக்கின்றார்கள், நபி(ஸல்) அவர்கள் அதிகமாக கொடை கொடுப்பவராக இருந்தார்கள். ஜிப்ரீல் (அலை) நபி(ஸல்) அவர்களை ரமழானில் சந்திக்கும்போது அவர் வேகமாக வீசும் காற்றைவிட கொடை கொடுப்பவராக இருந்தார்கள். (ஆதாரம், புகாரி, முஸ்லிம்)

ரமழான் நன்மைகளை அள்ளித்தரும் மாதம். அந்த நன்மைகளை பூரணமாக பெற்றுக்கொள்வதற்கு முயற்சிக்கவேண்டும். இதற்காக எங்களால் முடிந்த ஸதகாக்களை ( தானதர்மங்களை) வறிய மக்களை தேடி வழங்குவோம்.

(தொழுகை நேரங்கள்)
(14ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை)

| | | |
|---|---|---|
| சுபஹ் | - | 5.03 |
| சூரிய உதயம் | - | 6.18 |
| ளுஹர் | - | 12.21 |
| அஸர் | - | 3.35 |
| மஃரிப் | - | 6.22 |
| இஷா | - | 7.31 |

## சந்நிதியான் ஆச்சிரமத்தின் தெய்வீக இன்னிசை





யாழ்ப்பாணம், வடமராட்சி தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் நடத்தப்படும் நிகழ்வின் ஒரு கட்டமாக, 14ஆம் திகதி இடம்பெற்ற நுண்கலைமாணி கிமாவினி கசுந்தன் தெய்வீக இன்னிசைகானம் இடம்பெற்றது.



இதில் ஹார்மோனிய இசையை இசைக்கலாமணி நடேசு செல்வச்சந்திரன், மிருதங்க இசையை கலாவித்தகர் க.சிவகுமார், தபேலா இசையை வித்துவான் ப.கபிலன் ஆகியோர் வழங்கியிருந்தனர்.

இதேவேளை, உதவியாக கோப்பாய் தெற்கு ஞானவைரவர் ஆலயத்தின் கோரிக்கைக்கமைவாக, கட்டிட கட்டுமானப் பணிக்காக ரூபா 75,000 ரூபா நிதி வழங்கப்பட்டது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நிர்வாகிகள், உறுப்பினர்கள், சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், அடியவர்கள் என பலரும் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர்.

இதேவேளை, சந்நிதியான் ஆச்சிரமத்தில் மாதாந்தம் இடம்பெறும் திருவாசக முற்றோதல் நிகழ்வு வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியிலிருந்து சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் பல ஓதுவார்களுடன் இடம்பெற்றுள்ளது.

### ரணில்...

ரணில் விக்கிரமசிங்க இன்று விசேட அறிவிப்பை வெளியிடவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## தேசிய விளையாட்டு விழாவுக்கு நெஸ்லே நெஸ்டோமோல்ட் அனுசரணை

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் விளையாட்டு மேம்பாட்டுத் துறை நடத்தும் 2025ஆம் ஆண்டு தேசிய விளையாட்டு விழாவுக்கு பிரதான அனுசரணையாளராக நெஸ்லே நெஸ்டோமோல்ட் இணைந்துள்ளது.

குரொஸ்-கன்ட்ரி ஓட்டம், மரதன், நடை, சைக்கிள் ஓட்டுதல் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

குரொஸ்-கன்ட்ரி பந்தயம் மார்ச் 15ஆம் திகதி நுவரெலியாவில் நடைபெறும். 15 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நடைபெறும் இப்போட்டியில் நாடு முழுவதிலுமிருந்து 300க்கும் மேற்பட்டவர்கள் பங்குபற்றுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

கிராஸ்-கன்ட்ரி ஓட்டத்தின் வெற்றியாளர்களுக்கு NESTOMALT ரொக்கப் பரிசுகளை வழங்கும். முதலிடம் பெறுபவருக்கு ரூ. 50,000, இரண்டாம் இடம் பெறுபவருக்கு ரூ. 40,000, மூன்றாம் இடம் பெறுபவருக்கு ரூ. 30,000 வழங்கப்படும்.

மேலும், முதல் 10 இடங்களைப் பிடிக்கும் விளையாட்டு வீரர்களுக்கு சிறப்பு ரொக்கப் பரிசுகளும் வழங்கப்படும்.

நெஸ்லே 118 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையர்களின் வாழ்வில் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாக இருந்து வருகிறது. நிறுவனத்தின் முதன்மை பிராண்டான NESTOMALT, 60 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை குடும்பங்களால் நம்பப்பட்டு ரசிக்கப்பட்டு வருகிறது. குருநாகலிலுள்ள அதன் அதிநவீன தொழிற்சாலையில் இலங்கையில் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்படும். இது, நாட்டின் மிகவும் விரும்பப்படும் சின்னமான மோல்ட் பானமாகும்.இது மோல்ட்பார்லி மற்றும்பாலின்நன்மைகளை வழங்குகிறது. மேலும் உடலையும் மனதையும் உற்சாகப்படுத்த அத்தியாவசிய ஊட்டச்சத்துகளால் செறிவூட்டப்பட்டுள்ளது.




## மு.கா. எம்.பி. நளீம் பதவி இராஜினாமா

### தழுதழுத்த குரலில் சபையில் உரை

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரான மொஹமட் சாலி நளீம் கட்சித் தலைமையின் வேண்டுகோளுக்கிணங்க ஏறாவூர் நகரசபையின் வேட்பாளராக போட்டியிடுவதற்காக தான் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து இராஜிநாமாச் செய்வதாக குரல் தழுதழுத்த நிலையில் சபைக்கும் சபாபீடத்துக்கும் அறிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற 2025 வரவு-செலவுத் திட்டத்தின் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுவதற்கு முன்னரே இவ்வாறு தனது இராஜிநாமாவை அவர் அறிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், என்னை நம்பி எனது கட்சி தலைமையால் எனக்கு ஒப்படைக்கப்பட்ட தேசிய பொறுப்பை எனக்கு அங்கீகாரம் வழங்கிய எனது மண்ணின் மக்களுக்கும் கட்சிக்கும் சமர்ப்பணம் செய்த ஒரு வரலாற்றுப் பெருமை இந்த உயரிய சபையில் நிறைவேற்றிய பெருமையுடன் பதவியை தக்க வைக்கவும் நிலைநிறுத்தவும் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் காற்றிலே பறக்கவிட்டு அற்ப சலுகைகளை எதிர்பார்த்து கட்சிக்கும் பிறந்த மண்ணுக்கும் வாக்களித்த மக்களுக்கும் தலைகுனிவை உண்டாக்கிவிட்டோர் வரிசையில் சேராது எடுத்த அமானிதத்தை சரிவர நிறைவேற்றி மக்கள் பிரதிநிதியாக தலைநிமிர்ந்து இந்த உயரிய சபையிலிருந்து விடைபெறுகின்றேன்.

அரசியல் பதவிகளில் கிடைக்கும் ஊதியம், சலுகைகள் என்பன என்னை அங்கீகரித்த மக்களுக்கு உரித்தான ஒன்றாகும். அதனை துளியும் எனக்காக பாவிக்காது மக்களுக்கு வழங்கும் நடைமுறையை 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்ற பிரதிநிதியாக ஏறாவூர் நகரசபையில் முன்னெடுத்து இன்று ஒரு பாராளுமன்ற உறுப்பினராக நடைமுறைப்படுத்தியிருக்கின்றேன். பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்த 3 மாத காலத்துக்குள் ஏழரை இலட்சம் ரூபா சம்பளத்தையும் எனக்கு வாக்களித்த மக்களுக்காக நான் பகிர்ந்தளித்துள்ளேன்.

எமது தேசியத் தலைவர் ரவூப் ஹக்கீம், கட்சியின் செயலாளர், கட்சியின் அதியுயர்பீட உறுப்பினர்கள் ஏனையவர்களுக்கும் நான் நன்றிகளை தெரிவிக்கின்றேன். இந்த தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை நான் கேட்காமலேயே என் மீது நம்பிக்கை வைத்து தந்த கட்சித் தலைமைக்கு நான் எந்தக்காலத்திலும் துரோகம் செய்யாது அவ்வாறு துரோகம் செய்தவர்களின் பழியையும் துடைத்து எறிபவனாக கட்சியால் எனக்கு வழங்கப்பட்ட இந்த பிரதிநிதித்துவத்தை கட்சி கேட்கின்ற நேரத்தில் ,கட்சியின் தீர்மானத்துக்கு தலைவணங்குபவன் என்ற அடிப்படையில் எனது இந்த பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை நான் கட்சிக்காக ஒப்படைகின்றேன்.இராஜிநாமா செய்கின்றேன்.

என்னுடைய கட்சி வேண்டிகொண்டதற்கிணங்க ஏறாவூர் நகரசபையின் வேட்பாளராக நான் போட்டியிடவுள்ளேன். ஏறாவூர் மக்கள் ஒரு போதும் எமது கட்சிக்கு துரோகம் செய்யமாட்டார்கள். இந்தக் கட்சிக்கு அவர்கள் என்றுமே கடமைப்பட்டவர்கள். அவர்கள் எமது கட்சிக்கு வெற்றியைப் பெற்றுத்தருவார்கள் என்று கூறி இன்றிலிருந்து நான் எனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து இராஜிநாமாச் செய்து கொள்கின்றேன் - என்றார்.

உரையின் இறுதியில் அவர் குரல் தழு தழுக்க மிகவும் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் பேசினார்.

### பட்டலந்த...

வெளிவந்திருந்தாலும் இலங்கை பாராளுமன்றத்தில் அது சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க இலங்கையை வலியுறுத்தும் வகையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை செயற்படவேண்டுமென மேற்படி மனித உரிமை ஆர்வலர்கள் கோரவுள்ளதாக மேலும் தெரியவந்தது.

இந்த அறிக்கையில் சாடப்பட்டுள்ள நபர்கள் மற்றும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படாத பல விடயங்களை ஆதாரத்துடன் ஐ.நாவிடம் முன்வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரியவந்தது.

### மூதூரில்...

பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், உயிரிழந்தவர்களின் 15 வயது மதிக்கத்தக்க பேத்தி வெட்டுக் காயங்களுடன் மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

குறித்த கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின்பேரில் மேற்படி கொலை செய்யப்பட்டோரின் 15 வயது பேத்தி மூதூர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### அதானியிடமிருந்து...

நிறுவனத்துக்கு வழங்கப்படும்'' - என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா எழுப்பிய வினாவுக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

### வேட்புமனுக்கள்...

தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த விதிமுறைகள் தொடர்பில் சட்டங்கள் கடுமையாக அமுல்படுத்தப்படுமென்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்து விளக்கமளிக்கையில்,

2025ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் பொறுப்பேற்கும் நடவடிக்கைகள் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு 25 மாவட்டங்களினதும் தெரிவத்தாட்சி அலுவலகங்களில் ஆரம்பமாகும். அதற்கமைய, 20ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் நிறைவடையும்.

அதேபோன்று கட்டுப்பணத்தை பொறுப்பேற்கும் நடவடிக்கைகள் 19ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை இடம்பெறும். 20ஆம் திகதி வேட்புமனுத் தாக்கல் நிறைவடைந்ததன் பின்னர் நண்பகல் 12 மணி முதல் 1.30 வரை எதிர்ப்பு தெரிவிப்பதற்கான காலம் அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்ப்புக் காலப் பகுதியில் யாராவதொருவரின் வேட்புமனு தொடர்பில் எதிர்ப்புத் தெரிவிக்க முடியும் .

1.30 மணியின் பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்கள் மற்றும் நிராகரிக்கப்பட்ட மனுக்கள் தொடர்பான தெரிவத்தாட்சி அதிகாரிகளின் தீர்மானம் வெளியிடப்படும். அதன் பின்னரே தேர்தலில் போட்டியிடும் சுயாதீன குழுக்களுக்கான சின்னம் அறிவிக்கப்படும்.

குறிப்பாக, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை திங்கட் கிழமையிலிருந்து (17) 26ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. அதனால், வேட்புமனுத் தாக்கல் செய்யும் காலப்பகுதியிலும் அதன் பின்னரான பரீட்சை இடம்பெறும் காலப்பகுதியில் பரீட்சார்த்திகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் வேட்பாளர்கள் அவர்களின் பணிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். 20ஆம் திகதி திகதி நண்பகல் 12 மணியின் பின்னர் எந்தவொரு பேரணியோ, வாகனப் பேரணியோ அல்லது ஒன்றுகூடல்களை மேற்கொள்வதற்கோ சட்டத்தில் இடமில்லை.

இதுதொடர்பில் சட்டத்தைக் கடுமையாக அமுல்படுத்துமாறு சட்ட மா அதிபருக்கு ஆலோசனை வழங்கியுள்ளோம். மாவட்ட செயலாளர் அலுவலகத்தை அண்மித்த பகுதியில் பரீட்சை மத்திய நிலையம் அமையப்பெற்றுள்ளதால் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படாத வகையில் வாக்காளர் செயற்படுவது அவசியமாகும். வேட்புமனுத் தாக்கல் செய்திலிருந்து 2 ஆம் திகதி வரையில் பரீட்சை மத்திய நிலையங்களுக்கு அண்மையில் பிரசாரம் செய்வதை தவிர்த்துக்கொள்வது அவசியமாகும்.

தபால் வாக்கு விண்ணங்களைப் பொறுப்பேற்கும் பணிகள் ஆரம்பித்தில் வேட்புமனுத் தாக்கல் தினம் அறிவிக்கப்பட்ட 336 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான தபால் வாக்கு விண்ணப்பங்கள் 17ஆம் திகதி நள்ளிரவு 12 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் வேட்புமனு கோரப்பட்ட 3 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான தபால் வாக்கு விண்ணப்பம் 19 ஆம் திகதியுடன் நிறைவடைகிறது - என்றார்.

### சிகரெட்டுகளுக்கான...

உறுப்பினர் (கலாநிதி) ஹர்ஷ த சில்வா தலைமையில் 11.03.2025ஆம் திகதி கூடியபோது நிதி அமைச்சின் அதிகாரிகள் இந்த விளக்கத்தை முன்வைத்தனர்.

சரியான தகவல்களின்றி சிகரெட்டுகளுக்கான உற்பத்தி வரியைக் கூட்டுவதற்கு அனுமதிக்க முடியாதென்றும் அவ்வாறு அதிகரிக்கப்பட வேண்டுமாயின் அதற்கான நியாயப்படுத்தல்களை வழங்க வேண்டுமென்றும் அரசாங்க நிதி பற்றிய குழு இதற்கு முன்னர் நடைபெற்ற கூட்டத்தில் அறிவுறுத்தியிருந்தது.

அத்துடன், சிகரெட்டுகளின் மீதான உற்பத்தி வரி தொடர்பில் நடத்தப்பட்ட மதிப்பாய்வுகளுக்கமைய, வரி அதிகரிப்பு முறையினூடாக அரசாங்கத்துக்குக் கிடைக்கும் வருமானம் அதிகரிக்காதென்றும் நிறுவனத்துக்குக் கிடைக்கும் வருமானமே அதிகரிக்குமென்றும் குழு சுட்டிக்காட்டியிருந்தது.

எனவே, இந்த வரி மறுசீரமைப்பு அரசாங்கத்துக்குக் கிடைக்கும் வருமானத்துக்கு எந்தளவு நன்மை ஏற்படுத்துமென்பதை உறுதிப்படுத்துவது அவசியம் எனவும் இது பற்றி நிதி அமைச்சின் அதிகாரிகளிடமிருந்து நியாயப்படுத்தல்களைப் பெற்று குறித்த வரி அதிகரிப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.



இதற்கமைய, 1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3ஆவது பிரிவின் கீழான கட்டளை குறித்து அரசாங்க நிதி பற்றிய குழுவில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டதுடன், இதற்கு அனுமதியும் வழங்கப்பட்டது.

அத்துடன், 2007ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழான இரண்டு கட்டளைகள் குறித்தும் குழுவில் ஆராயப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

இதற்கமைய, 2007ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் பிரிவு 5 இன் கீழ் வெளியிடப்பட்ட 2417/20ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கமைய, அத்தியாவசிய உணவுப் பொருட்கள் உட்பட 63 பொருட்களுக்கு ஏற்கனவே விதிக்கப்பட்ட வியாபாரப் பண்ட அறவீட்டின் செல்லுபடியாகும் காலம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட அமைச்சின் அதிகாரிகள் வழங்கிய பரிந்துரைகளைப் பெற்று, அத்தியாவசிய உணவுப் பொருட்கள் உட்பட 63 பொருட்களுக்கு அதே வீதத்தில் இந்த வரி விதிக்கப்பட்டது. 2007ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் பிரிவு 5இன் கீழ் வெளியிடப்பட்ட 2421/03ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் வெளியிடப்பட்ட கட்டளைக்கமைய ரமழான் நோன்பு காலத்தில் இலவசமாக விநியோகிக்கப்படும் பேரீச்சம் பழங்களுக்கு வரிச் சலுகை கோரப்பட்டுள்ளது.

அத்துடன், வருமான வரிகளில் இரட்டை வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்கும் நிதி ஏய்ப்பைத் தடுப்பதற்கும் 2024ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் 28(6) பிரிவைத் திருத்துவதற்கான நெறிமுறை பற்றியும் அரசாங்க நிதி பற்றிய குழு கவனம் செலுத்தியது. இதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில், பிரதியமைச்சர் (கலாநிதி) ஹர்ஷன சூரியப்பெரும, பாராளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, (கலாநிதி) கௌசல்யா ஆரியரத்ன, விஜேசிறி பஸ்நாயக்க, அர்கம் இலியாஸ், நிமல் பலிஹேன மற்றும் (சட்டத்தரணி) லக்மாலி ஹேமச்சந்திர ஆகியோர் கலந்துகொண்டனர்.

### யாரிடமிருந்தாவது...

பாதுகாப்புச் சீர்குலைந்துள்ளது. பூசா சிறைச்சாலையின் முன்னாள் அத்தியட்சகர் கொடூரமான முறையில் கொல்லப்பட்டார். கம்பஹா வெலிவேரிய பகுதிகளில் பல துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடந்துள்ளன. அநுனுகொலபலஸ்ஸ பகுதியில் இளைஞன் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். மீகஹகிவுல, தல்தென, மூதூர் போன்ற பிரதேசங்களிலும் கொலைகள் இடம்பெற்று வருகின்றன.

இத்தகைய பின்னணியில், பொதுமக்களின் பாதுகாப்பு சீர்குலைந்துள்ளது. இதை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும். வீதிகளில் கொலை, வன்முறை மற்றும் பயங்கரவாதம் என முழு சமூகத்திலும் பயங்கரம் ஆட்கொண்டுள்ளது. இவற்றைக் கட்டுப்படுத்த, யாரிடமாவது டியூஷன் எடுத்து இந்தக் கொலை அலையை தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஓய்வு பெற்ற பிறகும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு மிரட்டல் விடுக்கப்படுகின்றன. இது இவ்வாறு தொடர்ந்தால் இவர்கள் எவ்வாறு தமது அரச பணியை முன்னெடுப்பது. இங்கு பிரச்சினை காணப்படுகின்றது. இந்த கொலை செய்யும் கலாசாரத்தை நிறுத்த தேசிய வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்கு எதிர்க்கட்சியின் ஒட்டுமொத்த ஆதரவையும் நல்குவர். முன்னாள் பொலிஸ் மா அதிபரை கண்டுபிடிக்க முடியாவிட்டால் சட்டத்தின் ஆட்சியை எவ்வாறு கோலோச்சுவது? எனவே, இதனை வேடிக்கையாக எடுத்துக்கொள்ளாமல் தீர்வுகளை வழங்கவேண்டும்.

நாட்டின் தேசிய பிரச்சினைகளை பாராளுமன்றத்தில் முன்வைக்க சபை அமர்வுகள் ஆரம்பிக்கும் நேரத்தில், பாராளுமன்ற சம்பிரதாயங்களின் பிரகாரம் எதிர்க்கட்சித் தலைவருக்கு இருந்த வாய்ப்பை தற்போதைய அரசாங்கம் தொடர்ந்தும் மறுத்து வருகிறது. ஆகையால் தான் வரவு-செலவு திட்ட குழுநிலை விவாதத்துக்கு மத்தியில் இவ்வாறு இந்த விடயத்தை சபையில் முன்வைக்கின்றேன் என எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

# அநுராதபுரம் தமிழ் பெண் மருத்துவருக்கு நடந்த அநியாயம்!

வாசன்

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் தமிழ் பெண் மருத்துவரை பாலியல் பலாத்காரம் செய்த நிலந்த மதுரங்க ரத்நாயக்க என்ற 34 வயதுடைய சந்தேக நபர் கல்னேவ பகுதியில் கைதுசெய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பிரதான சந்தேக நபரின் மூத்த சகோதரியும் மற்றொரு நபரும் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில் பிரதான சந்தேக நபர் உட்பட ஏனைய சந்தேக நபர்களை நாளை 17ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. கடந்த திங்கட்கிழமை அநுராதபுரம் போதனா வைத்தியசாலை வளாகத்திலுள்ள உத்தியோகபூர்வ விடுதிக்குள் புகுந்த இந்தச் சந்தேக நபர் 32 வயதுடைய பெண் பயிற்சி மருத்துவரொருவரை துஷ்பிரயோகம் செய்தார்.

கடந்த திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு அவரை மிரட்டி பாலியல் சீண்டல் செய்துள்ளார். பின்னர் சந்தேக நபர் மருத்துவரின் கையடக்கத் தொலைபேசியை திருடிச் சென்றார். தொலைபேசி சிக்னல்களின் அடிப்படையில் சந்தேக நபரைக் கண்டுபிடிக்க பொலிஸார் விசாரணையை ஆரம்பித்தனர்.

பெண் மருத்துவரைப் பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் கடந்த வியாழக்கிழமை (13) அநுராதபுரம் பிரதான நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், அவரை நாளை (17) வரை தடுத்து வைத்து விசாரிக்க பொலிஸாருக்கு அனுமதி வழங்கப்பட்டது.





அநுராதபுரம் தலைமை நீதவான் நாலக சஞ்சீவ ஜெயசூரிய அந்த உத்தரவைப் பிறப்பித்திருந்தார்.

இதேவேளை, அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பாலியல் சீண்டலுக்குள்ளான பெண் சிறப்பு மருத்துவர் தனக்கு நடந்த கொடுமை தொடர்பில் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இந்தச் சம்பவத்தை எதிர்கொண்ட மருத்துவர் தனது அனுபவத்தை அதில் வெளிப்படுத்தினார்.

“நான் பிற்பகல் 3.30 மணியளவில் வேலையிலிருந்து வீடு திரும்பி, விடுதிக்கு வந்தேன். அதன் பிறகு, நான் ருவன்வெலிசாயவுக்கு வழிபடச் சென்றேன்.

மாலை சுமார் 6.30 மணியளவில் நான் விடுதிக்குத் திரும்பினேன். நான் என் விடுதி அறைக்குள் நுழையப் போகும்போது, யாரோ என் பின்னால் வருவதுபோல் உணர்ந்தேன். என் அறைக்கு எதிரே உள்ள அறையின் வாசலிலிருந்த ஒருவர் என் கழுத்தில் கத்தியை வைத்து கதவைத் திறக்கச் சொன்னார். நான் கதவைத் திறந்தவுடன், அவர் என்னைத் தள்ளிவிட்டு, ஒரு ரீ-ஷேர்ட்டால் என் வாயை மூடினார்.

பின்னர் என் அறையின் கதவை மூடிவிட்டு, விளக்குகளைப் போட்டு, எல்லா இடங்களிலும் பார்த்தார். பிறகு எல்லா விளக்குகளையும் அணைத்துவிட்டு குளியலறை விளக்கை மட்டும் போட்டார்.

“நான் இராணுவத்திலிருந்து தப்பி வந்துவிட்டேன். பொலிஸார் என்னைத் தேடுகின்றனர். சிறிதுநேரம் மறைந்திருக்க அனுமதி வேண்டும். இங்கேயே இருக்க விடுங்கள். உங்களை எதுவும் செய்ய மாட்டேன்’’ என்றார். ஆனால், கத்தினால் தொண்டையை அறுத்துவிடுவேன் எனவும் கூறினார்.

அவர் என் அருகில் அமர்ந்து, என் கைகளை முன்னோக்கி நீட்டுமாறு கூறி கட்டி வைத்தார். வாயை ஒரு துணியால் மூடினார். எனது கையடக்கத் தொலைபேசியை வழங்குமாறு கேட்டார்.

என் தொலைபேசியை எடுத்து, தனக்காக ஒரு ஹிந்தி பாடலை போடுமாறு கேட்டார். நான் பாடலை போடாமல் அவருடன் போராடினேன். எனது கையில் கத்தி வெட்டுக்காயம் ஏற்பட்டது. அவர் என்னைக் கொன்றுவிடுவாரெனப் பயந்து அவர் சொன்னதை நான் செய்ய ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது.

அவர் அனைத்தையும் முடித்துவிட்டு எனது தொலைபேசியிலேயே என்னை புகைப்படம் எடுத்தார். நான் கையடக்கத் தொலைபேசியை கொண்டுசெல்கிறேன். நடந்த விடயங்களை வெளியே கூறினால் உங்களுக்குத்தான் பிரச்சினை. மருந்து எடுத்துக்கொள்ளுங்கள் எனக் கூறிவிட்டு அந்த நபர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

என் கைகளும் கால்களும் கட்டப்பட்டிருந்தன. நான் அவற்றை அவிழ்த்தபோது, அறையின் கதவு மூடப்பட்டிருந்தது. ஒரு ஜன்னல் திறந்திருந்தது.

அசௌகரியத்தைத் தாங்க முடியவில்லை, அதனால் நான் குளித்தேன், பின்னர் விரைவாக மருத்துவரிடம் சென்று நடந்ததைச் சொன்னேன். அவரும் எனது தந்தையிடம் தொலைபேசியில் கூறினார்.

பின்னர் சம்மாந்துறை மருத்துவமனையிலுள்ள எனது நண்பர் ஒருவரிடம் தகவலை கூறினார் என்று வாக்குமூலம் அளித்துள்ளார் மேற்படி தமிழ் பெண் மருத்துவர்.

> “நான் இராணுவத்திலிருந்து தப்பி வந்துவிட்டேன். பொலிஸார் என்னைத் தேடுகின்றனர். சிறிதுநேரம் மறைந்திருக்க அனுமதி வேண்டும். இங்கேயே இருக்க விடுங்கள். உங்களை எதுவும் செய்ய மாட்டேன்’’

**வீட்டில் மீட்கப்பட்ட கைக்குண்டு**

இதேவேளை, அநுராதபுரம் வைத்தியசாலை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் தங்கியிருந்த வீட்டிலிருந்து கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் வசித்துவந்த கல்னேவ பகுதியிலுள வீடு சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இதன்போது பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், இந்த கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த வைத்தியரின் கையடக்கத் தொலைபேசியைக் கண்டுபிடிப்பதற்காக வீட்டைச் சோதனையிடும்போதே இது கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

**சந்தேகநபர் நீதிமன்றில் கூறிய விடயம்**

இதற்கிடையில் அநுராதபுரம் வைத்தியசாலையின் பெண் மருத்துவரை தகாத முறைக்குட்படுத்திய முன்னாள் இராணுவ வீரரை பொலிஸார் கடுமையாக தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பெண் மருத்துவரை தகாத முறைக்கு உட்படுத்திய சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட முன்னாள் படைவீரர் இந்த விடயத்தை நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

பொலிஸார் தம்மை கடுமையாகத் தாக்கியதாக அவர் நீதிமன்றில் குறிப்பிட்டுள்ளார். குறித்த சந்தேக நபரை பொலிஸார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியிருந்தனர்.

இதன்போது குறித்த சந்தேக நபர் நேராக நிற்க முடியாதிருந்த காரணத்தால் நீதவான் அவரை நேராக நிற்குமாறு பணித்துள்ளார்.

பொலிஸார் கடுமையாகத் தாக்கியதனால் தம்மால் நிமிர்ந்து நிற்க முடியவில்லையென சந்தேக நபர், நீதவானிடம் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபரை அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியிடம் முன்னிலைப்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேலும் சந்தேக நபரை நாளை (17) வரை தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்ய நீதவான் பொலிஸாருக்கு அனுமதி வழங்கியுள்ளார். சந்தேக நபர் தனது மார்பில் அம்மா என்று பச்சைகுத்தியிருப்பதாக பொலிஸ் கூறுகிறது. சிலகாலம் பிக்குவாகவும் இருந்துள்ளார்.

போதைப்பொருளுக்கு அடிமையாகி திருட்டு வேலைகளிலும் ஈடுபட்டு வந்துள்ளார் என்று பொலிஸ் கூறுகிறது.



வாரவெளியீடு
தமிழன்
THAMILAN WEEKLY
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/ thamilaneditor@gmail.com

ஞாயிற்றுக்கிழமை, மார்ச் 16, 2025

# தொடரும் துஷ்பிரயோகங்கள்!

பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்கள் வருடாவருடம் அதிகரித்துவரும் நிலைமை தொடர்கிறது. அதிகபட்சமாக பெண்களும் சிறுவர்களும் இவற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை புள்ளிவிபரங்கள் சொல்கின்றன.

2024ஆம் ஆண்டில் மட்டும் சிறுவர்கள் மீதான கடுமையான பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்கள் தொடர்பாக 321 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் கூற்றுப்படி, 2024 ஜனவரி முதலாம் திகதி முதல் டிசம்பர் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்கள் தொடர்பில் 580 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் காலப்பகுதியில், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு சிறுவர்கள் தொடர்பான 8,746 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பான முறைப்பாடுகளில் அதிகபட்சமாக 2,746 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 1,950 முறைப்பாடுகளும் சிறுவர்களை யாசகர்களாகப் பயன்படுத்தப்படுவது தொடர்பாக 229 முறைப்பாடுகளும் பெறப்பட்டுள்ளன.

பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக 42 முறைப்பாடுகளும் பாலியல் செயல்களுக்கு குழந்தைகளைப் பரிந்துரைப்பது தொடர்பாக 25 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த வருடத்தில் சிறுவர் திருமணங்கள் தொடர்பாக 14 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதுடன், நிர்வாணப் புகைப்படங்களை இணையத்தில் வெளியிடுவதாக அச்சுறுத்தப்பட்டதாக 151 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

2024ஆம் ஆண்டு தற்கொலை முயற்சிகள் தொடர்பான 18 முறைப்பாடுகளும் போதைப்பொருள் பாவனை தொடர்பான 120 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடத்தில் வயதுக்குட்பட்ட கர்ப்பம் தொடர்பான 53 முறைப்பாடுகளும் பிறப்புச் சான்றிதழ் இல்லாத சிறுவர்கள் தொடர்பில் 39 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது.

அதேபோல் போதைப்பொருள் பாவனைக்கும் மதுவுக்கும் அடிமையாகும் ஒரு மோசமான சமுதாயம் உருவாகி வருகையில், பெண்களுக்கு எதிரான கொடூரமான குற்றங்கள் பற்றிய செய்திகள் சமூக ஊடகங்களில் பரபரப்பு விடயமாக மாறி வருகின்றன.

பெண்களைப் போற்றி மதிக்கும் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டு இரண்டு நாட்கள் முடிவதற்கிடையில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலை பெண் வைத்தியரொருவர் முன்னாள் படைச் சிப்பாய் ஒருவரால் கத்திமுனையில் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை பற்றிய செய்தி அதிர்ச்சி தருவதாக வெளியாகியிருக்கின்றது.

பாலியல் குற்றங்களும் துஷ்பிரயோகங்களும் சமூகத்தில் தவிர்க்க முடியாத விவகாரமாகத் தொடர்ந்து இடம்பெற்று வந்தாலும் இந்தக் குற்றங்கள் எல்லா மட்டங்களிலும் இடம்பெற்று வருகின்றமை மறுக்கப்படக்கூடியதல்ல.

2007 நவம்பரில் நீர்கொழும்பு பொது வைத்தியசாலையில் 23 வயதுடைய ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றுகின்ற ஓர் இளம் பெண் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு, கழுத்து நெரிக்கப்பட்டு ஆறாவது மாடியிலிருந்து தள்ளி விழுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். ஏழு ஆண்டுகள் தாமதத்தின் பின்னர் 2014இல் அந்தக் குற்றத்தை இழைத்த மருத்துவ அதிகாரி பாலியல் வல்லுறவு மற்றும் கொலைக் குற்றங்களில் குற்றவாளியாகக் காணப்பட்டார். அவர் ஏழு வருடங்கள் சிறையிலிருந்த பின்னர் தற்போது பிணையில் வெளியில் இருக்கின்றார்.

அநுராதபுரத்தில் தற்போது பெண் மருத்துவ அதிகாரி கொடூரத்துக்கு உள்ளாக்கப்பட்ட செய்தி பரபரப்பாக வெளியானமையை அடுத்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பணியாற்றும் மருத்துவர்களின் பாதுகாப்புத் தொடர்பான நெருக்கடிகள், சிக்கல்கள் பற்றி பல்வேறு செய்திகள் சமூக ஊடகங்களில் வெளியாகி வருகின்றன.

பாலின அடிப்படையிலான வன்முறையின் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் காரணமாக பெண்களும் பெண்குழந்தைகளும் முழுமையான சுதந்திரம், வாய்ப்புகள் மற்றும் பாதுகாப்பை அனுபவிக்கவில்லை.

அவர்களின் வாழ்நாளில் எப்போதும் துணையுடன் இருக்கும் பெண்களில் 20 சதவீதம் பேர் நெருங்கிய துணையால் உடல் ரீதியான மற்றும்/அல்லது பாலியல் ரீதியான வன்முறையை எதிர்கொண்டுள்ளனர் என்றும் 25 சதவீதமான பெண்கள் 15 வயதுக்குப் பிறகு ஒரு துணை அல்லது துணை அல்லாதவர் மூலம் உடல் ரீதியான அல்லது பாலியல் ரீதியான வன்முறையை அனுபவித்துள்ளனர் என்றும் ஆய்வொன்று தெரிவிக்கின்றது.

18 சதவீதம் பேர் தங்கள் வாழ்நாளில் துணை ஒருவரால் பொருளாதாரத் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகியதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. துணை ஒருவரால் வன்முறையை அனுபவித்தவர்களில் 21 சதவீதப் பெண்கள் அதை யாரிடமும் வெளிப்படுத்தியதில்லை.

உயர் பணவீக்க விகிதங்கள் மற்றும் அதனால் ஏற்படும் பட்டினி, ஊட்டச்சத்து நெருக்கடி, வீடுகளில் ஏற்படும் செலவுப் போராட்டம், அதிகரித்து வரும் வறுமை நிலைகள், சமூக அமைதியின்மை, இனப்பெருக்க சுகாதாரம் மற்றும் பிற சேவைகள் உள்ளிட்ட சுகாதார உதவிகளின் குறைப்பு ஆகியவை பாலின அடிப்படையிலான வன்முறை மற்றும் அதன் விளைவாக ஏற்படும் பாதகமான தாக்கங்களுக்குப் பெண்கள் மற்றும் சிறுவர்களே அதிகளவு பாதிப்புக்குள்ளாக நேரிடும்.

இவ்வாறான பின்னணியின் கீழ் கிராம சேவையாளர்கள், தமக்குத் தேவையான பாதுகாப்பை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்குமாறு கோரி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தொழிற்சங்க நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனரென இலங்கை கிராம உத்தியோகத்தர் சங்கம் தெரிவித்துள்ளது.

தமது சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்களால் இந்தத் தொழில்சார் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் ஏனைய சங்கங்களின் பிரதிநிதிகளும் இதற்கு ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவதாகவும் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் நெவில் விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

கிராம உத்தியோகத்தர்களில் அறுபது சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் பெண்கள் எனவும் பெரும்பாலான கிராம உத்தியோகத்தர்களின் அலுவலகங்கள் தனிமைப்படுத்தப்பட்ட அல்லது மக்கள் நடமாட்டம் இல்லாத பிரதேசங்களில் அமைந்துள்ளன எனவும் அவர் கூறினார்.

தனிமைப்படுத்தப்பட்ட அலுவலகங்களில் பணிபுரியும் பெண் உத்தியோகத்தர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளனர் எனவும் நெவில் விஜேரத்ன குறிப்பிட்டுள்ளார்.

அரச மற்றும் பொது ஊழியர்களின் சேவை நேரப் பாதுகாப்புத் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டிய ஒரு தேவை எழுந்திருக்கின்றது. இந்த விடயங்களில் அரசு சிரத்தை எடுத்து நடவடிக்கை எடுக்கவேண்டிய நேரம் இது.

# பட்டலந்தவும் நீதிக்கான உரிமையும்



**மீநிலங்கோ தெய்வேந்திரன்**

ரணில் விக்கிரமசிங்கவின் அல்-ஜசீரா நேர்காணலின் பின்னர் 'பட்டலந்த' என்ற சொல் மீண்டும் பேசுபொருளாகியுள்ளது. குறித்த நேர்காணல் பல விடயங்களைச் சொன்னாலும் பட்டலந்த விவகாரம் தொடர்பான கேள்வியும் அதற்கான ரணில் விக்கிரமசிங்கவின் பதிலும் ஆழமான பார்வையை வேண்டிநிற்கின்றன. இது வெறுமனே பட்டலந்த பற்றியதல்ல. இது இலங்கையின் நீதி பற்றியது. மக்கள் அறியவேண்டிய உண்மைகள் பற்றியது.

1988-90 காலப்பகுதியில் ஜே.வி.பியின் ஆயுதக் கிளர்ச்சி மிகவும் வன்முறையான முறையில் அடக்கப்பட்டது. அப்போது ஏராளமான ஜே.வி.பியினர், அதன் ஆதரவாளர்கள் கொலையுண்டனர், இன்னும் பலர் மோசமான சித்திரவதைகளை அனுபவித்தனர். நாட்டின் பல பகுதிகளில் இவ்வாறான சித்திரவதை முகாம்கள் இருந்ததாக அறிக்கைகள் சுட்டுகின்றன. அவ்வாறான ஒரு முகாமே 'பட்டலந்த' முகாமாகும்.

1994ஆம் ஆண்டு, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இலங்கையின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன் மூலம் 17 ஆண்டுகால ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி முடிவுக்கு வந்தது. 1988-90 காலகட்டத்தில் நடந்த மனித உரிமை மீறல்கள், கொலைகள் மற்றும் காணாமல்போனவர்களுக்கு நீதி கோருவது அவரது முக்கிய தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாக இருந்தது. ஏனெனில், அரச பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள் முக்கியமான வாக்கு வங்கியாகவும் உருவெடுத்திருந்தனர். ஜனாதிபதி குமாரதுங்க பதவியேற்றவுடன், இந்தச் சம்பவங்களை விசாரிக்க செப்டெம்பர் 21, 1995 அன்று ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை நிறுவினார்.

'பட்டலந்த ஆணைக்குழு' என்று அழைக்கப்படும் இது, அரச உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் கீழிருந்த பட்டலந்த வீட்டுவசதித் திட்டத்தில் தனிநபர்கள் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டிருப்பது, சித்திரவதை செய்வது, படுகொலை செய்வது மற்றும் காணாமல் போவது ஆகியவற்றை விசாரிக்கும் பணியை மேற்கொண்டது. பொறுப்புக்கூற வேண்டியவர்களை அடையாளம் காண்பதும் தேவையான பரிந்துரைகளை வழங்குவதும் இதன் பணியாக இருந்தது. இந்த ஜனாதிபதி விசாரணை ஆணையத்தின் பதவிக்காலம் 12 தனித்தனி சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டது. கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் சாட்சியங்களைச் சேகரித்த பிறகு, ஆணையம் தனது அறிக்கையை மார்ச் 26, 1998 அன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் சமர்ப்பித்தது.

இந்த அறிக்கையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது பதவிக்காலம் முடியும்வரை பாராளுமன்றில் சமர்ப்பிக்கவுமில்லை; இந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவுமில்லை. இது தொடர்பாக அவருக்கு நெருக்கமானவர்களிடம் கேட்கப்பட்டபோது தனது தாய்க்கு ஐக்கிய தேசியக் கட்சி இழைத்த கொடுமையைப்போல (குடியுரிமைப் பறிப்பு) ஒன்றைத் தனது அரசியல் எதிரியான ரணில் விக்கிரமசிங்கவுக்குச் செய்ய சந்திரிகா விரும்பவில்லை. அதனால் கடைசிவரை அதைக் கிடப்பில் போட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இங்கு பல விடயங்களை நோக்குதல் வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் ஜே.வி.பி. தடைசெய்யப்பட்ட அமைப்பாகும். அதன் தடையை நீக்கியவர் சந்திரிகா. அதேவேளை, அவரது கணவரான விஜயகுமாரதுங்கவின் கொலையில் ஜே.வி.பியின் பங்கு குறித்த நியாயமான ஐயங்கள் இருந்தன என்பதையும் நோக்க வேண்டும். இந்தப் பின்புலத்திலேயே பட்டலந்த ஆணைக்குழுவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தொடர்பு என்ன என்பதை நோக்கவேண்டியுள்ளது.

அப்போது தொழிற்றுறை அமைச்சராக இருந்தவர் ரணில் விக்கிரமசிங்க. பட்டலந்த வீட்டுவசதித் திட்டம், தொழிற்றுறை அமைச்சின் கீழ் வந்தது. அமைச்சின் கீழ் வருகின்ற வீடுகளே சட்டவிரோத தடுப்புக்காவல்கள் மற்றும் சித்திரவதைகளுக்குப் பயன்படுத்தப்பட்டதாக அறிக்கை கூறப்படுகிறது. குறித்த திட்டத்திலுள்ள வீடுகள், குறிப்பாக A 2/2, A 2/1, A 2/3, A 1/7, B2, B1 மற்றும் B7 அலகுகள் விக்கிரமசிங்கவால் பயன்படுத்தப்பட்டதாக அறிக்கை வெளிப்படுத்தியது.

அப்போதைய பேலியகொட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டக்ளஸ் பீரிஸ் தலைமையிலான பொலிஸ்துறை அதிகாரிகள் குழுவுக்கும் வீட்டுவசதி அலகுகள் வழங்கப்பட்டதாகவும் ஆணைய அறிக்கை தெரிவிக்கிறது. கூடுதலாக, களனி நாசகார எதிர்ப்புப் பிரிவின் அதிகாரிகளுக்கு 13 வீடுகள் ஒதுக்கப்பட்டன. அந்த வீடுகளில் ஒன்று விக்கிரமசிங்கவின் அலுவலகமாகப் பயன்படுத்தப்பட்டதாகவும் இந்த வீடுகள் ஒதுக்கீடு அவரது வழிகாட்டுதலின்கீழ் மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறுகிறது. மேலும், இவ்வீடுகளில் நடைபெற்ற கூட்டங்களுக்கு விக்கிரமசிங்க நேரடியாகக் வந்து தலைமையேற்றதாக பலர் சாட்சியமளித்தனர்.

குறிப்பாக, விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட பணியாள் மிகவும் முக்கியமான சாட்சியமொன்றை அளித்தார். அதில் பட்டலந்தவில் நிகழ்ந்த கொடுமைகளை விக்கிரமசிங்க நன்கு அறிந்திருந்தாரென்றும் பல அவரது வழிகாட்டலிலேயே நடத்தப்பட்டதாகவும் சொன்னார். சாட்சியளித்த சில நாட்களில் 'வழமைபோல' அவர் தற்கொலை செய்துகொண்டார்.

ஆணைக்குழு பல முக்கிய பரிந்துரைகளை வழங்கியது. அவற்றில் மிக முக்கியமானது கடுமையான மனித உரிமை மீறல்களில் குற்றவாளிகளாகக் கண்டறியப்பட்ட பொதுப் பிரதிநிதிகள் மற்றும் பொலிஸ் துறை அதிகாரிகளின் குடியுரிமைகளை இரத்துச்செய்யும் அதிகாரத்தை உயர் நீதிமன்றத்துக்கு வழங்குவதாகும். நிர்வாகக் கிளையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நபர் (அரசாங்க அமைச்சர்கள்) எந்த விளைவுகளையும் எதிர்கொண்டு அச்சமின்றி மீண்டும் மீண்டும் சட்டத்தை மீறியதாக ஆணையத்தின் அறிக்கை எடுத்துக்காட்டியது.

> **இப்போது கிளம்பியுள்ள 'பட்டலந்த' பூதத்தை எவ்வாறு கையாளப்போகிறார்களென்பது முக்கியமானது. ஒருபுறம் இதை புறக்கணித்தால், ஜே.வி.பிக்காக உயிர்நீத்தோருக்கே அரசாங்கம் துரோகம் செய்கிறது என்ற பழிச்சொல்லைக் கேட்க நேரும். மறுபுறம், இக்காலப்பகுதியில் அரச பயங்கரவாதத்தை மட்டுமல்ல, ஜே.வி.பியின் பயங்கரவாதத்தையும் தீர விசாரிக்க வேண்டுமென்ற கோரிக்கைகளும் எழுகின்றன. எனவே, இதை முன்னெடுத்த ஜே.வி.பியின் கொலைகளையும் கொடுஞ்செயல்களையும் பொதுவெளிக்குக் கொண்டுவரும். இது இப்போது ஆட்சியிலுள்ள தேசிய மக்கள் சக்தி விரும்புகிற செயலல்ல.**

இனி சமகாலத்துக்கு வருவோம். இப்போது குறித்த அறிக்கையை பாராளுமன்றில் சமர்ப்பிக்கச் சொல்லி பலர் கோரிக்கை வைத்துள்ளார்கள். விரைவில் பாராளுமன்றில் சமர்ப்பிப்பதாக அரசாங்கம் உறுதியளித்துள்ளது. இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பாதிக்கப்பட்டவர்கள் ஜே.வி.பியினரும் அவர்தம் ஆதரவாளர்களும். இன்று ஜே.வி.பியின் தலைவரே நாட்டின் ஜனாதிபதி. எனவே, அவர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே இலங்கையரின் எதிர்பார்ப்பு. நீதி, உண்மை, நியாயம் குறித்த வினாக்களை அரசாங்கம் நேரடியாக எதிர்நோக்குகிற தருணம் இது.

தமிழர்கள் குறித்தோ முஸ்லிம்கள் குறித்தோ அவர்களுக்கு நிகழ்ந்த கொடுமைகள், நீதிக்கான கோரிக்கைகள், உண்மைக்கான அவா குறித்தெல்லாம் அரசாங்கத்திடம் கேள்வி எழுப்புகின்றபோதெல்லாம் "இப்போது நாட்டுக்கு முக்கியமானது பொருளாதார அபிவிருத்தி, ஏனைய விடயங்களைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்பதே. தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்ததிலிருந்து அவர்களது ஒரே பதிலாக இருந்துவந்துள்ளது.

இப்போது கிளம்பியுள்ள 'பட்டலந்த' பூதத்தை எவ்வாறு கையாளப்போகிறார்களென்பது முக்கியமானது. ஒருபுறம் இதை புறக்கணித்தால், ஜே.வி.பிக்காக உயிர்நீத்தோருக்கே அரசாங்கம் துரோகம் செய்கிறது என்ற பழிச்சொல்லைக் கேட்க நேரும். மறுபுறம், இக்காலப்பகுதியில் அரச பயங்கரவாதத்தை மட்டுமல்ல, ஜே.வி.பியின் பயங்கரவாதத்தையும் தீர விசாரிக்கவேண்டுமென்ற கோரிக்கைகளும் எழுகின்றன. எனவே, இதை முன்னெடுத்த ஜே.வி.பியின் கொலைகளையும் கொடுஞ்செயல்களையும் பொதுவெளிக்குக் கொண்டுவரும். இது இப்போது ஆட்சியிலுள்ள தேசிய மக்கள் சக்தி விரும்புகிற செயலல்ல.

பட்டலந்த விடயம் இலங்கையில் நீதி குறித்து தொடர்ச்சியாக எழுப்பப்பட்டு வரும் வினாக்களை மீண்டும் வலியுறுத்துகிறது. இலங்கையில் நீதிக்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு. பொதுவாக சிறுபான்மையினர் மீதான அரச ஒடுக்குமுறையும் வன்முறையுமே கண்டும் காணாமல் போயுள்ளது. சட்டம், நிர்வாகம், நீதித்துறை ஆகியன சிறுபான்மையினருக்கு எதிராக மட்டுமே செயற்படுகின்றன என்பது சிறுபான்மையினரின் பொதுவான குற்றச்சாட்டு. இதில் உண்மையுண்டு. ஆனால், பட்டலந்த அறிக்கை இலங்கையின் நீதிக்கான அவா என்பது அனைவருக்கானது. அரசின் வன்முறைகள் கண்டும் காணாமல் விடப்படுகின்றன அல்லது புறக்கணிக்கப்படுகின்றன என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

நீதிக்கான எத்தனையே ஜனாதிபதி ஆணைக்குழுக்களை இலங்கை கண்டுள்ளது. பட்டலந்த அதில் ஒன்று. ஆனால், இன்றைய சூழலில் அதன் அரசியல் முக்கியத்துவம் பெரிது. இது அரசாங்கத்தின் வலிமையையும் துணிந்து முடிவெடுக்கும் திறனையும் கேள்விக்குட்படுத்துகிறது. அதேவேளை, சிறுபான்மைச் சமூகங்களின் சவால்களையும் காட்டி நிற்கின்றது.

நீதியைப் பின்தொடர்வது பல வடிவங்களை எடுக்கலாம். ஆனால், உண்மையைச் சொல்வது அவசியமானது. மோதல்களிலிருந்து மீள்கிற சமூகங்களில் அமைதி நிலவ வாய்ப்புக் கிடைக்க வேண்டுமென்றால், இந்த அடிப்படை உரிமையை நிலைநிறுத்துவது எப்போதும் இல்லாத அளவுக்கு அவசியம்.

நீண்டகால அமைதி மற்றும் சமூக மாற்றத்தை அடைய உண்மையைச் சொல்வது அவசியம். வெவ்வேறு குழுக்களின் அனுபவங்களை வெளிப்படுத்தி சரிபார்ப்பதன் மூலம் எதிரெதிர்த் தரப்புகளுக்கிடையிலான பதற்றங்களைக் குறைக்க இது உதவுகிறது. கண்ணியமான மற்றும் எல்லோரும் உள்ளடக்கிய எதிர்காலத்தை உருவாக்க, வன்முறையான கடந்த காலத்தின் புறநிலை கணக்கை நிறுவுவதன் மூலம் பிளவுபடுத்தும் கதைகளை முறியடிப்பது அவசியம்.

மோதலுக்குப் பிந்தைய பல சூழல்களில், மோதலின்போது என்ன நடந்தது என்பதற்கான நம்பகமான கணக்கை நிறுவுவதற்கான முயற்சிகள் தவிர்க்கவியலாதவை. பல சமயங்களில் உண்மையையும் நீதியையும் கோரும் குரல்கள் பல ஆண்டுகளாக மௌனமாக்கப்பட்டுள்ளன அல்லது புறக்கணிக்கப்பட்டுள்ளன. ஏனெனில், பாதிக்கப்பட்டவர்கள் இத்தகைய உண்மையைத் தேடும் செயல்முறைகளின் மையத்தில் உள்ளனர்.

உண்மையை அறியும் முயற்சிகளில் பெரும்பாலும் விதிக்கப்படும் யதார்த்தமற்ற எதிர்பார்ப்புகள் ஒரு முக்கியமான பிரச்சினையாக அடையாளம் காணப்படுகிறது. பாதிக்கப்பட்டவர்களிடையே ஓர் உண்மையை அறியும் முயற்சிகள் அவர்களின் அனைத்து அவசர கோரிக்கைகளையும் தீர்க்குமென்ற எதிர்பார்ப்புகளை எழுப்புவது விரக்தியையும் அவநம்பிக்கையையும் உருவாக்கி, ஏற்கனவே சிக்கலான சூழ்நிலையை மேலும் சிக்கலாக்கும். இதேபோல், அத்தகைய செயன்முறையானது ஒரு நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்க முடியுமென்ற எந்தவொரு கருத்தும் பொதுமக்களை ஏமாற்றத்துக்கு இட்டுச்செல்கிறது. உண்மையை அறிவது முக்கியமான அதேவேளை, அதற்கான முயற்சிகள் குறித்து பொதுமக்களிடையே யதார்த்தமான எதிர்பார்ப்புகளை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட வேண்டியது.

உண்மையைத் தேடும் முயற்சிகள் ஒருங்கிணைந்த, ஒரு முறை தீர்வுகளை விட ஒரு பெரிய இடைக்கால நீதி செயல்முறையின் ஒரு பகுதியாகும். பாதிக்கப்பட்டவர்களின் உண்மைக்கான உரிமையைப் பாதுகாப்பதற்கான ஒரே வழிமுறையாக உண்மையைக் கண்டறிதலில் அனைத்துத் தரப்பினரின் பங்களிப்பும் அவசியமாகிறது. அதேவேளை, இலங்கை அனுபவம் உண்மை அறிதல் முயற்சிகள், உண்மையை நிறுவுவதை விட, சமரசத்தை ஓர் இலக்காக மிக முக்கியமாக அடையாளம் காட்டுகின்றன.

மேலும், சமூகத்தை சமரசம் செய்வது அல்லது சில சந்தர்ப்பங்களில் தனிப்பட்ட பாதிக்கப்பட்டவர்களையும் குற்றவாளிகளையும் சமரசம் செய்வது அவர்களின் முதன்மையான பணி என்ற எதிர்பார்ப்புடன் மேலும் மேலும் ஆணைக்குழுக்கள் உருவாக்கப்படுகின்றன.

சமரசம் செய்யும் முயற்சி பெரும்பாலும் அதன் வரம்புகளை மீறுகிறது. மேலும், இவ்வாணைக்குழுக்கள் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளைப் புறக்கணிக்கக்கூடிய பகுதிக்கு இட்டுச்செல்கிறது. மன்னிப்பு மற்றும் பொறுப்புக்கூறலுக்கான பிற தடைகள் போன்ற வழிமுறைகள் மூலம் எதிர்கால நீதி நடவடிக்கைகளிலிருந்து குற்றவாளிகளைப் பாதுகாக்கக்கூடிய ஓர் ஆணைக்குழுவை அரசும் சர்வதேச சமூகமும் உருவாக்கும் அபாயமும் இல்லாமல் இல்லை.

பட்டலந்த அறிக்கையின் எதிர்காலம் இலங்கையில் உண்மையை அறிவதற்கான இடையறாத போராட்டத்தின் பகுதி என்பதை நினைவிருத்துவது நல்லது.

# ★ பட்டலந்த அறிக்கையை சபையில் முன்வைத்த அரசாங்கம்

# ★ அறிக்கையை நிராகரிக்கும் ரணில் விக்கிரமசிங்க

**சண்டே சாம்பார்**

சிவா இராமசாமி
mesivaraj@yahoo.com

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சியை ஏற்ற பிறகு பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகிறது.

நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதில் தற்போதைய ஆட்சி சவால்களை எதிர்நோக்கி வருகிறது. ஏற்கனவே வழக்கு விசாரணையொன்றுக்காக முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தேடப்பட்டு வருகிறார். அவர் முன்னாள் அமைச்சரொருவரின் உதவியுடன் தலைமறைவாக உள்ளார். அந்த முன்னாள் அமைச்சர் தற்போதைய ஆட்சியாளர்களுக்கு மிகவும் நெருக்கமானவரென்பதால் தேசபந்து மறைமுகமாக இப்போதைய ஆட்சியாளர்களால் பாதுகாக்கப்படுகிறாரென்ற விமர்சனமும் உள்ளது.

எவ்வாறாயினும், நாளை திங்கட்கிழமை தேசபந்து தொடர்பில் நீதிமன்றத்தில் முக்கிய வழக்குள்ளது. அவருக்கு முன்பிணை வழங்குவதா, இல்லையா என்பதை நீதிமன்றம் தீர்மானிக்கவுள்ளது. அதேசமயம், நீதிமன்றத் தீர்ப்புக்கு முன்னதாக தேசபந்து சரணடையலாமென்ற தகவலும் நிலவுகிறது. எவ்வாறாயினும், தேசபந்து தலைமறைவு விடயத்தில் அரசு மிகவும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை பகிரங்கமாகவே தெரிகிறது.

அதுமட்டுமல்ல, நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்திருப்பதும் பாதுகாப்புத்துறை அரசின் கட்டுப்பாட்டை மீறி செயற்படுகிறதா என்ற சந்தேகமும் எழ ஆரம்பித்துள்ளது. அதேபோல் தொழிற்சங்க நடவடிக்கைகள் அரசுக்கு எதிராக இடம்பெற ஆரம்பித் துள்ளன. கடந்த வாரம் தமிழ்ப் பெண் மருத்துவர் அநுராதபுரத்தில் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவத்துக்கெதிராக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வேலைநிறுத்தப் போராட்டமொன்றை ஆரம்பித்தமையும் அரசுக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. அரச எதிர்ப்புச் செயற்பாடுகள் ஆரம்பித்துள்ளமையால் அவற்றைக் கட்டுப்படுத்துவது குறித்து அரச மேல்மட்டத்தில் இப்போது ஆராயப்பட்டு வருகிறது.

## பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையும் சர்ச்சையும்

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் அதன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறும் பல்வேறு தரப்பினரும் அரசாங்கத்திடம் விடுத்த கோரிக்கையையடுத்து அமைச்சரும் சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்க அதனை வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் அல்-ஜசீரா தொலைக்காட்சியில் ஒளிபரப்பான 'Head to Head' நிகழ்ச்சியில் தெரிவித்த கருத்துகளையடுத்தே 88/90 காலப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட குறித்த ஆணைக்குழுவின் அறிக்கை மீண்டும் பேசுபொருளாக மாறியது.

## அறிக்கையை சமர்ப்பித்த அமைச்சர் பிமல்

25 வருடங்களாக ஜனாதிபதி செயலகத்தின் இருண்ட களஞ்சியத்தில் மறைத்துவைக்கப் பட்டிருந்த பட்டலந்த அறிக்கை இன்று சூரிய ஒளியைக் காண்கிறது. இந்த அறிக்கை யானது தாய்நாட்டின் உரிமைகளைப் பறித்தெடுத்தவர்களின் கொடூரத்தன்மை தொடர்பான அறிக்கை மாத்திரமன்றி, தமது அரசியல் நோக்கத்துக்காக நாடொன்று பல யுகங்களுக்கு முன்னர் இருந்து எவ்வாறு அழிக்கப்பட்டு வந்ததென்பது தொடர்பான சாட்சியாகவும் இருக்குமென சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

அத்துடன், பட்டலந்த அறிக்கை தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவை யால் கொள்கை ரீதியில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி சட்ட மா அதிபருக்கு அனுப்பிவைக்கவும் இந்த அறிக்கை தொடர்பில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பது தொடர்பாக ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஜனாதிபதியால் விசேட குழுவொன்றை அமைப்பதற்கும் பொருத்தமான சந்தர்ப்பத்தில் இது தொடர்பில் பாராளுமன்றத்தில் இரண்டு நாட்கள் விவாதத்தை நடத்துவதற்கும் நாம் எதிர்பார்க்கின்றோமெனவும் கூறினார்.

பட்டலந்த பகுதியில் சட்டவிரோத சித்திரவதை முகாம் நடத்திச் செல்லப் பட்டமை தொடர்பான பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் குறிப்பிடத்தக்க கலந்துரையாடலை உருவாக்க பட்டலந்த வீட்டுத் திட்டத்தில் சட்டவிரோத தடுப்பு நிலையம் மற்றும் சித்திரவதை முகாமை நடத்திச்சென்றமை தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவையின் நிலைப்பாட்டை இங்கு அறிவிக்கவேண்டியுள்ளது.

1988ஆம் ஆண்டில் 6/5 பெரும்பான்மை யுடன் ஆட்சியமைத்த ஐக்கிய தேசியக் கட்சி, சர்வஜன வாக்கெடுப்பின்றி நிறைவேற்று ஜனாதிபதி முறைமையைக் கொண்டுவந்தது. ஆட்சிக்குவந்த 1977ஆம் ஆண்டில் இலங்கையில் தமிழ் மக்கள் மற்றும் எதிரான அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களுக்கு எதிராக பெரும் வன்முறைகளைக் கட்டவிழ்த்ததுடன், ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் ஆகியவேளையில், 1978ஆம் ஆண்டில் பயங்கரவாத அடக்குமுறைச் சட்டம் போன்ற ஒடுக்குமுறைச் சட்டத்தை கொண்டுவந்து ஜனநாயக விரோதமான சட்டவிரோதச் செயற்பாடுகளை ஆரம்பித்தது. 1980ஆம் ஆண்டில் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்ட இலட்சக்கணக்கான அரச ஊழியர்களின் தொழில்களை இல்லாமல் செய்தது.

அத்துடன், 1981ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற அபிவிருத்திச் சபைத் தேர்தலை பச்சை பச்சையாக கொள்ளைடித்தது. அதன் பெறுபேறாக யாழ்ப்பாணம் நூலகத்தையும் தீ வைத்து அழித்தது.

இதேவேளை, உரிய காலத்தில் நடத்த வேண்டிய பாராளுமன்றத் தேர்தலையும் நடத்தாது, சர்வஜன வாக்கெடுப்பென்ற பெயரில் இலங்கை வரலாற்றில் ஊழல்மிக்க தேர்தலாக அது இருந்ததுடன், சர்வஜன வாக்குகளையும் கொள்ளையடித்து அதனூடாக பாராளுமன்ற அதிகாரத்தை மேலும் 6 வருடங்களுக்கு சட்டவிரோதமாக நீடித்துக்கொண்டது.

அதேபோன்று நாட்டின் ஜனநாயக ரீதியான தொழிற்சங்கங்கள், ஊடகவியலாளர்கள், மாணவர் சங்கங்கள், மதத் தலைவர்களை ஒடுக்கி 1983இல் கறுப்பு ஜூலையில் தமிழ் மக்களுக்கு எதிராக இன அழிப்பு அப்போதிருந்த அரச தலைவர்களின் வழிநடத்தலிலேயே ஆரம்பிக்கப்பட்டதுடன், அது மூன்று தசாப்த சிவில் யுத்தத்துக்குக் கொண்டுசென்றது.

அப்போதிருந்த ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்களாலேயே முன்னெடுக்கப்பட்ட கறுப்பு ஜூலையைப் பயன்படுத்தி மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட இடதுசாரிக் கட்சிகள் சிலவற்றை தடைசெய்து அவற்றின் உரிமைகளை மீறியும் சர்வஜன வாக்குகளைக் கொள்ளையடித்து மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் ரோஹன விஜேவீரவால் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவையும் தள்ளுபடி செய்தும் 1983இல் ஆரம்பிக்கப்பட்ட சட்டவிரோத, ஜனநாயக விரோத ஒடுக்குமுறை ஆட்சி மற்றும் அரச பயங்கரவாதத்தை ஒரே ஆட்சி முறையாக மாற்றி கொலைகார சர்வாதிகார ஆட்சியாக செயற்பட்டு எந்தளவுக்கு திரிபுபடுத்தல்களை மேற்கொண்டு அந்த வரலாறுகளை மாற்றி எழுத முயற்சித்தாலும் மக்களே தமது வரலாற்றை எழுதி ஆரம்பித்த யுகம் கடந்த செப்டெம்பர் 21ஆம் திகதிக்குப் பின்னர் ஆரம்பமாகியதென்பது உங்களுக்குத் தெரியும்

1987 - 1990 சிவில் யுத்த காலத்தில் அரச தலையீட்டில் செய்யப்பட்ட குற்றங்களில் ஒன்றான பட்டலந்தவில் நடத்திச்செல்லப்பட்ட பெரியளவிலான கொலை முகாம் தொடர்பாக முன்னெடுக்கப்பபட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் கவனம் ஏற்பட்டுள்ளது.

1977 முதல் 1994 வரையில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைத் தோற்கடித்து 1994இல் இந்த அரசாங்கத்தைத் தோற்கடித்து மீண்டும் ஜனநாயகத்தை உருவாக்குவதற்காக புதிய அரசாங்கம் உருவானது. இருண்ட யுகமாக இருந்த 17 வருடங்களில் அரச பயங்கரவாதத்தால் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களுக்கு நீதியை நிலைநாட்ட எதிர்பார்க்கப்பட்டது.

சூரியகந்த மனிதப் புதைகுழி மற்றும் பட்டலந்த சித்திரவதை முகாம் தொடர்பில் அப்போதிருந்த தலைவர்களால் அவ்வவிடத்துக்குச்சென்று ஆராய்ந்தபோது நீதி நிலைநாட்டப்படுமென்று மக்கள் எதிர்பார்த்தனர்.

இதன்படி 1995 செப்டெம்பரில் பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட சட்டவிரோத சித்திரவதை முகாம் தொடர்பில் விசாரணை ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. இதன் இறுதி அறிக்கை 1988 மே 21ஆம் திகதி அந்த ஆணைக்குழுவின் செயலாளர் ஜீ.கே.ஜீ.பெரேரா என்பவரால் அப்போதைய ஜனாதிபதி செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் கடிதமொன்று உறுதிப்படுத்துகின்றது.


இந்த அறிக்கை ஆயிரக்கணக்கான பக்கங்களுடன் சாட்சி பதிவுகளைக் கொண்டதாக உள்ளது. இங்கு சித்திரவதைக்கு உள்ளானவர்கள் தாம் சாட்சியமளிக்கும்போது சித்திரவதையுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதிகாரமிக்க பதவிகளில் இருந்தபோதும் சாட்சியாளர்கள் உயிரச்சுறுத்தலுக்கு மத்தியிலும் அங்கு வந்து சாட்சியமளித்துள்ளனர்.

மனோராணி சரவணமுத்து போன்ற ஆயிரக்கணக்கான தாய்மார்களும் தந்தைமார்களும் பிள்ளைகளும் காதலன் - காதலிகளும் அந்த ஆணைக்குழுவின் முன்னால் மயங்கி விழுந்து சாட்சியமளித்து தமது அன்பானவர்களுக்கு நீதியை எதிர்பார்த்தனர்.

இதன்படி அதன் இறுதி அறிக்கை 1998 மே 22ஆம் திகதிக்கு முன்னர் அப்போதிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கையளித்திருக்க வேண்டும். ஆனால், தேசிய ஆவண காப்பகத் திணைக்களத்துக்குப் பிரதி அனுப்பிவைக்கப்பட்டுள்ள நிலையில், இதன் பிரதி சட்ட மா அதிபருக்கு அனுப்பி வைக்காமைக்குக் காரணம் என்ன என்பது தெரியவில்லை.

அத்துடன், 2000ஆம் ஆண்டு மார்ச் 16ஆம் திகதி அரச அச்சக திணைக்களத்துக்கு அறிவித்தலை விடுத்துள்ள அப்போதைய ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர், குறித்த அறிக்கையின் சிங்கள மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பை அச்சிடுமாறும் அதன்படி 500 சிங்களப் பிரதிகளையும் 250 தமிழ்ப் பிரதிகளையும் 2020 மார்ச் 27ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் கூறப்பட்டுள்ளது.

ஆனால் அவற்றில் எதுவும் சட்ட மா அதிபருக்கு அனுப்பிவைக்கப்படாமை ஆச்சரியமாகவுள்ளது. இதன்படி அந்த அறிக்கையைக் கோரியவர்களே உண்மையான குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கவோ அதன் பரிந்துரைகளைச் செயற்படுத்தவோ நடவடிக்கை எடுக்காது அதனைத் தேர்தல் காலத்தில் அரசியல் பந்தாகப் பயன்படுத்தியுள்ளனரென்பதே தெளிவாகின்றது. அதேபோன்று அல்-ஜசீராவில் கூறப்படுவதைப்போன்று அது பாராளுமன்றத்திலேயும் முன்வைக்கப்படவில்லை.




1990இலிருந்து 35 வருடங்களும் ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டு 30 வருடங்களும் ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாகி 25 வருடங்களுமாகும் நிலையில், எமது கட்சி மற்றும் அமைச்சரவையால் இந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டிய பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. 25 வருடங்களாக ஜனாதிபதி செயலகத்தின் இருண்ட களஞ்சியத்தில் மறைத்துவைக்கப்பட்டிருந்த அறிக்கை இன்று சூரிய ஒளியைக் காண்கிறது.

இந்த அறிக்கையானது தாய்நாட்டின் உரிமைகளைப் பறித்தெடுத்தவர்களின் கொடூரத்தன்மை தொடர்பான அறிக்கை மாத்திரமன்றி, தமது அரசியல் நோக்கத்துக்காக நாடொன்று பல யுகங்களுக்கு முன்னர் இருந்து எவ்வாறு அழிக்கப்பட்டு வந்தது என்பது தொடர்பிலும் அந்த அழிவுகளை வெளிப்படுத்துவதற்காக ஜனநாயக ரீதியில் கிடைத்த மக்கள் ஆணையை தமது வகுப்புத் தோழர்களுக்காக பயன்படுத்தும் உயிராந்த சாட்சியாகவும் இருக்கும்.

அதேபோன்று 25 வருடங்களாக சூரிய ஒளி படாதவாறு களஞ்சியத்தில் இருந்த அறிக்கைக்கு நீதி, நியாய ஒளி கிடைப்பதனூடாக அறிக்கையின் பரிந்துரைகளை நியாயமாக எவ்வாறு செயற்படுத்துவது என்பது தொடர்பாக எதிர்கால சந்ததிக்கு சாட்சியாகவும் இருக்கும்.

1989இல் ரோஹண விஜேவீர அடங்கலாக ஆயிரக்கணக்கானவர்கள் கொலைசெய்யப்பட்ட பின்னர் எனது மனதிலும் இதயத்திலும் பதிவாகிய பெரிய சுமையொன்று உள்ளது. அது என்னிடம் மாத்திரமல்ல, இலட்சக்கணக்கான எமது கட்சி உறுப்பினர்களின் மனங்களிலும் சரியான பக்கத்தில் இருக்கும் இலட்சக்கணக்கான இலங்கையர்களின் மனங்களிலும் பதிந்த சுமையாக இருக்கும். அந்தச் சுமையில் ஒரு பகுதியை 2024 செப்டெம்பர் 21ஆம் திகதி இறக்கி வைத்திருந்தாலும் இவர்களுக்கான நீதி கிடைப்பதனூடாக அதனை முழுமையாக இறக்கி வைக்க முடியும்.

பட்டலந்த அறிக்கை தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவையால் கொள்கை ரீதியில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி சட்ட மா அதிபருக்கு அனுப்பிவைக்கவும் இந்த அறிக்கை தொடர்பில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பது தொடர்பாக ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஜனாதிபதியால் விசேட குழுவொன்றை அமைப்பதற்கும் பொருத்தமான சந்தர்ப்பத்தில் இது தொடர்பில் பாராளுமன்றத்தில் இரண்டு நாட்கள் விவாதத்தை நடத்துவதற்கும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

அத்துடன், இந்த பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதுடன், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்கள் வாசிப்பதற்காக அதனை அச்சிடுமாறும் நான் சபாநாயகரைக் கேட்டுக்கொள்கின்றேன்.

அத்துடன், ஆணைக்குழு தொடர்பாக சாட்சியங்களுடனான 28ஆவது தொகுதியை இந்த பாராளுமன்றத்தில் முன்வைக்க எதிர்பார்க்கின்றோம் என்றார் அமைச்சர் பிமல்.

## பட்டலந்த அறிக்கை என்றால் என்ன?

ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட ஆட்சியை முடிவுக்குக்கொண்டுவந்து சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 1994ஆம் ஆண்டு ஜனாதிபதியாக பதவியேற்றார்.

88/90 காலப்பகுதியில் இடம்பெற்ற கொலைகள் மற்றும் காணாமலாக்கப்பட்டமை தொடர்பில் நியாயத்தை நிலைநாட்டுவதாக அவர் தேர்தல் மேடைகளில் வாக்குறுதி யளித்தார்.

1994ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 1995 செப்டெம்பர் 21ஆம் திகதி பிறப்பித்த உத்தரவுக்கமைய ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

இந்த ஆணைக்குழுவே 'பட்டலந்த விசாரணை ஆணைக்குழு' எனப்படுகிறது.

அரச உரக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான பியகம பட்டலந்த வீடமைப்புத் திட்டத்திலுள்ள வீடுகளுக்குள் சட்டவிரோதமான முறையில் இளைஞர்களை தடுத்துவைத்து சித்திரவதைக்குட்படுத்தி கொலை செய்தமை அல்லது காணாமலாக் கியமை தொடர்பில் விசாரணை நடத்தி பொறுப்புக்கூற வேண்டியவர்களை அடையாளம் கண்டு பரிந்துரை செய்வதே இந்த ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பாகும்.

அப்போதைய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி டி.ஜயவிக்கிரம தலைமையில் நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவின் உறுப்பினராக மேல் நீதிமன்ற நீதிபதி என்.ஈ.திசாநாயக்க செயற்பட்டார்.

இந்த விசாரணைகுழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக பொலிஸ் அதிகாரிகள் குழு நியமிக்கப்பட்டதுடன், சட்ட மா அதிபர் திணைக்களம் சாட்சிகளை வழிநடத்தியது.

தற்போதைய உயர் நீதிமன்ற நீதியரசரும் அப்போதைய அரச தரப்பு சட்டத்தரணியுமான யசந்த கோதாகொட மற்றும் தற்போதைய ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன ஆகியோரை சட்ட மா அதிபர் திணைக்களம் இதற்காக நியமித்திருந்தது.

ஆணைக்குழுவின் காலம் 12 சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டதுடன், 1998 மார்ச் 26ஆம் திகதி ஆணைக்குழுவின் அறிக்கை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் கையளிக்கப்பட்டது.

## பட்டலந்த ஆணைக்குழு மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கிடையிலான தொடர்பு என்ன?

குறித்த காலப்பகுதியில் ரணில் விக்கிரமசிங்க கைத்தொழில் அமைச்சராக பதவி வகித்தார்.

(தொடர்ச்சி 06ஆம் பக்கம்)



# சாம்பார் தொடர்ச்சி

பட்டலந்த வீடமைப்புத்தொகுதி அந்தச் சந்தர்ப்பத்தில் கைத்தொழில் அமைச்சுக்கு சொந்தமாகவிருந்தது.

ஆணைக்குழுவில் வெளிக்கொணரப்பட்ட சாட்சியங்கள் மூலம் A2/2, A2/1, A2/3, A1/7, B2, B1 , B7 ஆகிய வீடுகளை ரணில் விக்கிரமசிங்கவே பயன்படுத்தியிருந்தார்.

பேலியகொடை பொலிஸ் நிலையத்தின் அப்போதைய பொறுப்பதிகாரி டக்ளஸ் பீரிஸ் உள்ளிட்ட பொலிஸ் குழுவினருக்கும் இந்த வீட்டுத்திட்டத்தின் வீடுகள் வழங்கப் பட்டிருந்தமையும் ஆணைக்குழுவின் அறிக்கையில் வெளிக்கொணரப்பட்டது.

களனி நாசகார செயல் ஒழிப்புப்பிரிவு அதிகாரிகளுக்கும் இங்கு 13 வீடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

இதிலுள்ள ஒரு வீடு ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகமாக பயன்படுத்தப்பட்டிருந்ததாகவும் பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏனைய வீடுகளை வழங்கும்போது ரணில் விக்கிரமசிங்கவின் பரிந்துரைகள் மற்றும் உத்தரவுகள் நடைமுறைப் படுத்தப்பட்டமையும் அறிக்கையில் வெளியானது.

பட்டலந்த ஆணைக்குழுவுக்கு ரணில் விக்கிரமசிங்கவை அழைத்து விசாரணை நடத்தவும் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருந்தது.

சுமார் 3 வருடங்களாக சாட்சியங்களை சேகரித்த பட்டலந்த ஆணைக்குழு இறுதி அறிக்கையில் சில பரிந்துரைகளை முன்வைத்தது.

இந்த வதை முகாமுடன் தொடர்புடைய மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் மனித உரிமைகளைப் பாரதூரமான முறையில் மீறியுள்ளதால் அவர்களது பிரஜாவுரிமையைப் பறிப்பதற்கு தேவையான மேலதிக அதிகாரத்தை உயர் நீதிமன்றத்துக்கு வழங்குமாறு ஆணைக்குழு முக்கிய பரிந்துரையை முன்வைத்தது.

நிறைவேற்றதிகாரத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தியவர் தண்டனையை அனுபவிக்க நேரிடுமென்ற அச்சம் இல்லாததால் மீண்டும் மீண்டும் சட்டத்தை மீறியுள்ளதாகவும் ஆணைக்குழுவின் பரிந்துரையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

## பட்டலந்த ஆணைக்குழு அறிக்கைக்கு என்ன நடந்தது?

அறிக்கை அப்போதைய ஜனாதிபதி யிடம் கையளிக்கப்பட்டாலும் அதிலிருந்த பரிந்துரைகள் எவையும் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

தேர்தல் மேடைகளில் பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை ஒரு தலைப்பாக மாறினாலும் நீதியை நிலைநாட்டுவதற்காக அது முன்வைக்கப்படவில்லை.

பி.பி.சி. செய்தியாளர் பிரான்சிஸ் ஹெரிசன் அல்-ஜசீரா நிகழ்ச்சியின்போது இந்த அறிக்கையை காண்பித்து ரணில் விக்கிரமசிங்கவுக்கு சவால் விடுத்தார்.

அரசாங்கத்தின் உத்தரவுக்கமைய இந்த அறிக்கை அச்சிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த பின்னணியிலேயே அமைச்சர் பிமல் இதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## பட்டலந்த அறிக்கையை நிராகரித்துள்ள ரணில்

ரணிலைத் தாக்கப் பயன்படுத்தப்பட்ட பட்டலந்த அறிக்கை மீண்டும் ஓர் அவதூறாக மாறி அரசாங்கத்தை நோக்கி நகர்ந்து வருவதாக அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவிக்கத் தொடங்கியுள்ளனர்.

பிளவர் வீதியிலுள்ள புதிய ஜனநாயக முன்னணியின் அரசியல் அலுவலகத்தில் கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழு, பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை பற்றி பேசினர்.

“பட்டலந்த அறிக்கை என்ன சொல்கிறது என்பதை யாரும் ஆராய்வதில்லை” என்று இங்கு கூறிய வஜிர அபேவர்தன, அறிக்கையைப் பற்றிப் பேசும் எவருக்கும் அறிக்கை உண்மையில் என்ன சொல்கிறதென்பது தெரியாதென்று குறிப்பிட்டார்.

உண்மையிலேயே, அந்த ஆணைக்குழு அறிக்கை உங்கள் மீது எந்தக் குற்றச் சாட்டையும் சுமத்தவில்லையா? சமூகத்தின் பெரும்பான்மையான மக்கள் கேட்கும் ஒரு கேள்வி இது - என்று ருவான் விஜேவர்தன ரணிலை நோக்கி கேட்டார்.

“ஆணைக்குழு அறிக்கையின் பக்கம் 119இல், நான் கொடுத்த இரண்டு வீடுகளில் ஒன்று சட்டவிரோதமானதென்றும் எனவே, நான் பட்டலந்த விடயத்துக்கு மறைமுகமாகப் பொறுப்பேற்கிறேன் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால், பட்டலந்த அறிக்கை எனக்கு எந்தத் தண்டனையையும் பரிந்துரைக்கவில்லை. நானும் தெல்கொடவும் இவற்றுக்கு மறைமுகமாகப் பொறுப்பென்று கூறுகிறது. அதைத் தவிர, எதுவும் நேரடியாகக் கூறப்படவில்லை. வீடு கொடுத்ததற்கு நான் மறைமுகமாகப் பொறுப்பென்ற உண்மை உள்ளது. குறைந்தபட்சம் இது சந்தேகிக்கப்பட விடயமென்று கூட எந்தக் குறிப்பும் இல்லை” என்று இதன்போது ரணில் நிதானமாகப் பதிலளித்தார்.

“இந்த நாட்டில் அப்போது நடந்த வன்முறைக்கு ஜே.வி.பிதான் காரணம் என்பதை பட்டலந்த கமிஷன் ஏற்றுக் கொண்டுள்ளது. இப்போது இந்த அரசாங்கம் இதே ஆணைக்குழுவை ஏற்றுக்கொண்டதால், மேற்கூறிய உண்மையையும் ஏற்றுக்கொள் கிறது. அதாவது, வன்முறையை ஜே.வி.பிதான் ஏற்படுத்தியதென்பதை ஆணையம் ஒப்புக்கொள்வதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையெனில், நாங்கள் பட்டலந்த கமிஷனை ஏற்றுக்கொள்கிறோம் என்றும் வன்முறையை நாங்கள் ஏற்படுத்தினோம் என்பதை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்றும் அரசாங்கம் கூற முடியாது” - என்று வஜிர தனது வாதத்தை முன்வைத்தார். வஜிரவின் அந்த வாதத்தை அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

“பட்டலந்த கமிஷன் அறிக்கை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு வாக்கெடுப்பு நடத்தப்பட்டால், ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டும். அந்தத் தீர்மானம் என்ன? இந்த அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டதாக பாராளுமன்றத்தில் கூறப்பட்டால், வன்முறைக்கு அவர்கள்தான் காரணம் என்ற கூற்றையும் ஏற்றுக்கொண்டு விவாதிக்க வேண்டும். ஆணையத்தின் அறிக்கை உண்மையில் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டால் என்ன விவாதிக்கப்படும்? இதன் பின்னணி பற்றி நாம் பேசலாம். பின்னணி ஜே.வி.பி. அப்போது ஜே.வி.பி. செய்ததை அது ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை அறிக்கை தெளிவாகக் கூறுகிறது. விவாதம் அங்கிருந்து தொடங்கினால், அது எங்கே முடியும்?” - என்று தலதா இங்கு கூறினார்.

“இது புதைக்கப்பட்ட குப்பைக் குவியலைக் கிளறுவதுபோன்றது. இது அவர்கள் சொந்த குப்பைகளை அவர்களே கிளறுவது போன்றது'' - என்று இதற்கு சாமர சொன்ன அனைத்தையும் உன்னிப்பாகக் கேட்ட பிறகு சாமர சம்பத் எம்.பி. கூறினார்.

இந்தக் குப்பை அறிக்கையை பாராளுமன்றத்துக்கு அனுப்புவதன் மூலம் ரணிலின் சிவில் உரிமைகளை ஒழிக்கப்போவதாக அவர்கள் மக்களுக்கு சொல்கிறார்கள், இல்லையா? அரசாங்க அமைச்சரொருவர் தெரிவித்த அறிக்கையை மேற்கோள் காட்டி ஷெஹான் இங்கு கூறினார்.

“அத்தகைய குடிமை உரிமையை ஒழிக்க எந்த வழியும் இல்லை. இது பிரிவு 48இன் கீழ் நிறுவப்பட்ட ஒரு பொது ஆணைக்குழு மட்டுமே. விரும்பினால், இதை பாராளுமன்றத்தில் ஒத்திவைப்பு விவாதமாக விவாதிக்கலாம்” என்று தற்போதைய நிலைமையை ரணில் இதன்போது விளக்கினார்.

அது சரிதான் சேர். ஒரு சுயாதீன அரசியல் விமர்சகரின் அறிக்கையையும் நான் படித்தேன். ஒரு சாதாரண ஆணைக்குழுவால் எதுவும் செய்ய முடியாது. அப்படியொரு நடவடிக்கை எடுக்கப்பட்டால், ஒரு சிறப்பு ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும். இது இருபத்தைந்து வருட பழைமையான ஆணைக்குழு. இப்போது புதிய சாட்சிகள் கூட எடுக்கப்பட வேண்டும். கடந்த காலத்தில் வேறு சில சம்பவங்களும் நடந்தன, இல்லையா? எத்தனை அரசியல் தலைவர்கள் கொல்லப்பட்டார்கள்? இது தேசிய மக்கள் சக்திக்குப் பின்னடைவை ஏற்படுத்தும். இந்தப் பிரச்சினை இறுதியில் ஜே.வி.பியை மீண்டும் வேட்டையாடும்” என்று அநுராத ஜயரத்ன எம்.பி. இங்கு கூறினார்.

சமீபத்தில் அரசாங்கம் தொடங்கிய அனைத்துத் திட்டங்களும் தோல்வியடைந்தது போலவே, பட்டலந்த அறிக்கை விடயமும் நிச்சயமாகத் தோல்வியடையும். உள்ளூராட்சி தேர்தலில் ஒரு நன்மையைப் பெறுவதற்காக இதைக் கொண்டுவர அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கலாம். எனக்குத் தெரிந்தவரை, இதுபோன்ற விஷயங்களால் நாங்களே பயனடைகிறோம். நான் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரத்தை நடத்துபவர் அல்ல. தேவைப்பட்டால், இரண்டு அல்லது மூன்று கூட்டங்களில் பேசுவேன்” - என்று ரணில் கூறினார்.

“இதெல்லாம் வேறு பக்கம் திரும்பலாம். இது நமக்கு ஓர் ஆசீர்வாதமாகவும் இருக்கலாம். இந்த அரசாங்கம் நினைக்கும் விதத்தில் இவை நடக்கவில்லை. சரி, இந்த ஆணைக்குழு அறிக்கையை நாங்கள் செயற்படுத்துகிறோமென்று வைத்துக்கொள்வோம். அப்படி நடந்தால், மற்ற அனைத்து ஆணைக்குழுக்களின் அறிக்கைகளும் செயற்படுத்தப்பட வேண்டும்” என்று வஜிர அபேவர்தன மற்றொரு ஆணைக்குழுவின் அறிக்கையை மேசையில் வைத்துவிட்டுக் கூறினார்.

‘பொதுச் சொத்துகளை தவறாகப் பயன்படுத்துதல்’ என்ற ஊழல் தடுப்புக் குழு ஆணைக்குழுவின் இந்த அறிக்கையில் 22 நபர்கள் தொடர்பில் கூறப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க (தலைவர்), அமைச்சர் மங்கள சமரவீர, அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, ரவூப் ஹக்கீம், சரத் பொன்சேகா, ஆர்.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், அநுரகுமார திசாநாயக்க, சட்டத்தரணி ஜே.சி.வெலியமுன, டாக்டர் ஜயம்பதி விக்ரமரத்ன, மலிக் சமரவிக்ரம, ஆனந்த விஜயபால, ஷானி அபேசேகர உட்பட்ட பலர் பொறுப்புக்கூற வேண்டியவர்களாக ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

“இது மிகவும் பழைய ஆணைக்குழு அறிக்கை அல்ல. இந்த ஆணைக்குழு குறிப்பிட்டுள்ள பெயர்களையும் பரிந்துரைகளையும் கவனமாகப் படிப்பது நல்லது” என்று ரணில் இதன்போது சிரித்தபடி கூறினார்.

கடந்த வாரம் நடைபெற்ற ஒரு திருமண விழாவில், ரணில் ஒரு பழைய நண்பரைச் சந்தித்தார். அது ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார.

சமீபத்திய தேர்தல்களில் முஸ்லிம் வாக்குகளின் பதிவு பற்றி அவர்கள் பேசினர். கிழக்கு மாகாணத்திலும் வடக்கிலும் முஸ்லிம் வாக்குகள் மாறாமல் இருந்தபோதிலும், பிற பகுதிகளில் முஸ்லிம் வாக்குகள் மாறியிருப்பதை அவர்கள் பேசிக்கொண்டனர்.

“எங்களுக்குக் கிடைக்காத முஸ்லிம் வாக்குகளை எஸ்.ஜே.பி. பெறும் என்று நான் நினைத்தேன்” என்று ரணில் கூறினார்.

நகராட்சி மன்றங்களுக்கான வேட்பாளர்களை நியமிப்பது தொடர்பாகவும் ஒரு சுருக்கமான விவாதம் நடைபெற்றது. இருப்பினும், கூட்டுப்போட்டி குறித்து இரு தரப்பினரிடமிருந்தும் தெளிவான கருத்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை காலை சிறிகொத்தவிலுள்ள கட்சி தலைமையகத்தில் ரணிலின் தலைமையில் நடைபெற்றது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் விஜேமான்ன தொகுதி அமைப் பாளரின் கடிதத்தைப் பெற வந்தபோது எழுப்பிய ஒரு பிரச்சினையால் அங்கு பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது.

அங்கு, லக்ஷ்மன் விஜயமான்னே ஐ.தே.க. தலைவரிடம், “ஐயா, நான் உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும். நான் கட்சிக்கு ஒரு பெரிய சேவையைச் செய்துள்ளேன். ராஜித வந்ததும், அவர் அதைப் பெரிதாக்கி தனியாக கொடுத்துள்ளீர்கள்'' -என்று கூறினார்.

மேலும், இரண்டு தொகுதி அமைப்பாளர் களும் எழுந்துநின்று, சில நியமனங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாகக் கூறினர்.

கட்சித் தலைவர் ரணில் அவர்களை இடைநிறுத்தி, ''தயவுசெய்து உட்காருங்கள்'' என்று கேட்டுக்கொண்டார். அவர்கள், ''உங்கள் உத்தரவை நாங்கள் மதிக்கிறோம்'' என்று கூறி அமர்ந்தனர்.

கூட்டத்தில் உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் வஜிர அபேவர்தன, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்கொள்ள அனைவரும் ஒன்றுபட்டுள்ளதாகக் கூறினார்.

கட்சியின் ஒற்றுமையை ஏற்படுத்த தன்னால் முடிந்த அனைத்தையும் செய்துள்ளதாகவும் ரணில் விக்கிரமசிங்க இங்கு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி கூட்டணி குறித்த பேச்சுக்கு துணைத் தலைவர் ருவான் விஜேவர்தன மற்றும் பொதுச் செயலாளர் தலதா அத்துகோரல ஆகியோர் அடங்கிய குழுவுக்குப் பொறுப்புகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக வஜிர அபேவர்தன இங்கு தெரிவித்தார்.

எவ்வாறாயினும் ரணிலுடன் முரண்பட்ட களுத்துறை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் மாவட்டத் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு தமது ஆதரவை நல்கும் நோக்கில் (13) வியாழன் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டார்.

## ரணிலுக்கு என்ன நடக்கும்?

பட்டலந்த அறிக்கையை அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தமை தேசிய மக்கள் சக்திக்கு தேர்தலில் உதவினாலும் கூட அதனால் ரணிலுக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்பில்லையென்பது அரசியல் விமர்சகர்களின் கருத்தாக இருக்கிறது.

ரணிலைப் பொறுத்தவரை அவர் தற்போதைய ஆட்சியாளர்கள் ஆட்சிக்கு வருவதற்கு உதவியவர் என்ற கருத்தும் உள்ளது. என்ன விலை கொடுத்தாவது சஜித் ஜனாதிபதி கதிரையில் அமர்வதைத் தடுக்கவேண்டுமென்பது கடந்த தேர்தலில் ரணிலின் இலக்காக இருந்தது. கடந்த இரண்டு பிரதான தேர்தல்களிலும் அநுரகுமாரவை ரணில் கடுமையாக விமர்சிக்கவில்லை. தேர்தல் காலத்தில் கூட ரணில் ஜனாதிபதியாக இருந்த சந்தர்ப்பத்தில் அநுரகுமார தரப்புக்கு ஏராளமான உதவிகளைச் செய்திருப்பதாகச்



சொல்லப்படுகிறது.

அதனால்தான் இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி விவகாரம், கடந்த ஆட்சியின் இறுதிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இ - விசா கொடுக்கல் வாங்கல் விவகாரம், பாஸ்போர்ட் அச்சீடு விவகாரம் உட்பட்ட விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் அடக்கி வாசிப்பது இதனால்தான் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள். இந்த விடயங்களில் சம்பந்தப்பட்டவர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாதென விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பட்டலந்த அறிக்கையை இப்போது சபையில் அரசு சமர்ப்பிக்கவும் காரணம் உள்ளது. ஆளுங்கட்சியின் மேல்மட்டத்தில் ரணிலுக்கு ஆதரவான நிலைப்பாடு இருந்தாலும் கீழ்மட்டத்தில் அப்படியில்லை. அதனால் கீழ்மட்ட உறுப்பினர்களைச் சமாளிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார் ஜனாதிபதி. அதனால்தான் இந்த அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அப்படி சமர்ப்பிக்கப்பட்டாலும் ரணிலுக்கு எதிராக எந்த நடவடிக்கைகளும் இடம்பெறமாட்டாதென உள்ளகத் தகவல்கள் சொல்கின்றன. ஆனால், இந்த விடயத்தை வைத்து தேர்தல் காலத்தில் ஆளுங்கட்சி அதிகபட்ச மக்கள் ஆதரவைப் பெற முயலக்கூடும்.



எவ்வாறாயினும் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் ஆளுங்கட்சிக்கு அமோக வெற்றிவாய்ப்பு நிலை இல்லையெனத் தெரிகிறது. ஊர்களில் ஆளுங்கட்சி மீதிருந்த மக்களின் ஆதரவு கணிசமாக குறைந்துள்ளதால் கடந்த பொதுத் தேர்தலில் பெற்ற வாக்குகளில் சுமார் 20 இலட்சம் வாக்குகளை இந்தத் தேர்தலில் ஆளுங்கட்சியாக தேசிய மக்கள் சக்தி இழக்கக்கூடுமென அரச புலனாய்வுத்துறை அறிக்கைகளில் சொல்லப்பட்டுள்ளதாக அறியமுடிந்தது.

## வடக்கில் தேர்தல் கூட்டணி

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் துவிச்சக்கர வண்டி சின்னத்தில் போட்டியிட சில சிறிய குழுக்கள் பேச்சு நடத்திவருகின்றன.

பொ.ஐங்கரநேசன் தலைமையிலான தமிழ் தேசிய பசுமை இயக்கம், சாவகச்சேரியில் க.அருந்தவபாலன் தலைமையிலான குழு, சட்டத்தரணி என்.சிறிகாந்தா தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சி என்ற குழு, இலங்கை தமிழரசுக் கட்சியிலிருந்து பிரிந்து ஜனநாயக தமிழரசுக் கூட்டணியென்ற பெயரில் செயற்படும் சட்டத்தரணி கே.வி.தவராசா குழு ஆகியன பேச்சில் ஈடுபட்டுள்ளன.

இந்தப் பேச்சுகளைத் தொடர்ந்து, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாக அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிட கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும், சிறிகாந்தா தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சி, அந்தக் கூட்டணியிலிருந்து விலகி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைமையிலான கூட்டணியில் இணைய முடிவுசெய்துள்ளது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் இணைவதாக அண்மையில் அறிவித்த கே.வி.தவராசா தலைமையிலான குழு, தற்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் இணையத் தீர்மானித்துள்ளது.

பொ.ஐங்கரநேசன் குழுவும் முன்னதாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் இணைய தீர்மானித்திருந்தது. எனினும், வெளிநாட்டு நிதி அன்பளிப்பாளர்களின் கட்டுப்பாட்டால் முடிவை மாற்றியது.

பொ.ஐங்கரநேசன் குழுவினர் நல்லூர் பிரதேச சபையில் மட்டும் ஓரளவு வாக்கைப் பெறக்கூடும். தவராசா அணி தீவக பகுதிகளில் மிகச்சிறியளவு வாக்கைப் பெறக்கூடும். எனினும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடனான கூட்டணி பேச்சின்போது, நல்லூர் பிரதேச சபை தவிசாளர் பதவியை பொ.ஐங்கரநேசன் தரப்பும் யாழ். மாநகர சபை முதல்வர் பதவியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் இளம்பிறையனுக்கு வழங்க வேண்டுமென தவராசா அணியும் நிபந்தனை விதிக்க முயன்றுள்ளனர்.

எனினும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்த நிபந்தனைகளை ஆரம்பத்திலேயே நிராகரித்துவிட்டது.

ஆசன பங்கீட்டின் அடிப்படையில் கூட்டணி வைக்க முடியாது, கொள்கையின் அடிப்படையில் கூட்டணி வைக்கலாமென முன்னணி கறாராக தெரிவித்ததையடுத்து, இந்த இரண்டு தரப்பும் நிபந்தனைகளைக் கைவிட்டுள்ளன.

எனினும், இந்தத்தரப்புகளுடன் ஆசனப்பங்கீட்டு பேச்சுகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. ஆசனப்பங்கீட்டில் உடன்பாடு எட்டப்பட்ட பின்னரே கூட்டணி பற்றிய அறிவித்தல் பகிரங்கமாகுமெனத் தெரியவருகிறது.

இதேவேளை, இதுவரையான தேர்தல்களில் தனித்துப் போட்டியிட்டு வந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி- தற்போது புதிய கூட்டணிப் பேச்சுகளில் ஈடுபட்டுள்ளது. இது, முன்னணியின் பெரியளவிலான கொள்கை மாற்றமாகக் கருதப்படுகிறது. கடந்த பாராளுமன்றத் தேர்தலின் பின்னர், பாராளுமன்றத்துக்குள் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் இணைந்து செயற்படுவதற்கான முயற்சிகளை ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜே.ஆரின் பேரன் புதிய கட்சியில்

இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர் ஜே.ஆர்.ஜயவர்தனவின் பேரன் பிரதீப் ஜயவர்தன, திலித் ஜயவீர தலைமையிலான சர்வஜன அதிகாரம் கட்சியுடன் இணைந்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து, ஐக்கிய மக்கள் சக்தி பக்கம் தாவியிருந்த நிலையிலேயே அவர் தற்போது மீண்டும் கட்சி தாவியுள்ளார்.

அவருடன் இணைந்து மேலும் சில பிரதேச அரசியல்வாதிகளும் சர்வஜன அதிகாரம் கட்சியுடன் இணைந்துள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சர்வஜன அதிகாரம் கட்சியின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காகவே இணைந்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# பட்டலந்த வதைமுகாமில் நடந்தது என்ன?



இந்திரானந்த டி சில்வா

தொகுப்பு: நா.தினுஷா

***கலவர காலத்தில் பட்டலந்த உள்ளிட்ட வதைமுகாம்களில் இளைஞர்களைக் கொலைசெய்வதற்கு அப்போதைய இளைஞர் அலுவல்கள் அமைச்சராக இருந்த ரணில் விக்கிரமசிங்க தொடர்புபட்டிருந்த விதத்தை தான் நேரில் கண்டுள்ளதாக இராணுவம் மற்றும் பொலிஸ் பிரிவின் புகைப்படப்பிடிப்பாளராக இருந்த அப்போதைய இராணுவ அதிகாரியும் முன்னிலை சோஷலிச கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினருமான இந்திரானந்த டி சில்வா தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு அண்மையில் தெரிவித்துள்ளார்.***

1975ஆம் ஆண்டு சபுகஸ்கந்த யூரியா உரத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் தொழிற்சாலை வேலைத்திட்டத்தில் பங்குபற்றும் தேசிய மற்றும் வெளிநாட்டு அதிகாரிகளுக்கென தங்குமிட விடுதியொன்றை நிர்மாணிப்பதற்காக 50 ஏக்கர் நிலப்பரப்புக்கொண்ட பட்டலந்த என்ற இடம் தெரிவுசெய்யப்படுகிறது. அந்த இடத்தில் வீட்டுத் தொகுதியும் நிர்மாணிக்கப்படுகிறது.

அப்போது ஆட்சியிலிருந்த சிறிமா பண்டாரநாயக்கவின் ஐக்கிய முன்னணி அரசாங்கம் தோல்வியடைந்ததன் பின்னர் பின்பற்றப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையின் காரணமாக சபுகஸ்கந்த யூரியா உரத் தொழிற்சாலை வீழ்ச்சியடைந்து மூடப்படுகிறது.

தொழிற்சாலை மூடப்பட்டவுடன் இந்த வீட்டுத்தொகுதி நேரடியாக ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் தொழிற்றுறை அமைச்சின் கட்டுப்பாட்டுக்குள் செல்கிறது. அப்போது ரணில் விக்கிரமசிங்கவே தொழிற்றுறை அமைச்சராகவும் இருந்துள்ளார். பின்னர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இளைஞர் அலுவல்கள் அமைச்சும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து இந்த விடுதியில் ரணிலின் நேரடி கட்டுப்பாட்டில் சில வீடுகள் இருந்ததாகவும் சில வீடுகள் பொலிஸ் அதிகாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. அதன் பின்னரான காலப்பகுதியில் குழப்பத்தை ஏற்படுத்தும் செயல்களைத் தடுக்கும் பிரிவு என்றதொரு பொலிஸ் பிரிவும் உருவாக்கப்பட்டது.

அரசாங்கத்துக்கு எதிராக செயற்பட்டவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்காக இந்தப் பிரிவு பயன்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பிரிவும் இந்த பட்டலந்த வீட்டுத்தொகுதியிலேயே செயற்பட்டுவந்துள்ளது.

1988/1989ஆம் ஆண்டு கலவர காலப்பகுதியிலேயே பட்டலந்த வீட்டுத்தொகுதி பட்டலந்த வதைமுகாமாக தோற்றம் பெற்றுள்ளது. அரசாங்கத்துக்கு எதிராக செயற்பட்ட மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்தவர்களுக்கும் ஆதரவளித்தவர்களுக்கும் இந்த வதைமுகாமிலேயே தண்டனை வழங்கப் பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் காலப்பகுதியிலேயே இராணுவ அதிகாரி இந்திரானந்த டி சில்வா இராணுவ, பொலிஸ் புகைப்படவியலாளராகக் கடமையாற்றியுள்ளார். கலவர காலப்பகுதியில் பட்டலந்த வதைமுகாமில் இடம்பெற்ற கொலைச் சம்பவங்கள், மக்கள் விடுதலை முன்னணியின் ஸ்தாபகத் தலைவர் ரோஹண விஜேவீர உள்ளிட்டோரின் கொலைச் சம்பவங்களை நேரில் பார்த்த சாட்சியாளராகவும் இவர் கருதப்படுகிறார்.

இந்திரானந்த டி சில்வா அன்றைய காலப்பகுதியில் நேரில் கண்ட சில விடயங்களை கீழ்வருமாறு கருத்துபகிர்ந்து கொள்கிறார்.

**உண்மையில் பட்டலந்த வதை முகாம் என்பது என்ன?**

அரசியல்வாதிகளுடனான நேரடி தொடர்பிலுள்ள பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வந்த வதை முகாம்களில் பிரபல்யமாக இருந்ததே பட்டலந்த வதை முகாம்.

**நீங்கள் எத்தனை தடவைகள் இந்த வதை முகாமுக்கு சென்றிருக்கிறீர்கள்?**

நான் அக்காலப்பகுதியில் இராணுவத்தினதும் பொலிஸினதும் உத்தியோகபூர்வ படப்பிடிப்பாளராகக் கடமையாற்றினேன். அந்தக் காலப்பகுதியில் எனக்கு சில பிரதான கடமைகள் பொறுப்பளிக்கப்பட்டிருந்தன. அவற்றில், கொலை செய்யப்படவுள்ளவர்கள் என்று பெயரிடப்பட்டவர்களை புகைப்படம் எடுப்பதும் ஒரு கடமையாக இருந்தது.

அதனால், கொழும்பிலிருந்த ஒவ்வொரு வதை முகாம்களுக்கும் சென்றுவருவேன். அதற்கு மேலதிகமாக கொலைசெய்வதற்காக இராணுவத்தினரால் தடுத்துவைக்கப்பட்டிருந்த சிலரை புகைப்படமெடுப்பதற்கும் எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. அதற்கமைய பட்டலந்த வதைமுகாமுக்கு செல்ல இரு தடவைகள் வாய்ப்புகள் கிடைத்தன.

**முதல்நாள் அங்கு சென்றபோது எந்த விடயத்தை அவதானிதீர்கள்?**

முதலாம் நாள் மூவரை புகைப்படம் எடுப்பதற்காகவே அனுப்பிவைத்தார்கள். அங்கு சிவில் உடையிலிருந்த பிரதானியொருவரே என்னை அழைத்துச் சென்றார். அதன் பின்னரான காலப்பகுதியிலேயே டக்ளஸ் பீரிஸ், நளின் தெல்கொட, கரவிட்டகே தர்மதாச போன்றோரும் அங்கிருந்ததை நான் அறிந்துகொண்டேன்.

முதலாம் நாளன்று அவ்விடத்துக்குச் சென்றபோது, ரணில் விக்கிரமசிங்க அங்கிருந்த அறையொன்றில் சம்பந்தப்பட்ட

**நெற்றியில் எரிகாயங்கள் ஏற்படுத்தப்பட்ட நிலையிலும் கண்கள் பாதி வெளியில் வந்த நிலையிலும் கை, கால்கள் முறிக்கப்பட்ட நிலையிலும் பட்டலந்த வதைமுகாமில் இளைஞர்கள் இருந்தார்கள்.**

பிரதானியுடன் பேசிக்கொண்டே இருந்தார். அதன் பின்னர் புகைப்படம் எடுப்பதற்கு அவசியமானவர்களை மாத்திரம் வதை முகாமுக்குச் சென்று பெற்றுக்கொடுத்தார்கள்.

நான் அன்று சென்றபோதும் அங்கு பல்வேறு சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்ட 30 வரையிலான இளைஞர்கள் இருந்தார்கள்.

**சித்திரவதை என்றால் அது எப்படிப்பட்டது?**

நெற்றியில் எரிகாயங்கள் ஏற்படுத்தப்பட்ட நிலையிலும் கண்கள் பாதி வெளியில் வந்த நிலையிலும் கை கால் முறிக்கப்பட்ட நிலையிலும் அங்கு இளைஞர்கள் இருந்தார்கள்.


**நீங்கள் கூறும் காலப்பகுதியில் ரணில் விக்கிரமசிங்க அமைச்சராகவா இருந்தார்?**

எனது நினைவின்படி இளைஞர் விவகார அமைச்சராக இருந்தார்.

**ரணில் எவ்வாறு பட்டலந்தவுடன் தொடர்புபட்டார்?**

ரணில் விக்கிரமசிங்க அண்மையில் வசந்த முதலிகேயையும் கொலைசெய்ய அதிகபட்ச முயற்சி எடுத்தார் என்பது எங்களுக்கும் தெரியும். அந்தக் காலப் பகுதியிலும் அவ்வாறே இடம்பெற்றது. கைதுசெய்யப்பட்டவர்களை சித்திரவதைப் படுத்தும் செயற்பாடுகளில் தனிப்பட்ட ரீதியில் தலையிட்டார்.

நான் கொழும்பு வதைமுகாம்களுக்குச் சென்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ரஞ்சித் பீரிஸ், ஒஷி அபேகுணசேகர, வீரசிங்க மல்லிமாரச்சி, சிறிசேன குரே போன்றோரை பல தடவைகள் பார்த்திருக்கிறேன்.




**உத்தியோகபூர்வ வீடுகள் சில இருந்ததாகவும் கூறுனீர்கள். பின்னர் வதைகூடங்களும் இருந்ததாகக் கூறினீர்கள். அவ்வாறெனில் உத்தியோகபூர்வ வீடுகளும் வதைகூடங்களும் அருகருகிலா இருந்தன?**

மிக அருகிலேயே இருந்தன. உரக் களஞ்சியம் இருக்கும் இடத்திலிருந்து சிறிது தூரத்தில் உத்தியோகபூர்வ இல்லம் இருந்தது. அந்த உத்தியோகபூர்வ இல்லத்தில் டக்ளஸ் பீரிஸ் இருந்தார். அதேபோன்று ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சில வீடுகள் இருந்தன. அதிகம் அந்த இடத்தில் வசிப்பதுபோன்றே அந்த உத்தியோகபூர்வ வீடுகளை ரணில் விக்கிரமசிங்க பயன்படுத்தியிருந்தார். அந்த இடங்களில் ஆயிரக்கணக்கான புகைப்படங்கள் எடுத்திருக்கிறேன்.

நாளை சிலரை கொலை செய்யப்போகிறார்களென்றால் அவர்களை அதற்கு முதல் புகைப்படம் எடுக்கவேண்டும். அவ்வாறு அவர்களை புகைப்படம் எடுப்பதற்காகவே என்னை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அங்கு அனுப்புவார்கள். அதற்குக் காரணம், ஒன்றிணைந்த கண்காணிப்பு தலைமையகத்தால் இரகசிய அல்பம் ஒன்று பராமரிக்கப்பட்டுவந்தது. அதனை கைதுசெய்யப்பட்டவர்களுக்குக் கொடுப்பார்கள்.

உதாரணமாகக் கூறுவதென்றால், அந்தக் காலப்பகுதியில் அநுர என்பவர் எனக்கு ஒருங்கிணைப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுத்தாரென்று கைதுசெய்யப்பட்ட ஒருவர் கூறினால், அவருக்கு அவர் அநுரவாக இருந்தாலும் வேறு பிரதேசத்தில் ரத்நாயக்கவாக இருக்க முடியும். அதனால், குறித்த நபர் தொடர்பான உறுதியான தகவலை அறிந்துகொள்ள முடியாது. கைதுசெய்யப்பட்டவர் எனக்கு தொடர்பைப் பேணியவர் அநுர என்று பெயரைக் குறிப்பிட்டால் அந்த அல்பத்தை காட்டியே இவர்களில் யார் என்று விசாரிப்பார்கள். அவர் அந்த அல்பத்தில் ஒருவரை அடையாளம் காட்டினால் அதனைச் சரிசெய்து கொள்வார்கள். கொலை செய்யப்படும் ஒவ்வொரு நபர்களினதும் புகைப்படத்தை அந்த அல்பத்தில் இணைத்துக்கொள்வார்கள்.

**ரோஹண விஜேவீரவின் இறுதி சந்தர்ப்பத்தைக் கண்ட ஒருவராக நீங்கள் அடையாளப் படுத்தப்படுகிறீர்கள்? அதுதொடர்பில் விவரிக்க முடியுமா?**

**விஜேவீரவை உயிருடன் தகனம் செய்தார்கள்.**

அன்று, அதிகாலை 1.30 மணியளவில் வந்து என்னை எழுப்பி சத்தமிட வேண்டாமெனக் கூறி இரகசிய பயணம் என்று தெரிவித்தே அழைத்துச் சென்றார்கள். ரோஹண விஜேவீர என்று நான் கருதவும் இல்லை. கூட்டுப்படைத் தலைமையகத்தின் மூன்றாவது மாடியில் வட்ட மேசையில் கோப்பி அருந்தியபடி மிக சுமுகமாக பேசிக்கொண்டிருந்தார்கள். அங்கிருந்த அநேகமானவர்கள் மிஸ்டர் விஜேவீர என்றே ரோஹண விஜேவீரவை அழைத்தார்கள். ஒருசில கேள்விக்கு ரோஹண, "இதுபோன்ற கேள்விகளை என்னிடம் கேட்க வேண்டாம், அவை பொருத்தமாக இல்லை" என்று நேரடியாகப் பதிலளித்திருந்தார்.

"தோழர் கமநாயக்க எங்கிருக்கிறார்?" என்று அதிகாரியொருவர் வினவியதும் "அவ்வாறான கேள்விகள் என்னிடம் வினவ வேண்டாம். அவை பொருத்தமற்றவை" என்று கூறினார். அதற்கு அருகிலிருந்த அறையில் கண்கள் வெளியில் வந்து அமரக்கூட முடியாமலிருந்த நிலையிலேயே எச்.பீ.ஹேரத்தின் புகைப்படத்தை எடுத்தேன்.

ரோஹண விஜேவீரவின் 08 புகைப்படங்களையும் எச்.பீ.ஹேரத்தின் 05 புகைப்படங்களையும் மிகவும் கஷ்டப்பட்டு எடுத்தேன். இன்று நல்லவர் போன்று பேசும் ரணில் விக்கிரமசிங்க அன்று அமைச்சராக இருந்தபோது, ரோஹண விஜேவீர கொலை செய்யப்பட்ட மறுநாள், எச்.பீ.ஹேரத் இருக்கும் இடத்தைக் காட்டுவதற்கு ரோஹண விஜேவீர விரும்பியதாகவும் அதன்போது அந்த இடத்தை இராணுவத்தினர் முடக்கியதாகவும் எச்.பீ.ஹேரத்தையும் சிறைபிடித்துவிட்டதாகவும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை அதிகாரிகளுக்கு கொடுக்குமாறு ரோஹண விஜேவீர எச்.பீ.ஹேரத்துக்கு கூறியதாகவும் ஆவணங்களை எடுப்பதாக தெரிவித்து லாச்சை திறந்து அதிலிருந்த பிஸ்ரலை எடுத்து எச்.பி.ஹேரத், ரோஹண விஜேவீர மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் நாட்டுக்கு அறிவித்தார்கள்.

**பொலிஸாரால் முன்னெடுப்பட்டுவந்த வதை முகாம்களில் பிரபல்யமாக இருந்ததே புட்டலந்த வதைமுகாம்**

அதன் பின்னர் மயானத்துக்கும் நான் சென்றேன். அங்கு ரோஹண விஜேவீரவை உயிருடன் தகனம் செய்தார்கள். அதனை புகைப்படம் எடுக்க அனுமதிக்கவில்லை. ஆனால், அந்த சகல சம்பவங்களையும் நான் கண்ணால் பார்த்துள்ளேன்.

1996ஆம் ஆண்டு நான் மெகசீன் சிறைச்சாலையில் கைதியாக இருந்து கொண்டு, கண்ணால் பார்த்த விடயங்களையும் எனக்கு முன்னால் வதை முகாம்களில் கைகால்கள் முறிக்கப்பட்டு கொலை செய்தது, என் கண்முன்னால் கொலை செய்த சம்பவங்கள் தொடர்பிலும் பெயர்களைக் குறிப்பிட்டு பிரமாணப் பத்திரமொன்றை சட்ட மா அதிபரிடம் சமர்ப்பித்தேன்.

எந்தவொரு இடத்திலும் சாட்சியளிக்க நான் தயாராக இருப்பதாகத் தெரிவித்தும் இந்தக் கொடூர கொலைகள் தொடர்பில் என்னால் பேச முடியுமென்றும் அதில் சுட்டிக்காட்டியிருந்தேன். ரோஹண விஜேவீர, எச்.பீ.ஹேரத், டீ.எம். ஆனந்த உள்ளிட்டவர்களை நானே புகைப்படம் எடுத்தேன் என்பதையும் அதில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தேன்.

**இராணுவ கடமைகளுக்கப்பால் கட்சிக்குத் தகவல் வழங்கும் செயற்பாடுகளையும் நீங்கள் முன்னெடுத்திருந்தீர்கள் அல்லவா?**

ஒரு நாளைக்கு நான் 200–300 பேர் வரையிலானவர்களைப் புகைப்படமெடுப்பேன். மறுதினமே அந்தப் புகைப்படங்களை கட்சிக்குக் கொடுத்துவிடுவேன். இதனை நான் தொடர்ச்சியாக செய்துவந்தேன்.

பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னவை கொலை செய்ததாகக் கூறி மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திலிருந்த பீரிஸ் என்பவரைக் கைதுசெய்தார்கள். அதன்போது வதைமுகாமுக்கு தோரதெனியவே அனுப்பினார்.

மேஜர் ஜெனரல் பதவியில் சென்று பின்னர் ரணில் விக்கிரமசிங்கவால் துறைமுக அதிகாரசபையின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டு, பின்னர் அங்கு பிரச்சினையாகி அங்கிருந்து அவரை நீக்கி, பின்னர் மாலைதீவுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டவரே அசோக தோரதெனிய என்பவராவார்.

அன்றைய காலப்பகுதியில் 10 யுவதிகளை பாலியல் வன்கொடுமைக்குள்ளாக்கி கொலை செய்யப்பட்டுள்ளதாக இராணுவ உயர் பிரதானிகளுக்குக் காண்பித்துவிட்டு, லெப்டினன்ட் மனதுங்க உள்ளிட்டோர் அந்த யுவதிகளை துஷ்பிரயோகம் செய்து சித்திரவதைப்படுத்தி இரண்டு மாதங்கள் வரை வதைமுகாமில் வைத்திருந்தார்கள். இந்த விடயத்தை ஆதாரங்களுடன் வாசுதேவ நாணயக்காரவுக்கு அனுப்பி வைத்தேன். இது தொடர்பில் வாசுதேவ நாணயக்கார பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார். அன்றிலிருந்தே என்மீது முதல் தடவையாக சந்தேகம் ஏற்பட்டது.

ஜனாதிபதியிடமிருந்து ஒரு தொலைபேசி அழைப்பினூடாக முழு நிலைமையையும் தலைகீழாக மாற்றி, உலகமறிந்த ரோஹண விஜேவீர போன்ற நபரை கூட கொலை செய்துவிட முடியும். கொலை செய்துவிட்டு ஊடக சந்திப்பை நடத்தி விடயத்தைத் தலைகீழாகக் கூறவும் முடியும்.

**நீங்கள் கூறும் நபர்களில் உயிருடன் இருப்பவர்கள் யார்?**

ரணில் விக்கிரமசிங்க தற்போது நிச்சயமாக உயிருடன் இருக்கிறார். டக்ளஸ் பீரிஸ் உயிரிழந்துவிட்டார். கரவிட்டகே தர்மபால உயிரிழந்துவிட்டார். அப்படியிருந்தாலும் சில விடயங்கள் சந்தேகத்துக்கிடமானவை. அநேகமான தற்கொலைச் சம்பவங்களும் இருக்கின்றன.

**இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்கு சரியான காலம் வந்துள்ளது. தற்போது மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைத்துவத்தின் ஜனாதிபதியின் ஆட்சியே தற்போது நாட்டில் இருக்கிறது?**

சந்திரிகா குமாரதுங்கவே பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை மூடிமறைத்தார். அதனூடாக சந்திரிகா ரணிலை பாதுகாத்தார். மேலும், மக்கள் விடுதலை முன்னணியால் வெளியிடப்பட்ட முதலாவது பத்திரிகையான 'நியமுவா' பத்திரிகையில் விஜேவீர கொலையாளிகளின் விவரம், எனது பிரமாணப் பத்திரம் என்பன வெளியிடப்பட்டுள்ளன. இதற்கும் மேல் சாட்சிகள் அவசியமில்லை. சகோதரர் அநுரகுமார திசாநாயக்க எனது வீட்டில் இருந்திருக்கிறார். இதனை அறியாதவர்கள் யாரும் இல்லை. இன்று அவர் நாட்டின் ஜனாதிபதி. எனவே, இந்த விவகாரத்தை தொடர்ந்து காலதாமதப்படுத்த வேண்டாம் என்று தோழமையுடன் வத்துடன் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.



# பாராளுமன்றத்தில் மத நிந்தனை
# சிறப்புரிமையை மீறலாமா?



எம்.எஸ்.அமீர் ஹுசைன்

யாழ். மாவட்ட சுயேச்சைக் குழு பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா கடந்த 2025.03.08ஆம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது இஸ்லாத்தில் நிகழும் இளவயது திருமணம் குறித்து கூறிய கருத்துகள் தொடர்பாக பாராளுமன்றத்துக்கு உள்ளும் வெளியிலும் கடுமையான எதிரலைகள் உருவாகியிருக்கின்றன. இவரது கருத்துகள் இஸ்லாத்தைக் கொச்சைப்படுத்துவதாகவும் இஸ்லாத்துக்கு எதிரான ஒருவிதமான மத நிந்தனை என்ற அடிப்படையிலும் முஸ்லிம்கள் நோக்குகின்றனர். இதே கருத்தை இந்து மதம் தொடர்பாக அல்லது கிறிஸ்தவ மதம் தொடர்பாக முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினரொருவர் சொல்லியிருந்தாலும் ஏனைய மதங்களும் அப்படித்தான் நோக்குவார்களென்பதில் சந்தேகம் இல்லை. காரணம், பேச முன்னர் தாம் என்ன பேசப் போவது, பேசும் விடயம் எந்தளவுக்கு சரியானது, பேசப்படுகின்ற விடயம் ஏற்படுத்தப்போகும் தாக்கம், பாதகமான விளைவுகள் யாவை என்பதை சரியாக சிந்தித்துப் பேசவேண்டும்.

இராமநாதன் அர்ச்சுனா யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகி பாராளுமன்றத்துக்குள் காலடி எடுத்துவைத்த நாளிலிருந்து தொடர்ச்சியாக சர்ச்சைகளே உருவாகிக் கொண்டிருக்கின்றன.

முதலாம் நாள் எதிர்க்கட்சித் தலைவருக்காக பாராளுமன்றத்தில் சம்பிரதாயபூர்மாக ஒதுக்கப்பட்டுள்ள ஆசனத்தில் அமர்ந்துகொண்டு அதை விட்டு எழும்ப முடியாதென்றும் சபைக்குள் கருமமாற்றும் சேவகரொருவர் அருகில் வந்து அதுபற்றி அறிவுறுத்தியபோது சம்பிரதாயபூர்வமாக இருக்கின்றதை மாற்றியமைக்கத்தான் தாம் பாராளுமன்றம் வந்திருப்பதாகவும் ஒரு தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் போன்று பேசினார். ஆனாலும் கடந்த வாரம் நடைபெற்ற பாராளுமன்ற அமர்வின்போது தாம் ஆளும் கட்சிக்கு ஆதரவு வழங்குவதில்லையென்றும் எதிர்க்கட்சி உறுப்பினரென்றும் அறிவித்துக்கொண்டார். அத்துடன், ஏற்கனவே எதிர்க்கட்சி அலுவலகத்திலும் முரண்பாட்டை ஏற்படுத்திக் கொண்டதையும் குறிப்பிட வேண்டும்.

அதேநேரம் ஏற்கனவே பாராளுமன்றத்தில் பேசும்போது பல தடவைகள் முரண்பாடுகளுக்கு தூபமிடும் வகையில் கருத்துகளை முன்வைத்து வந்திருப்பதோடு, சபாநாயகரை அடிக்கடி மிக மோசமான முறையில் பேசி வந்ததையும் மறந்துவிட முடியாது. அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் போக்குவரத்து சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டின்பேரில் அநுராதபுரம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தினார் என்ற அடிப்படையில் நீதிமன்ற உத்தரவின்பேரில் தடுப்புக்காவலிலும் வைக்கப்பட்டிருந்தார். அவ்வாறே யாழ்ப்பாணத்தில் அவர் சென்ற பல இடங்களில் மக்கள் எதிர்ப்புக்கும் அதிருப்திக்குமாளாகி இருக்கின்றார்.

இவ்வாறான ஒரு நிலையில், கடந்த 08ஆம் திகதி பாராளுமன்றத்தில் பேசும்போது, இந்த நாட்டில் முஸ்லிம்கள் அவர்களுக்கென்று தனியான சட்டங்களைப் பின்பற்றி வருகின்றனர். முஸ்லிம் சமூகத்தில் 09 வயதுடைய பிள்ளைகளைத் திருமணம் செய்வதை நிறுத்தவேண்டும். இது மோசமான செயல் என்றெல்லாம் காரசாரமான முறையில் சாடினார். அத்துடன், நாட்டில் ஒவ்வொரு இனத்துக்கும் வெவ்வேறான சட்டங்கள் இருக்க முடியாது. எல்லோருக்கும் ஒரே சட்டம் இருக்கவேண்டும் என்றும் கூற முற்பட்டதை அவதானிக்க முடிந்தது. உண்மையில், அவர் ஒரு மருத்துவர். வைத்தியத் துறையில் கற்றுத் தேர்ந்து மருத்துவரான ஒருவர். அதேநேரம் காத்திராப்பிரகாரமான முறையில் பாராளுமன்ற உறுப்பினராகி இருக்கின்றார். ஏதோ மக்கள் வாக்களித்து பாராளுமன்றத்துக்கும் அனுப்பி இருக்கின்றனர்.

ஆனாலும் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராகிவிட்டார் என்றவுடனேயே அவருக்கு இந்த உலகிலுள்ள அனைத்தும் தெரியுமென்பது அர்த்தமாகாது. அவர் இனித்தான் கற்கவேண்டியிருக்கின்றது. முதலில் அவர் எந்த இன சமூகத்துக்காக மக்கள் பிரதிநிதியாக பாராளுமன்றம் அனுப்பப்பட்டாரோ அந்தச் சமூகத்துக்காக குரலெழுப்ப வேண்டும்.

> **இலங்கை வாழ் முஸ்லிம்கள் ஒருபோதும் இந்த நாட்டின் பொதுவான சட்டம், ஒழுங்குக்கு மாற்றமான முறையில் நடந்துகொண்டதில்லை. சட்டத்தை மதிப்பவர்கள். இலங்கை சட்டத்தை ஒருபோதும் மீறியதோ அவமதித்து நடந்துகொண்டதோ இல்லை. நீதிமன்ற நடைமுறைகளை கௌரவமாக மதித்து நடக்கக் கூடியவர்கள்.**

அவர்சார்ந்த யாழ். தமிழ்ச் சமூகம் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக சிவில் யுத்தம் காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்டு சொல்லொணாத் துன்பங்களையும் துயரங்களையும் அனுபவித்த சமூகம். அவர்கள் வாழும் பிரதேசங்களில் ஏராளமான அரசியல், பொருளாதார, சமூக பிரச்சினைகள், தேவைகள் உள்ளன. குறைபாடுகள் உள்ளன. அத்தகைய மக்கள் பிரச்சினைகளை அர்ச்சுனா எம்.பி. தேடிப்பார்த்துக் கண்டறிந்து அவர்களது தேவைகளையும் பிரச்சினைகளையும் பாராளுமன்றத்தில் முன்வைத்து அவற்றுக்குத் தீர்வுகளைத் தேடிக்கொடுக்க முயற்சி செய்யவேண்டும்.

அத்தகைய பிரச்சினைகளைத் தொகுத்து பட்டியலிட்டு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்குக் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். எதிர்க்கட்சியால் விவாதங்களின்போது ஒதுக்கிக்கொடுக்கப்படுகின்ற சில நிமிட நேரங்களை அநாவசியமான முறையில் தேவையற்றவர்களை வம்புக்கிழுத்து காலத்தை வீணடித்து பொன்னான நேரத்தை மண்ணாக்க முற்படக்கூடாது. அவ்வாறு தொடர்ச்சியாக செய்து வந்தால் வடக்கிலிருந்து தமிழ் மக்கள் அவரை பாராளுமன்ற பிரதிநிதியாக அனுப்பியதன் நோக்கமும் எதிர்பார்ப்பும் நாசமாகிப் போகலாம்.

இது அவருக்கு மட்டும் உரிய விடயம் அல்ல. பாராளுமன்றம் செல்கின்ற மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் அறிந்திருக்கவேண்டிய விடயமாகும். பாராளுமன்றத்தில் மாதத்தில் 08 நாட்கள் நடைபெறும் அமர்வுகளின்போது சட்டமூல விவாதங்கள், திருத்தச் சட்டமூலங்கள் போன்றவற்றில் சரியான முறையில் பங்குபற்றுவது குறித்த சட்டமூலம் தொடர்பாக பூரண அறிவையும் தெளிவையும் பெற்றவராக கருத்துகளை முன்வைத்தல் மிகவும் பொருத்தமான விடயமாகும். இதற்கு முன்னர் பாராளுமன்றத்தில் வடக்கை பிரதிநிதித்துவம் செய்த பல பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் பேசியிருக்கின்ற உரைகளை ஹன்சார்ட்டிலிருந்து புரட்டிப் பார்த்தால் அர்ச்சுனா எம்.பி. எங்கே இருக்கின்றார். எப்படி நடந்துகொள்ள வேண்டும், அரசியலிலும் பாராளுமன்ற விவகாரங்களிலும் கற்க வேண்டிய பாடங்கள் யாவை என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

இலங்கை வாழ் முஸ்லிம்கள் ஒருபோதும் இந்த நாட்டின் பொதுவான சட்டம், ஒழுங்குக்கு மாற்றமான முறையில் நடந்துகொண்டதில்லை. சட்டத்தை மதிப்பவர்கள். இலங்கை சட்டத்தை ஒருபோதும் மீறியதோ அவமதித்து நடந்து கொண்டதோ இல்லை. நீதிமன்ற நடைமுறைகளை கௌரவமாக மதித்து நடக்கக் கூடியவர்கள். ஆனாலும் மத விவகாரங்கள் தொடர்பாக 1796ஆம் ஆண்டு இலங்கையை ஆட்சி செய்த ஒல்லாந்தர் காலம், அதன் பின்னர் பிரித்தானியர் காலம் முதல் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற இஸ்லாமிய தனியார் சட்டதிட்டங்கள் உள்ளன. அவை முஸ்லிம்களது திருமணம், விவாகரத்து, வாரிசு உரிமை போன்ற விடயங்களில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. அதற்காக ஒல்லாந்தர் அக்காலத்தில் எகிப்து, ஸ்பெய்ன் போன்ற நாடுகளுக்கு இலங்கையிலிருந்து முஸ்லிம் பிரதிநிதிகளை அனுப்பி அங்கு நடைமுறையில் கடைப்பிடிக்கப்படுகின்ற இஸ்லாமிய சட்டதிட்டங்களை அறிந்து வருமாறும் அவற்றிலிருந்து இலங்கை வாழ் முஸ்லிம்களது இஸ்லாமிய உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் இஸ்லாமிய மத அடிப்படை மரபுகளுக்கு ஏற்ற வகையில் சிலதை அமுல்படுத்த அங்கீகாரம் வழங்கினர்.

அதன் பின்னர் பிரித்தானியர் ஆட்சியிலும் இந்த நாட்டில் வாழும் முஸ்லிம்களது மத உரிமைகளில் கைவைக்க முற்படவில்லை. தொடர்ந்தும் முஸ்லிம்களது கோரிக்கைகளுக்கும் தேவைகளுக்குமேற்ப இஸ்லாமிய சட்டதிட்டங்களைக் கடைப்பிடிக்கவும் பின்பற்றவும் அனுமதி வழங்கியிருந்தனர்.

> **1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களின் மூலம் இஸ்லாமிய தனியார் சட்டங்களைக் கடைப்பிடிக்கவும் பின்பற்றவும் இலங்கை முஸ்லிம்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனாலும் கால சூழ்நிலைகளுக்கேற்ப சில விடயங்களில் மாற்றங்களும் திருத்தங்களும் செய்யப்பட்டு வந்துள்ளன.**

1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களின் மூலம் இஸ்லாமிய தனியார் சட்டங்களைக் கடைப்பிடிக்கவும் பின்பற்றவும் இலங்கை முஸ்லிம்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனாலும் கால சூழ்நிலைகளுக்கேற்ப சில விடயங்களில் மாற்றங்களும் திருத்தங்களும் செய்யப்பட்டு வந்துள்ளன. கடந்த கோட்டாபய கால ஆட்சியிலும் அதற்கு முன்னர் மஹிந்த ஆட்சியிலும் அந்த ஆட்சியின் பின்புலத்திலிருந்து செயற்பட்ட பௌத்த தீவிரவாத சிந்தனையாளர்கள் இஸ்லாமிய தனியார் சட்டங்களை ஒழித்துக்கட்டி ஒரே நாடு ஒரே சட்டம் என்ற வரையறைக்குள் முஸ்லிம்களை அடக்கி ஒடுக்க முற்பட்டனர்.

அதன் எதிரொலியாகத்தான் பேராசிரியர் மொத்திகாவின் அறிவுரைக்கிணங்க கொரோனா வைரஸ் தொற்று பரவிய காலங்களில் முஸ்லிம்களின் ஜனாஸாக்களையும் அவர்களது விருப்பத்தின்பேரில் அடக்கம் செய்ய அனுமதிக்காமல் தகனம் செய்து நெருப்பில் எரிக்கவேண்டுமென்று நடவடிக்கை எடுத்தனர். இறுதியில் இரண்டு வருடங்களில் ஜனாதிபதி பதவியை விட்டு விட்டு கோட்டாபய நாட்டை விட்டு ஓடும் நிலை ஏற்பட்டது. அதேபோன்று அதே இனவாதிகளுக்கு பால் வார்த்து அவர்களது கைப்பொம்மைகளாக இருந்த அப்போதைய பிரதமர் மஹிந்தவும் பதவி துறக்க வேண்டி ஏற்பட்டது. இறுதியில் கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களில் 67 இலட்சம் வாக்குகளுக்கு உரிமை கோரிய அரசியல் கட்சியான பொதுஜன பெரமுன கட்சி மிகவும் அடிமட்ட நிலைக்குத் தள்ளப்பட்டு தேசியப்பட்டியல் மூலம் நாமல் ராஜபக்ஷ பாராளுமன்றம் வரும் நிலை உருவாகியது.

இவ்வாறிருக்க, அர்ச்சுனா எம்.பி. கூறிய விடயம் இலங்கை வாழ் 20 இலட்சத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம் சனத்தொகையில் எல்லா ஆண்களும் 09 வயது பெண்பிள்ளைகளைத்தான் திருமணம் முடிப்பதுபோன்று பேசினார். இவ்வாறான இளவயது திருமணங்கள் தேடிப்பார்த்தால் பௌத்தம், இந்து, கிறிஸ்தவம் என்று எல்லா மதங்களுக்குள்ளும் நடந்துகொண்டு தான் இருக்கின்றன. ஆனாலும் பரவலாக அல்ல. ஆங்காங்கே ஒன்று அல்லது இரண்டாக இருக்கலாம். அதேநேரம் பெண்பிள்ளைகள் பருவ வயதை அடையும் பருவம் எதுவோ அதன் பின்னர் அந்தக் குடும்பத்தார் கருதும்போது திருமணம் முடித்துக் கொடுக்க முடியும். ஆனாலும் சர்வதேச மனித உரிமைகள் சாசனம் மற்றும் சிறுவர், பெண்கள் பாதுகாப்புக்கான சட்டங்கள் இத்தகைய பெண்பிள்ளைகளது சுகாதார, பாதுகாப்பு மற்றும் ஆரோக்கிய விடயங்களில் கவனம் செலுத்தியே திருமண வயதை சட்ட ரீதியான வயதாக நிர்ணயம் செய்து வைத்திருக்கின்றது. அவ்வாறே இஸ்லாம் மதத்திலும் அரசாங்க சட்டங்கள் எதுவோ அதனை மீறாமல் திருமண விடயங்களும் நடைபெற்று வருகின்றன.

ஆதலால் அர்ச்சுனா எம்.பி. அது தொடர்பான போதுமான அறிவும் தெளிவும் இல்லாமல் வாய்க்கு வந்தபடி பாராளுமன்றத்தில் உளறினார் என்றே கூறவேண்டும். அத்துடன், அவர் எப்போது பேச எழும்பினாலும் நிதானம், அமைதி, தெளிவு எதையும் காண முடிவதில்லை. பதற்றம், குழப்பம்,அமைதியின்மையே காணப்படுகின்றது. அதனால் அத்தகைய நிலைமைகளை மாற்றியமைத்துக்கொள்ள வேண்டும்.

கடந்த காலத்தில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்த நீலன் திருச்செல்வம், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்த இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், எஸ். செல்வராசா போன்றவர்களின் உரைகளை பாராளுமன்ற ஒலிப்பதிவு நூலகத்திலிருந்து எடுத்துக்கேட்டால் எந்தளவுக்குப் பொறுமையும் நிதானமும் தெளிவும் ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு அவசியமென்பதை புரிந்துகொள்ள முடியும். இதே வேலையைத்தான் பொதுபல சேனா அமைப்பின் ஞானசார தேரரும் செய்து வருகின்றார்.

அவர் கடந்த வாரம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், “நான் பல தடவைகள் பாராளுமன்றம் போக முயற்சி செய்தேன். அங்கு போனால் சிறப்புரிமை இருக்கின்றது. இஸ்லாம் மதம் பற்றி பேச வேண்டிய எவ்வளவோ இருக்கின்றன. அவற்றை பாராளுமன்றத்தில் சிறப்புரிமை யைப் பயன்படுத்தி பேசலாம். ஆனால், வெளியில் பேச முடியாது. பேசியதால்தான் இப்போது நீதிமன்றம் என்று அலைய வேண்டி இருக்கின்றது” என்றார்.

’இதிலிருந்து பாராளுமன்ற சிறப்புரிமை என்பது வாய்க்கு வந்ததையெல்லாம் உளறி கொட்டித் தீர்ப்பதற்கான ஆயுதமென்று கருதுகின்றார். அதைத்தான் அர்ச்சுனாவும் செய்தார். ஆனால், பாராளுமன்ற சிறப்புரிமை என்பது ஏனைய மதங்களை, இனத்தவர்களை அவதூறாக, வெறுப்பை ஏற்படுத்தும் வகையில் பேசி நிந்தனை செய்வதற்கான ஆயுதம் அல்ல. அது மக்கள் பிரச்சினைகளை முன்வைத்து மக்கள் பிரதிநிதி என்றவகையில் ஆட்சியாளர் களுக்கு எடுத்துக்கூறி தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க அரசாங்கத்தை வலி யுறுத்தச் செய்வதற்கான ஆயுதம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

# கூட்டணிக் கதவை திறந்துவைத்திருக்கும் விஜய்





**ரமணி**

சினிமாவில் உச்சத்திலிருக்கும் விஜய், அரசியலிலும் காலடி எடுத்துவைத்துள்ளார். அரசியல் கட்சியொன்றை விஜய் ஆரம்பிக்கப்போகிறார் என்றபோதே பரபரப்புத் தொற்றிக்கொண்டது. 'தமிழர் வெற்றிக் கழகம்' என்ற அரசியல் கட்சி ஆரம்பமாகி ஒரு வருடம் கடந்துவிட்டது. சினிமாவில் இருந்தபோது விஜய் போகுமிடமெல்லாம் மக்கள் கூட்டம் அலை மோதியதுபோலவே அரசியல் கட்சிக் கூட்டங்களிலும் மக்கள் வெள்ளம் கரைபுரண்டது. அந்த மக்கள் வெள்ளம் வாக்காக மாறுமா என்ற சந்தேகமும் தொடர்கதையாக உள்ளது.

விஜய் எதிர்பார்த்ததுபோல் மற்றைய கட்சிகளிலிருந்து யாருமே விஜய்யின் பக்கம் திரும்பியும் பார்க்கவில்லை. கட்சி ஆரம்பமானபோது இருந்த உற்சாகம் குறைந்துவிட்டது.

தனித்துப் போட்டியிட வேண்டுமென புருஸ்லி ஆனந்த் சொல்கிறார்.

ஆனால், கூட்டணிதான் வேண்டுமென பிரசாந்த் கிஷோரும் ஆதவ் அர்ஜுனாவும் சொல்கிறார்கள். ஆலோசகர்கள் அதிகரித்ததால் முடிவெடுக்க முடியாமல் விஜய் திணறுகிறார். கூட்டணிப் பேச்சுவார்த்தைகள் இரகசியமாக நடைபெறுகின்றன.

இந்நிலையில், மாவட்ட செயலாளர்களை நியமிக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. எல்லாக் கட்சிகளிலுமுள்ள பிரச்சினையை விஜய் இப்போதுதான் எதிர்நோக்குகிறார். உள்ளுக்கு உள்ளவர்களின் பிரச்சினைகள் காரணமாக மாவட்ட செயலாளர்களை நியமிக்கும் பணி தாமதமடைகிறது.

25 மாவட்ட செயலாளர்கள் நியமிக்கப்படவேண்டிய சூழலில், இன்றும் 19 மாவட்ட செயலாளர்களின் பட்டியலே வெளியாகுமென்று கூறப்படுகிறது. மீதமுள்ள 6 மாவட்ட செயலாளர்களை நியமிப்பதில் பல்வேறு சிக்கல் எழுந்துள்ளமை தெரியவந்துள்ளது.

நிர்வாகிகளைச் சந்தித்த தமிழர் வெற்றிக் கழகத் தலைவர் விஜய், நிர்வாக வசதிக்காக மொத்தமாக 120 மாவட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளதாக அறிவித்தார். அதன்பின் ஒவ்வொரு நாளும் 19 மாவட்ட செயலாளர்களை நியமனம் செய்து அறிவிப்பை வெளியிட்டார்.

அந்த ஆலோசனைக் கூட்டத்தின் முடிவில் த.வெ.க. சார்பாக மொத்தமாக 95 மாவட்ட செயலாளர்கள் நியமிக்கப்பட்டனர். இதன்பின் த.வெ.க. இரண்டாம் ஆண்டு தொடக்க விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் த.வெ.க. சார்பாக விரைவாக பூத் கமிட்டி மாநாடு நடத்தப்படுமென்று அறிவித்தார். இதனை ஜூலை மாதத்தில் நடத்த திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியது. இதனிடையே 25 மாவட்ட செயலாளர்களின் நியமனத்தை விரைவாக முடிக்க த.வெ.க. தலைவர் விஜய் உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில், த.வெ.க. சார்பாக 25 மாவட்ட செயலாளர்களின் அறிவிப்பு வெளிவருமென்று பார்க்கப்பட்டது. ஆனால், த.வெ.க. சார்பாக வெறும் 19 மாவட்ட செயலாளர்களின் நியமனம் தொடர்பான அறிவிப்பு மட்டுமே வெளியாகுமென்று தகவல் வெளியாகியுள்ளது.

சென்னை, திருவள்ளூர், விழுப்புரம், தூத்துக்குடி உள்ளிட்ட 6 மாவட்டங்களில் மாவட்ட செயலாளர்களை நியமிப் பதில் சிக்கல்கள் நிலவி வருவதாகக் கூறப்படுகிறது. ஏற்கனவே சில மாவட்டங்களில் மாவட்ட செயலாளர்கள் நியமனத்தில் விதிகள் கடைப்பிடிக்கப்படவில்லையென்று சர்ச்சை எழுந்தது. ஒரே தொகுதிகளில் செல்வாக்கானவர்கள் பலரும் இருப்பதால், மாவட்ட செயலாளர்கள் நியமனத்தில் இழுபறி நீடித்து வருகிறது. இதனால் நிர்வாகிகள் நியமனத்துக்குப் பின் மாவட்ட செயலாளர்கள் அதிகரிக்கப்படலாமென்றும் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக ஏற்கனவே த.வெ.க. தலைவர் விஜய்க்கு அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஆனந்த் கோரிக்கை வைத்துள்ளதாகவும் கூறப்படுகிறது. மற்ற கட்சிகளிலிருந்து வந்தவர்கள், மக்கள் இயக்கத்தில் பணியாற்றியவர்கள், பண பலம் கொண்டவர்கள் என்று பலரும் போட்டியில் இருப்பதால், 6 மாவட்டங்களில் மாவட்ட செயலாளர்களை நியமிக்க முடியாமல் விஜய் திணறுகிறார்.

2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. எதிர்ப்பு வாக்குகளை ஒருங்கிணைப்பதே முதல் வேலை என்றும் தி.மு.கவை தவிர வேறு யாரும் எங்களுக்கு எதிரி அல்ல என்றும் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி இப்போது கூறிவருகிறார்.

பா.ஜ.கவோடு கூட்டணி இல்லை என்று தெரிவித்து வந்தவர், இப்போது தி.மு.கவை தவிர, யாருமே எங்களுக்கு எதிரி அல்ல என இறங்கிவந்துள்ளார்.

அதேநேரம் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகத்தோடு அ.தி.மு.க. நடத்திய பேச்சுவார்த்தை முறிவடைந்ததாகச் சொல்லப்படுகிறது.

பாரதீய ஜனதாவோடு கூட்டணி சேர்ந்தால் அ.தி.மு.கவுக்கு சில சாதகங்கள் இருந்தாலும் பல பாதகங்கள் இருக்கின்றன. சிறுபான்மையினரின் வாக்குகள் அ.தி.மு.கவுக்கு கிடைக்காதென்பது மட்டுமன்றி, கடந்த சில மாதங்களாக தி.மு.க. கட்டமைத்து வரும் மாநில உரிமைகளுக்கான போராட்டத்தில், பா.ஜ.கவுக்கு எதிராக கடுமையான பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டுக்கே எதிரி பா.ஜ.க. என முதல்வர் ஸ்டாலின் தொடர்ந்து பேசியும், எழுதியும் வருகிறார். தி.மு.க. இதை மிகப்பெரிய பிரசார இயக்கமாக முன்னெடுக்கிறது.

இந்நிலையில், பா.ஜ.கவோடு சேர்ந்தால் அ.தி.மு.கவும் தமிழ்நாட்டுக்கு எதிரியென சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கடுமையாக பிரசாரம் செய்யும். இதன்மூலம் தனது ஆட்சியின் நிர்வாகத் தோல்விகளை தி.மு.க. எளிதில் மூடி மறைக்கும். இந்த அடிப்படையில்தான் விஜய் தரப்போடும் தொடர்ந்து பேசி வருகிறது அ.தி.மு.க. ஆனால், விஜய்யின் நிபந்தனைகள் புதிது புதிதாக இருக்கின்றன.

பா.ஜ.கவோடு அணிசேர்வதில் அ.தி.மு.கவுக்கு இருக்கும் பாதகங்களைத் தனக்கு சாதகமாக்கி விஜய் தரப்பு இப்படி புதிய நிபந்தனைகளை விதித்துவருகிறது.

அ.தி.மு.கவுக்கும் த.வெ.கவுக்கும் இந்த அதிகாரபூர்வமற்ற பேச்சுவார்த்தையை நடத்தி வருபவர் சமீபத்தில் விஜய் கட்சியில் இணைந்த ஆதவ் அர்ஜுனா தான். அவர் மூலமாகத்தான் இந்த நிபந்தனைகள் எடப்பாடி தரப்புக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

கடந்த சில நாட்களாக விஜய் தரப்பு வைத்திருக்கும் புதிய நிபந்தனைகளைப் பற்றி, அ.தி.மு.கவின் முக்கிய நிர்வாகி களிடம் தனிப்பட்ட முறையில் ஆலோசனை செய்து வருகிறார் எடப்பாடி.

டிசம்பருக்குப் பிறகுதான் கூட்டணி விஷயத்தில் விஜய் முக்கிய முடிவெடுப்பா ரென பிரசாந்த் கிஷோர் பேட்டிகளில் கூறி வருகிறார். அதேபோல, ''பா.ஜ.க., கீ.ஜ.க. எல்லாம் இப்ப கேக்காதீங்க. தேர்தலுக்கு இன்னும் காலம் இருக்கிறது'' என எடப்பாடி பழனிசாமியும் கூறிவருகிறார்.

117 இடங்களை விஜய் கேட்கிறார். இன்னமும் தேர்தலைச் சந்திக்காத விஜய் தனக்கு 25 சதவீத வாக்கு இருப்பதாகக் கணக்குக் காட்டுகிறார். அமைச்சரவையில் இடம் கேட்கும் விஜய் முதலமைச்சரிலும் பங்கு கேட்கிறார். இரண்டரை வருடம் முதலமைச்சர் பதவியை விஜய் கேட்டுள்ளார்.

சசிகலா சிறைக்குப் போகும்போது, நம்பிக்கையானவர் தனது சொல்லைத் தட்டமாட்டார். அ.தி.மு.க. தனது கையில் இருக்கும் என நம்பியே எடப்பாடியை முதலமைச்சராக்கினார். கட்சிக்குள் பலமானதாக இருந்த சசிகலாவையும் ஓபிஎஸ்ஸையும் தூக்கி எறிந்த எடப்பாடிக்கு விஜய் ஒரு பொருட்டல்ல. விஜய்யின் கட்சியைப் பற்றிய சர்வேவை எடப்பாடி எடுத்துள்ளதாகவும் செய்தி வெளியாகியுள்ளது.

எடப்பாடியை அகற்றிவிட்டு அ.தி.மு.கவிலிருந்து வெளியேறிய அனைவரையும் ஒன்றாக்க பாரதீய ஜனதா திட்டமிட்டுள்ளது. தேர்தல் நெருங்கும் சமயத்தில் பல அதிரடிகள் அரங்கேறுமென்பது நிச்சயம்.

# கணித ஒலிம்பியாட் போட்டியில் தங்கம் வென்ற மாணவி









சர்வதேச ரீதியாக ஒவ்வொரு ஆண்டும் 28 நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி நடைபெற்றுவரும் தென்கிழக்காசிய கணித ஒலிம்பியாட் போட்டிகள் (Southeast Asian Mathematical Olympiad (SEAMO-X) இம்முறையும் கடந்த ஜனவரி 18ஆம் திகதி நடைபெற்றது. அதற்குரிய பரிசளிப்பு நிகழ்வு 19ஆம் திகதி மலேஷியா, கோலாலம்பூரில் இடம்பெற்றது.

இந்நிலையில் இப்போட்டியில் பொலனறுவை முஸ்லிம் தேசிய பாடசாலை மாணவி மொஹமட் நபீல் இல்மா ஸைனப் தங்கப்பதக்கத்தை வென்று நாட்டுக்கு பெருமை சேர்த்துள்ளார். அதற்குரிய பரிசளிப்பு விழா கடந்த புதன்கிழமை (12) பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

***3 தசாப்த காலத்துக்கு முன்பு அவுஸ்திரேலியா நாட்டுக்கு புலம் பெயர்ந்த பருத்தித்துறை - புலோலி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட 74 வயதுடைய செல்வத்தம்பி குலராசா யாழ்ப்பாண - புத்தூர் சென். லூக்ஸ் மெதடிஸ்த மிசன் வைத்திய சாலைக்கு (St.Luke's Methodist Mission - hospital, Puttur) அத்தியாவசிய சுகாதார வசதிகளை பெற்றுக் கொடுக்கும் நன்நோக்கத்துக்காக கொழும்பிலிருந்து 450 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள வடபகுதி புத்தூர் நகரை துவிச்சக்கர வண்டி மூலம் 3 நாட்களில் சென்றடைந்து சாதனை படைத்துள்ளார். இந்த சவாரியில் அவரது இரு ஆண்பிள்ளைகள் உட்பட 70 துவிச்சக்கர வண்டியினர் பங்கு பற்றியிருந்தனர். இதன் மூலம் 1,30,000 பவுண்ட் பணம் அவர்களால் திரட்ட முடிந்தது.***




## Now you can subscribe to the below Newspapers mentioned Published by Liberty Publishers.

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address : - The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

Hotline :- 076 136 7623

Tel No: - 0112 127 209

DELIVERY FREE



# வடமாகாணத்தில் அபாயத்தை எதிர்நோக்கும் உளுந்துச்செய்கை

**சிவகுமார் திவியா**

தெற்கு ஆசியாவை பூர்வீகமாகக்கொண்டது உளுந்துச் செய்கை. இலங்கையில் விளையும் தானியங்களில் உளுந்து முக்கியமானது. உளுந்துச் செய்கையானது வவுனியாவில் அதிகமாக செய்கைபண்ணப்பட்டு வருகின்றது. உளுந்துக்கான கேள்வியானது அதிகமாக இருக்கின்றது.

இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் உட்பட இந்தியத் தமிழர் பலருக்கு உளுந்து முக்கிய உணவுப்பொருளாக உள்ளது.

முக்கியமாக, தமிழ் மக்களின் உணவுப் பொருட்களில் உளுத்தங்களி, வடை, தோசை மற்றும் இட்லி போன்ற உணவுப்பொருட்களுக்கு உளுந்து முக்கிய சேர்க்கைப்பொருளாக பயன்படுத்தப்பட்டும் வருகிறது. இந்நிலையில் உளுந்தானது சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை தெம்பையும் புத்துணர்ச்சியையும் கொடுத்து அவர்களது உடலைப் பாதுகாக்கின்றது.

தமிழர்களின் வீட்டு விசேடங்களில் உளுந்திலான வடை, தோசை மற்றும் இட்லி போன்ற சிற்றுண்டிகள் தயாரித்து விருந்தினர்களுக்கு வழங்கும் நடைமுறைகளும் எமது பிரதேசங்களில் வழக்கமாக உள்ளன.

இன்றைய சூழ்நிலையில், இலங்கையில் உளுந்தானது ஓர் அரசியல் ரீதியான சர்ச்சையை கூட ஏற்படுத்தியுள்ளதென்றால் அதை மறுக்க முடியாது. இந்நிலையில், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கடன்பட்டும் நகைகளை அடகு வைத்தும் வவுனியாவில் செட்டிகுளம், ஓமந்தை, பாவற்குளம், சூடுவெந்தபுலவு, நெடுங்கேணி, சிப்பிக்குளம் மற்றும் புறநாட்டாங்கல் என பல பகுதிகளிலும் உளுந்துச் செய்கையில் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

வன்னியில் அதிகளவான குளங்களைக்கொண்ட வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் தேவையான உளுந்துச்செய்கை பண்ணக்கூடிய வாய்ப்புகள் உள்ளபோதும் தங்களுக்கான அரசாங்கத்தின் சலுகைகள் மற்றும் வரப்பிரசாதங்கள் கிடைப்பதில்லையென விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அத்துடன், வன்னிப் பிரதேசமானது காடுகள் சூழ்ந்த பிரதேசமாகக் காணப்படுவதால் யானைகளின் தாக்குதல்களால் உளுந்து பயிர்ச்செய்கை அழிவடைந்து வருவதுடன், யானை வேலி அமைப்பதில் வன்னிப் பகுதியில் அரசாங்கம் அசமந்தமாக இருப்பதாகவும் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

2024-2025ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெரும்போகத்தில் 5,650 ஹெக்டேயர் அளவில் வவுனியாவில் உளுந்துச்செய்கை பண்ணப்பட்டது. இருப்பினும், சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட வெள்ளத்தாலும் நோய்த் தாக்கத்தாலும் இம்முறை உளுந்துச் செய்கையாளர்கள் பலர் பாதிப்படைந்துள்ளதுடன், பயிர்ச்செய்கைக்கு செலவுசெய்த பணத்தைக் கூட பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

உளுந்து அறுவடைக்குத் தயாராகவிருந்த வேளை, வடமாகாணத்தில் தொடர்ச்சியாக கனமழை பெய்தமையால் உளுந்தானது செடிகளிலேயே முளைத்துவிட்டது. இதனால் அதனை அறுவடை செய்ய முடியாத நிலையில் தமது செலவினத்தைக்கூட மீளப்பெற முடியாதவாறு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். உளுந்து 100 வீதம் அழிவடைந்துள்ளது.

உளுந்தானது இலங்கையின் வடக்கு பகுதியில் - அதாவது, வன்னி பகுதியில் அதிகளவாகச் செய்கைபண்ணப்பட்டு வருகின்றபோதிலும் இலங்கைக்குத் தன்னிறைவு அடையக்கூடிய வகையில் விளைச்சல் கிடைப்பதில்லை.

உளுந்து இறக்குமதி செய்யப்பட்ட நிலையில், உளுந்துக்கு நாட்டில் பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டது. அதனைத்தொடர்ந்து நாட்டின் பல பிரதேசங்களில் உளுந்தின் விலையானது ஒரு கிலோ 650 ரூபா முதல் 800 ரூபா வரை விற்கப்பட்டதுடன், சிற்றுண்டிக் கடைகளில் வடையொன்று 100 முதல் 150 ரூபாவாக உயர்வடைந்தது. அந்த வகையில் சராசரி வருமானத்தைக்கொண்ட மக்களிடையே உளுந்தின் பயன்பாடு வெகுவாகக் குறைந்ததுடன், இளம்பராயத்தினர் பெரும் ஊட்டச்சத்துக் குறைபாட்டை எதிர்நோக்கும் அபாயமும் ஏற்பட்டது.

இருந்தபோதும் நாட்டில் வடக்கு மற்றும் கிழக்கு, மத்திய மாகாணங்களைச் சேர்ந்த விவசாயிகள் பெருமளவில் 2021, 2022, 2023ஆம் ஆண்டு உளுந்துச் செய்கையை அதிகப்படுத்தியதுடன், அதிக விளைச்சலையும் பெற்றுக்கொண்டனர்.

உளுந்தை சந்தையில் அதிக விலைக்கு விற்று இலாபம் பார்க்கும் ஆசையில் உளுந்து மாபியாக்கள் உளுந்தை விவசாயிகளிடம் குறைவான விலையில் கொள்வனவுசெய்து பதுக்க ஆரம்பித்தன.



அரசாங்கமானது உளுந்தின் இறக்குமதியைத் தடைசெய்யாத நிலையில், உளுந்து பதுக்கல் மாபியாக்கள் சந்தையில் உளுந்தின் விலையை நிர்ணயம் செய்வார்களென்ற நிலை ஏற்பட்டதையறிந்த அரசாங்கமானது விவசாயிகளையும் உளுந்துச் செய்கையையும் பாதுகாக்கும் நோக்கத்துடன் விவசாயிகளிடமிருந்து அவர்களுக்கு இலாபம் தரும் வகையில் நிர்ணயிக்கப்பட்ட விலையில் உளுந்தை கொள்வனவுசெய்யும் என்ற அறிவிப்பை கமநல சேவைகள் திணைக்களங்களூடாக வெளியிடவேண்டும். அத்துடன் நின்றுவிடாது, உளுந்தானது இறக்குமதி செய்யப்படுவது நிறுத்தப்பட்டதென்ற அறிவிப்பையும் இலங்கை அரசு வெளியிடவேண்டும்.

இது தொடர்பாக வவுனியா மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் விமலரூபன் கருத்துத் தெரிவிக்கும்போது,

வவுனியா மாவட்டத்தில் மாத்திரம் 14 ஆயிரம் ஏக்கரில் உளுந்து பயிரிடப்பட்டுள்ளது. வன்னிப் பகுதியில் காலநிலை மாற்றத்தால் ஏற்பட்ட அதிகளவான மழைவீழ்ச்சி காரணமாக இரண்டாயிரம் ஏக்கர் உளுந்துச்செய்கை பாதிப்படைந்துள்ளது. இருந்தபோதும் உளுந்தின் விளைச்சலானது பெரும் பாதிப்பை சந்தித்திருக்கவில்லை. விவசாயிகளையும் அவர்கள் பயிரிட்ட உளுந்தையும் பாதுகாக்கும் நோக்கத்திலேயே அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது- என்றார்.

அரசாங்கமானது இறக்குமதிக்கு அனுமதி வழங்கியுள்ளபோதிலும் உளுந்து இறக்குமதியாளர்கள் இப்போதைக்கு உளுந்தை இந்தியாவிலிருந்தே இறக்குமதிசெய்ய முடியும். உளுந்தானது கிலோ இந்திய ரூபாவில் 100 ரூபாவுக்குப் பெற்றுக்கொள்ள முடியும். இலங்கையில் உளுந்தின் பெறுமதியானது 250 ரூபாவாக இருக்கும். அத்துடன், ஒரு கிலோ இறக்குமதி உளுந்துக்கு அரசாங்கமானது 350 ரூபா வரி அறவிடுவதால் இறக்குமதியாளர்கள் தங்கள் போக்குவரத்துடன் ஒரு கிலோ கிராம் உளுந்தை 650 ரூபாவுக்கு மேல் விற்க முடியும்.

இந்த முடிவை அரசாங்கம் விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் எடுத்துள்ளது. உளுந்து மாபியாக்கள் வன்னிப் பகுதியில் ஒரு கிலோ உளுந்தை 400 ரூபாவுக்கு கொள்வனவுசெய்து பதுக்கியுள்ளனர். ஆகவே, உளுந்து பதுக்கலைத் தடுப்பதுடன், சந்தையில் உளுந்து தட்டுப்பாட்டை நீக்கி உளுந்தில் இலங்கை தன்னிறைவை நோக்கிப் பயணிக்கும் முகமாக அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

உளுந்துத் தட்டுப்பாடு இல்லாத காலப்பகுதியில் விவசாயிகள் தங்கள் உளுந்தை கிலோ ஒன்று 180 ரூபாவரை விற்பனை செய்திருந்தனர். அதன் காரணமாக அரசானது இப்போதைக்கு விவசாயிகளுக்கு உத்தரவாத விலையாக 220 ரூபாவை நிர்ணயம் செய்துள்ளது. இதனால் உள்ளூர் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படமாட்டார்கள்.

அண்மையில் வவுனியா, செட்டிக்குளம் பிரதேசங்களில் விவசாயிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் ஒரு கிலோ உளுந்தை 500 ரூபாவுக்கு விற்றால் போதும் என்ற கருத்தை விவசாயிகள் வெளியிட்டிருந்தனர்.

இறக்குமதி காரணமாக விவசாயிகள் பாதிக்கப்படுவார்களென்று கூக்குரலிடுபவர்கள் உளுந்தை அதிகளவில் குறைவான விலைக்கு வாங்கி பதுக்கி வைத்திருப்பவர்கள். விவசாயிகள் எந்தவிதத்திலும் இலாபமடைய மாட்டார்கள். உளுந்தின் விலை உத்தேச விலைக்குக் குறையுமானால் உடனடியாக கமநல சேவைகள் திணைக்களமானது தலையிட்டு உளுந்தை விவசாயிகள் பாதிக்கப்படாத வகையில் கொள்வனவு செய்யவேண்டும். உளுந்தின் விலையேற்றமானது உளுந்தை நுகரும் மக்களை கவலைகொள்ள வைத்த நிலையில், அரசாங்கமானது உளுந்தையும் விவசாயிகளையும் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளும் என்ற அறிவிப்பு வந்தால் மக்களுக்கு நிம்மதியைத் தரும்.





உளுந்து, கௌப்பி மற்றும் பயறு போன்ற தானியங்களை இறக்குமதி செய்வது குறித்து உணவு பாதுகாப்புக் குழுவிடம் முன்மொழிவு உள்ளது. குறித்த தானியங்களை மீள இறக்குமதிசெய்ய அமைச்சரவையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உளுந்து, கௌப்பி மற்றும் பயறு போன்ற தானியங்களின் இறக்குமதி நிறுத்தப்பட்டது. தற்போது மக்களின் நுகர்வு அதிகரித்துள்ளதால் இறக்குமதி செய்ய யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. தற்போதைய தட்டுப்பாடு காரணமாக குறித்த தானியங்களின் விலை அதிகரித்துக் காணப்படுகின்றதென வர்த்தக அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டில் உளுந்து தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் உளுந்து இறக்குமதி செய்து விற்பனைசெய்வதற்கு அரச நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும் புறக்கோட்டைச் சந்தையில் அதிகளவு உளுந்து கையிருப்பு எவ்வாறுள்ளது என்பதைக் கண்டறியுமாறு அரச நிறுவனங்கள் நுகர்வோர் அதிகாரசபையிடம் முறைப்பாடு செய்துள்ளன.

அத்தியாவசிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்கிறோமென்ற போர்வையில் கொள்கலன்களில் மறைவாக அடைத்து (வரி செலுத்தாமல்) பல்வேறு இறக்குமதியாளர்களால் உளுந்து இறக்குமதி செய்யப்படுவதாலேயே சந்தையில் தேவைக்கும் அதிகமான உளுந்து கையிருப்பு இருப்பதாக சந்தேகம் எழுந்துள்ளது. எனவே, குறித்த மொத்த வியாபாரிகளின் களஞ்சியசாலைகளைக் கண்காணிப்புக்கு உட்படுத்துமாறு நுகர்வோர் அதிகாரசபையிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாக அரசு நிறுவன அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் உளுந்து விவசாயிகளைப் பாதிக்காத வகையில் அரச வர்த்தக கூட்டுத்தாபனம் மற்றும் உணவு ஊக்குவிப்புச் சபை என்பன தலா 500 மெற்றிக் தொன் உளுந்தை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி, மேற்படி அரச நிறுவனங்கள் உளுந்தை இறக்குமதி செய்து அவற்றை விற்பனை செய்ய முற்படும்போது புறக்கோட்டை உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலுள்ள களஞ்சியசாலைகளில் ஏற்கனவே சட்ட விரோதமாக கொண்டுவரப்பட பெருமளவு உளுந்து கையிருப்பிலுள்ள நிலையில், அரசு நிறுவனங்கள் கொண்டுவந்த உளுந்து தொகையை விற்பனைசெய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சில மோசடி இறக்குமதியாளர்கள் தாம் விற்பனை செய்கின்ற உளுந்து, அரச நிறுவனங்களால் இறக்குமதிசெய்யப்பட்டவை எனக் கூறி அவற்றை விற்பனை செய்வதாகவும் அவை உண்மையில் அரச நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்படாத தரமற்ற உளுந்து எனக் கண்டறியப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, அனுமதியின்றி இறக்குமதி செய்யப்பட்ட உளுந்து களஞ்சியசாலைகளைப் பரிசோதித்து அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தை ஈடுசெய்வதற்கும் குறித்த மோசடி வியாபாரிகளுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு நுகர்வோர் அதிகாரசபைக்கு அரச நிறுவனங்களின் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வவுனியா மாவட்டத்தில் உளுந்து செய்கையில் ஈடுபட்டவர்களும் கிருமிநாசினி இறக்குமதி தடை மற்றும் விலையுயர்வு காரணமாக பெரும் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக விபரிக்கின்றார்கள்.

"65,000 ரூபா செலவில் ஓர் ஏக்கரில் உளுந்து பயிரிட்டு மூன்று மாதங்களில் 20 ஆயிரம் ரூபா நட்டமடைந்துள்ளேன். கடந்த காலங்களில் ஓர் ஏக்கருக்கு சராசரியாக 600 கிலோ கிராம் விளைச்சலைப் பெற்ற நாங்கள் தற்போது சராசரியாக 5கிலோ கிராம் உழுந்தையே பெற்றுள்ளோம். தட்டுப்பாடு காரணமாக பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட பலர் முதலிடுவதற்கு பணம் இல்லாமல் செய்கையில் ஈடுபடுவதையே கைவிடும் நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளோம்" என தமது மனக்குமுறலையும் விவசாயியொருவர் வெளியிட்டார்.

வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரை கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், 2019-2024 காலப்பகுதியில் சோளன் பயிர்ச்செய்கை பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட விவசாயத் திணைக்களப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

வவுனியாவில் கடந்த சில நாட்களாக பெய்த கனமழை காரணமாக உளுந்துச் செய்கை முற்றாக அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வடக்கில் - வவுனியாவில் அதிகமாக உளுந்து செய்கைபண்ணப்பட்டு வருகின்றது. உளுந்துக்கான கேள்வியானது அதிகமாக இருக்கின்றது.

# உள்ளூராட்சி மன்றங்களின் பரிணாமமும் சவால்களும்






**இம்தியாஸ் ஹஸன்**

இலங்கை, மே மாதத்தின் முதல் வாரத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குத் தயாராகும் நிலையில், அரசியல் நிலைமை இன்னும் தெளிவற்றதாகவே உள்ளது. பாரம்பரிய அரசியல் வகுப்பாரின் மீது ஏற்பட்ட விரக்தியின் அலையில் அதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்திசெய்ய போராடி வருகிறது. அவர்களின் பொருளாதாரக் கொள்கைகள் மக்கள் எதிர்பார்த்த நிவாரணத்தை வழங்கத் தாமதிக்கின்றது. மேலும், அவர்களின் நிர்வாகப் பாணி அவர்களின் நிர்வாக திறன்களைப் பற்றிய கேள்விகளை எழுப்பியுள்ளது. அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவுகள், மெதுவான கிராமப்புற வளர்ச்சி, வேலைவாய்ப்புகள் மற்றும் இன, மத கவலைகளை நிவர்த்திசெய்யத் தவறியமை போன்ற இன்னோரன்ன விடயங்கள் அவர்களின் செல்வாக்கில் சரிவை ஏற்படுத்தியுள்ளன.

மறுபுறத்தில், எதிர்க்கட்சிகள் மக்கள் செல்வாக்கை இழந்து, பிளவுபட்டு பலவீனமான நிலையில் இருந்துவருகிறது. ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி போன்ற பாரம்பரிய கட்சிகள் ஒரு ஐக்கிய முன்னணியை அல்லது ஒரு கட்டாய மாற்று தொலைநோக்கை முன்வைக்கத் தவறிவிட்டன. முஸ்லிம் மற்றும் தமிழ்க் கட்சிகள் இன்னும் தங்கள் கூட்டணிகளைப் பற்றி விவாதித்து வருகின்றன. இது அவர்களின் வாக்காளர் தளத்தைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

சுருங்கக்கூறின், இலங்கை ஒரு பலவீனமான ஆளும் கட்சியுடனும் அதைவிட பலவீனமான எதிர்க்கட்சியுடனும் இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அணுகுகின்றது. எனவே, இந்தத் தேர்தல் கட்சிகளின் மக்கள் செல்வாக்கைப் பரீட்சித்துப் பார்க்கும் தேர்தலாகப் பார்க்காது. மாறாக, இது அடிமட்ட அளவில் உண்மையான மாற்றத்தைக் கொண்டுவரக்கூடிய சரியான வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்து உள்ளூராட்சி மன்றங்கள் திறம்பட செயற்பட்டு வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி தங்களுடைய பிரதேசங்களை தாங்களே நிர்வாகம் செய்து அப்பிரதேசங்களை அபிவிருத்திசெய்து நாட்டின் கட்டமைப்பை மாற்றும் செயன்முறைத் திட்டம் பற்றியது என்பதை அனைவரும் கருத்திற்கொள்ள வேண்டும்.

தேசிய அரசியல் முக்கியமானதென்றாலும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் மூலமாகவே அடிப்படை மாற்றங்கள் உருவாகின்றன என்பதை மறுக்க முடியாது. மக்கள் தேர்ந்தெடுக்கும் வேட்பாளர்கள், முன்வைக்கப்படும் கொள்கைகள் மற்றும் தேர்தல் பிரசாரங்கள் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றன என்பவை இலங்கை எதிர்காலத்தில் ஒரு சரியான வளர்ச்சிப் பாதையில் செல்லுமா அல்லது அரசியல் சூழ்ச்சிகளுக்குள் சிக்கித் தவிக்குமா என்பதைத் தீர்மானிக்கும்.

**2023ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் ஒத்திவைப்பு**

2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல், பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகளால் ஒத்திவைக்கப்பட்டது. தேர்தல் ஆணையம் நிதிப் பற்றாக்குறை மற்றும் பிற சிக்கல்களைக் காரணமாகக் கூறி பல தடவைகள் தேர்தலை தள்ளிவைத்தது.

இந்த ஒத்திவைப்பு மக்கள் ஆர்ப்பாட்டத்துக்கும் சட்டபூர்வமான எதிர்ப்புகளுக்கும் வழிவகுத்தது. இந்தத் தேர்தலை ஒத்திவைப்பது ஜனநாயக உரிமைகளை மீறுவதாகக் கருதப்பட்டது. தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் மையம் (CMEV) இந்தத் தீர்மானத்தைக் கடுமையாக விமர்சித்தது. இது மக்களின் ஜனநாயக நம்பிக்கையைக் குறைக்கும் ஒரு செயலாகக் கருதப்பட்டது.

2024ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் இலங்கை உயர் நீதிமன்றம் 2023ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் ஒத்திவைப்பை மக்கள் அடிப்படை உரிமைகளை மீறுவதாகத் தீர்ப்பளித்தது. ஜனநாயகக் கோட்பாடுகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி உடனடியாகத் தேர்தலை நடத்த தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டது.

ஜனாதிபதித் தேர்தல் அதனைத் தொடர்ந்து நடந்த பொதுத் தேர்தல் போன்றவற்றில் பெற்ற அமோக வெற்றியை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு ஆளும் தேசிய மக்கள் சக்தி, உள்ளூராட்சி மன்றங்களையும் கைப்பற்றிவிடலாம் என்ற எதிர்பார்ப்போடு தேர்தலுக்கான ஆயத்தங்களைத் தற்போது தொடங்கியுள்ளது.

நீண்டகாலத்துக்குப் பின் நடைபெறப் போகும் இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மக்களின் ஜனநாயக உரிமைகளை மீண்டும் உறுதிசெய்வதோடு, புதிய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மக்களிடையே எந்தளவுக்கு ஆதரவைப் பெற்றுள்ளன என்பதை கண்காணிக்கவும் உதவும்.

இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்கள் ஒவ்வொரு தேர்தலுக்குப் பிறகும் முக்கியமான மாற்றங்களைச் சந்திக்கின்றன என்பதை காலாகாலமாக அனுபவித்து வருகிறோம். நாட்டில் பல சீர்திருத்தங்களும் அரசியல் மாற்றங்களும் ஏற்பட்டுள்ளபோதிலும் இந்த உள்ளூராட்சி மன்றங்களின் செயற்றிறன் இன்னும் சந்தேகத்துக்குரியதாகவே உள்ளது.

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குப் பிறகும் பிரதேச சபைகள், நகர சபைகள் மற்றும் மாநகர சபைகள் மீது ஆட்சிபுரியும் அதிகாரம், வெற்றிபெற்ற அரசியல் கட்சியின் கட்டுப்பாட்டில் செல்கிறது. வெற்றிபெற்ற கட்சி அரசியல் நியமனங்களை முன்னிலைப்படுத்துவதால், செயற்றிறன் குறைகிறது. இதனால் அரசியல் நிலைப் பாடுகள் பலவீனமாவதால் இந்த அமைப்புகள் பொதுப் பயன்பாட்டு நிறுவனங்களாக இல்லாமல் அரசியல் போர்க்களமாக மாறிவிடுகின்றன. பல நேரங்களில் தேர்தலுக்குப் பிறகும் உள்ளூராட்சி மன்றங்கள் சரியாக இயங்குவதில் தாமதம் ஏற்படுகிறது.

உதாரணமாக, 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னும் கூட்டணிக் கட்சிகளுக்குள் ஏற்பட்ட மோதல்களால் தலைமைப் பதவிகள் மற்றும் குழுக் கட்டமைப்புகள் தொடர்பான பிரச்சினைகள் காரணமாக புதிய நிர்வாகம் செயற்பட பல மாதங்கள் காலதாமதமாகின.

இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்கள் நிதி மற்றும் நிர்வாக சுயாட்சியைக் கொண்டிருக்கவில்லையென்பது பெரும் குறைபாடாகக் காணப்படுகின்றது. மத்திய அரசின் நிதியுதவியை அவை பெரிதும் சார்ந்திருப்பதனால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீடுகள் பெரும்பாலும் தாமதமாகின்றன. மேலும், அவற்றுக்குச் சொந்த வருவாய் ஆக்கத்துக்கு அதிக கட்டுப்பாடுகளும் உள்ளன. இவ்வாறான காரணங்களால் உள்ளூராட்சி மன்றங்களின் செயற்றிறன் பாதிக்கப்படுகின்றன.

சாலை அமைப்பு, சாலை பராமரிப்பு, குப்பை மேலாண்மை, பொதுச் சுகாதாரம் மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சி போன்ற பொதுச் சேவைகளை வழங்குவதை உள்ளூராட்சி மன்றங்கள் மேற்கொள்ள வேண்டிய நிலையில் அவை பெரும்பாலும் தோல்வியடைகின்றன. பெரும்பாலும் ஒப்பந்தங்கள் அரசியல் உறவுகளை மையமாகக் கொண்டு வழங்கப்படுவதால் திறமையானவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்காமை, நிதிப் பற்றாக்குறை, நிர்வாகக் குறைபாடு, ஊழல், குடும்ப ஆதரவு, பொது நிதிகளைத் தவறாகப் பயன்படுத்துவது மற்றும் திறமையற்ற தலைமைத்துவம் போன்ற காரணங்களால் பல உள்ளூராட்சி மன்றங்கள் அடிப்படைச் சேவைகளைக் கூட வழங்க முடியவில்லை. இவை மாத்திரமன்றி ஒவ்வொரு முறையும் புதிய அரசியல் கட்சி உள்ளூராட்சி அதிகாரத்தைப் பெறும்போது, முன்னதாக இருந்த திட்டங்கள் கைவிடப்பட்டு விடுகின்றன. இதனால் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. மேலும் பொதுப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதிகள் வீணாகின்றன.

பெரும்பாலும் உள்ளூராட்சி மன்றங்கள் சரியான பாதையில் செல்லவில்லையென்பது மக்களின் ஆதங்கமாகும். சில நகர சபைகள் மட்டும் அதிக நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டால் சிறப்பாகச் செயற்படுகின்றன. ஆனால், பெரும்பாலான கிராமப்புற பிரதேச சபைகள் மற்றும் சிறிய நகர சபைகள் இன்னும் பல பிரச்சினைகளைச் சந்திக்கின்றன. அவற்றில் பிரதானமானது திறமையற்ற தலைமைத்துவமாகும். நிர்வாகம் மற்றும் நிதி மேலாண்மை தொடர்பான அறிவில்லாமல் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

இதற்குக் காரணம் அந்தந்தப் பிரதேசங்களில் செல்வாக்குச் செலுத்துகின்ற அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள் என்ற தகைமையை மட்டும் கொண்டிருப்பவர்களும் பணம் படைத்தவர்களுமே உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடுகின்றனரே தவிர, திறமையுள்ளவர்களுக்குப் பாரம்பரிய அரசியல் கட்சிகளில் இடம் கிடைக்காமல் போகின்றது. இந்த நிலைமை மாற்றியமைக்கப்பட்டு திறமையானவர்கள் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டுமென்பதை அரசியல் கட்சிகளின் தலைமைகளுக்கு வலியுறுத்துகிறோம்.

**வேட்பாளர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்?**

இதயசுத்தியோடு நிர்வாகத்துக்குப் பங்களிக்கக்கூடிய வேட்பாளர்களை நியமிப்பதை உறுதிசெய்ய அரசியல் கட்சிகள் தங்கள் தேர்வு செயல்முறையை மறுபரிசீலனை செய்யவேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர். சில அத்தியாவசிய நடவடிக்கைகள் பின்வருமாறு:

**தகுதி அடிப்படையிலான தேர்வு**

நிதி அதிகாரம் அல்லது அரசியல் தொடர்புகள் உள்ளவர்களுக்கு முன்னுரிமையளிப்பதற்குப் பதிலாக முடிவுகளை வழங்கக்கூடிய திறனின் அடிப்படையில் கட்சிகள் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

**01. தூய்மையான அரசியல்வாதிகள்**

ஊழலற்ற அரசியலுக்காக பாடுபடும் மக்கள் பணத்தை முறையான திட்டங்களுக்காக பயன்படுத்தக்கூடிய நேர்மையான வேட்பாளர்கள் தேவைப்படுகின்றனர்.

சொந்த இலாபத்துக்காக அல்லாது சமூக முன்னேற்றத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுபவராக இருக்க வேண்டும்.

**02. இளைய தலைமுறையின் பிரதிநிதிகள்**

வயதான பழைய அரசியல் பாரம்பரியத்தை உடைத்தெறிந்து நவீன யுகத்துக்கேற்ப திட்டமிடக்கூடிய இளைய தலைமுறையின் ஆற்றல்மிக்க தலைவர்கள் முன்வர வேண்டும்.

தொழில்நுட்ப அறிவுகொண்ட பிரதேச அபிவிருத்திக்கான புதிய யோசனைகளை கொண்டுவரக்கூடியவராக இருக்கவேண்டும்.

**03. மக்கள் பிரச்சினைகளை உணரும் தலைவர்**

சமூகத்தின் உள்ளார்ந்த பிரச்சினைகளை அறிவதோடு மட்டுமல்லாது, அதற்கான தீர்வுகளை முன்னிறுத்தக்கூடியதாயிருக்க வேண்டும்.

கிராமப்புற வசதியின்மை, வேலைவாய்ப்புப் பிரச்சினை, கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, விவசாய அபிவிருத்தி போன்ற முக்கியமான பிரச்சினைகளில் தெளிவான தீர்வுகளை முன்வைக்க வேண்டும்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்...)

# ஆர்.ஜே. மீடியாவின் மகுட விருது வழங்கல் விழா













"முயற்சிக்கு என்றும் முதலிடம்" என்ற வாசகத்தை மையமாகக்கொண்டு பல சேவைகளை நாடளாவிய ரீதியில் வழங்கிவரும் ஆர்.ஜே. மீடியா ஊடக வலையமைப்பின் ஐந்தாவது வருடப் பூர்த்தியும் மகுட விருது வழங்கல் விழாவும் ஆர்.ஜே. மீடியா வலையமைப்பின் பணிப்பாளரும் அறிவிப்பாளருமான ஏ.எம்.இன்சாப் தலைமையில் கொழும்பு டவர் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை, கலாசார பீட பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில், கௌரவ அதிதிகளாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல்.மொஹம்மது ஹனீபா, ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான என்.எம்.அமீன், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன ஒன்றியத்தின் தலைவரும் சிரேஷ்ட ஒலி, ஒளிபரப்பாளருமான உமர்லெப்பை யாகூப், சமூகப் பணி மற்றும் தேசிய சமூக மேம்பாட்டு நிறுவனத்தின் இயக்குநர் வி.ஜெயரூபன், சிரேஷ்ட உளவியல் ஆலோசகரும் மனநல தத்துவ ஆரோக்கியத்தின் தலைவரும் தேசிய சமூகப்பணி நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பிரிவின் இயக்குநருமான அஸ்மியாஸ் ஷஹீத், தமிழன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர்.சிவராஜா, கெப்பிட்டல் வானொலி மற்றும் தொலைக்காட்சியின் பொது மேலாளர் சியாஉல் ஹஸன் , தேசிய கல்வி நிறுவன விரிவுரையாளர் டாக்டர் ஸ்ரீபிரேந்ரன், வசந்தம் தொலைக்காட்சி மற்றும் வானொலியின் முகாமையாளர் எம்.எஸ்.எம்.இர்பான், கெப்பிட்டல் வானொலியின் சிரேஷ்ட முகாமையாளர் ஏ.எல்.ஜபீர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன சிரேஷ்ட ஒளிபரப்பாளரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் மற்றும் இலங்கை ஒலிபரப்பாளர்கள் ஒன்றியத்தின் தேசிய அமைப்பாளருமான இர்ஷாத் ஏ. காதர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட அறிவிப்பாளரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் முன்னாள் தலைவியுமான புர்கான் பீ. இப்திகார், சிரேஷ்ட ஊடகவியலாளரான ஸமீஹா சபீர் மற்றும் ராம் குணா அழகுசாதன மையத்தின் இயக்குநர் குணரத்னம் ஹரிசாந்த் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் ஊடகம், கல்வி, கலை, இலக்கியம், சுகாதாரம், ஆன்மீகம், சமூக சேவை, சாதனையாளர், இளம் தொழில் முயற்சியாளர் மற்றும் அரச நிர்வாகத் துறை என்ற பத்துத் துறைகளிலும் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மகுட விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது ஆர்.ஜே.மீடியாவின் இரண்டு மாத கால ஊடகப் பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்கள், ஆர்.ஜே. மீடியாவின் போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றிபெற்றவர்கள், ஆர்.ஜே. மீடியா உறுப்பினர்கள் மற்றும் அதிதிகள் ஆகியோர் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**- ஸமீஹா சபீர்**






# கண்டி மன்னரை கொலை பழிகளுக்கு ஆளாக்கிய அமைச்சர்கள்!

## கண்டி இராச்சியத்தின் இரகசிய முடிச்சுகளை அவிழ்க்கிறார், மன்னர் வாரிசு அசோக்ராஜா



மணி ஸ்ரீகாந்தன்



கண்டி ஸ்ரீ விக்கிரமராஜ சிங்கனின் பெயர் இலங்கை வரலாற்றில் இன்றுவரை நிலைத்து நிற்கும் ஒரு தனித்துவப் பெயர்.

மதுரை மண்ணிலிருந்து கண்டிக்குச் சென்று கண்டி இராச்சியத்தை ஆட்சிசெய்த ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன் ஒரு நாயக்க மன்னரானாலும் இவரின் கண்டி இராச்சிய ஆட்சியில் தமிழும் சிங்களமும் ஆட்சி மொழியாக இருந்திருக்கிறது.

கண்டி மன்னரின் ஆட்சியின் பெருமைகளை அறிந்த ஆங்கிலேயர்கள் இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றிய பிறகு கண்டியை பிடிக்க பெருமுயற்சியை மேற்கொண்டார்கள். ஆனாலும் கண்டி மன்னரின் வீரத்துக்கு முன்னால் ஆங்கிலேயப் படைகள் தாக்குப்பிடிக்க முடியாமல் சிதறி ஓடின.

அதன் பிறகு மன்னரை வீழ்த்தி கண்டியை பிடிப்பதற்காக சில சிங்களப் பிரதானிகள் மற்றும் நாயக்கர்கள் சிலரின் உதவியுடன் திட்டம் வகுத்த ஆங்கிலப் படைகள் கண்டியைக் கைப்பற்றின.

மூன்று தடவைகள் ஆங்கிலேயர்களை கண்டிக்குள் நுழைய விடாமல் விரட்டியடித்த ஸ்ரீ விக்கிரமராஜசிங்கனை நான்காவது தடவை அவரது தளபதிகளில் ஒருவரான மொல்லிகொடவின் துரோக புத்தியால் தோல்வியடைய நேர்ந்தது.


புதர் மண்டிக் கிடக்கும் கண்டி மன்னர் சிறைச்சாலையின் முகப்புத் தோற்றம்

இதனால் கி.பி. 1816ஆம் ஆண்டு மார்ச் மாதம் 08ஆம் திகதி ஸ்ரீ விக்கிரமராஜ சிங்கனையும் பட்டத்து ராணி சாவித்திரி தேவி, இரண்டாவது மனைவி இராஜலட்சுமி தேவி, மூன்றாவது மனைவி முக்கண்டம்மா மற்றும் நான்காவது மனைவி வெங்கடாசம்மா ஆகியோரை சிறை பிடித்தார்கள்.

அதன் பிறகு கண்டி மன்னரின் இரத்த உறவுகள் அனைவரும் இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டு தமிழ்நாட்டில் வேலூரிலுள்ள கோட்டையில் சிறை வைக்கப்பட்டார்கள்.

வேலூர் சிறையில் 16 ஆண்டுகளைக் கழித்த மன்னர் நோய்வாய்ப்பட்டு கி.பி. 1832ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் திகதி இறந்தார்.

மன்னர் மறைந்த தினம் இன்றுவரை அவரது இரத்த உறவுகளால் நினைவு கூரப்பட்டு மன்னரின் கல்லறையில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

மன்னரின் 193ஆவது நினைவு தின விழா வேலூரில் மன்னரின் கல்லறை அமையப்பெற்றுள்ள முத்து மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மன்னரின் குடும்ப வாரிசுகள் பலர் கலந்துகொண்டிருந்தார்கள்.

மன்னரின் ஏழாவது தலைமுறை வாரிசான அசோக்ராஜாவின் தலைமையில் நடைபெற்ற இந்தக் குருபூஜை விழா ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது.

ஆங்கிலேயர்களின் படையெடுப்பால் கண்டியிலிருந்து குடும்பத்தினருடன் வெளியேறிய மன்னர், கண்டி தும்பரமிட்டிய பகுதியில் கண்டி மெத மஹநுவரயில் ஓர் ஆலமரத்தடியில் அமைந்திருந்த கிராமத் தலைவன் அப்புராலஆரச்சி வீட்டில் மறைந்திருந்த வேளையில் அவர் கைதுசெய்யப்பட்டு ஆங்கிலேயர்களால் பல்லக்கில் ஏற்றப்பட்டு கொழும்புக்கு அழைத்து வரப்பட்டார்.

கொழும்பில் தற்போது சிலிங்கோ கட்டிடம் அமைந்திருக்கும் இடத்தில் அமைந்திருந்த மகா முதலியார் வணிகரத்ன ராஜபக்ஷ என்பவரின் பண்ணை வீட்டில் மன்னர் தங்க வைக்கப்பட்டிருந்தாராம். 349 தினங்கள் அங்கே தங்கியிருந்த மன்னரை கோல்பேஸ் கடற்கரையிலிருந்து 'கோர்ஸ்வலிஸ்' என்ற கப்பல் மூலமாக இந்தியாவுக்கு அழைத்துச் சென்றார்கள்.

மன்னரை கண்டியிலிருந்து கொழும்புக்கு அழைத்து வரும்போது வத்தளையில் ஒரு நாள் மன்னர் தங்க வைக்கப்பட்டிருக்கிறார். அதனால் அந்த இடம் இப்போது 'விக்கிரமசிங்க புர' என்று அழைக்கப்படுகிறது.

மன்னர் கொழும்பில் சிறை வைக்கப்பட்ட சிலிங்கோ இடத்தில் மன்னரின் நினைவாக ஒரு சிறிய கட்டிடம் அமைக்கப்பட்டு அதில் மன்னரின் உருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளது.

இன்றும் சிங்களப் பெரும்பான்மை மக்கள் அந்த இடத்தில் மரியாதை செலுத்தி வருவதை நாம் காணலாம்.

இதேவேளை, மன்னர் வேலூர் கோட்டைக்கு அழைத்துச்செல்லப்பட்டு அங்குள்ள ஒரு வீட்டில் மன்னர் குடும்பத்தினருடன் அடைக்கப்பட்டார்.

வேலூர் கோட்டைக்குள் அமைந்திருக்கும் அந்த வீடு இரண்டு மாடிகளைக்கொண்டது. அந்த வீட்டிலுள்ள கீழ்த்தளத்தில் மன்னர் அடைக்கப்பட்டிருக்கிறார்.

அந்த அறையின் நீளம் 30 அடியாகவும் அகலம் 20 அடியாகவும் காணப்படுகிறது. அந்த வீட்டுச் சிறையில் 16 ஆண்டுகளைக் கழித்த மன்னர் நோய்வாய்ப்பட்டு மறைந்தார்.

மன்னரின் மறைவுக்குப் பிறகு அந்தக் கட்டிடம் பாழடைந்து கிடந்தது. இந்திய சுதந்திரத்துக்குப் பிறகு அந்தக் கட்டிடம் வேலூர் மாவட்ட (ரெஜிஸ்டர் அலுவலகம்) பதிவாளர் திணைக்களமாகச் செயற்படத் தொடங்கியிருக்கிறது.

ஆனாலும் மன்னர் சிறைவைக்கப்பட்ட அந்த அறை மட்டும் திறக்கப்படாமல் பெரிய பூட்டுப் போட்டு மூடப்பட்டிருந்தது.

அந்த அறைக் கதவில் மந்திரித்த தாயத்துகள், பல வர்ண கயிறுகள் கட்டப்பட்டு தொங்கிக்கொண்டிருந்ததாம். மன்னரின் ஆன்மா அந்த அறையில் நடமாடுவதாக சிலர் புரளி கிளப்பிவிட அலுவலகப் பணிகளில் ஈடுபடுபவர்கள் அந்த அறைப் பக்கம் பார்க்கவே பயந்தார்களாம்.

அந்த அறையை அத்துமீறி யாராவது திறந்தால் மன்னரின் ஆவி பழிவாங்கிவிடும் என்ற பயம் வேலூர் மக்களிடையே பெரும் பீதியைக் கிளப்பியிருந்த சமயத்தில் காட்பாடி சித்தூரில் என்.டி.ராமராவ் என்ற ஒரு நபர் பத்திரபதிவுத் துறை அலுவலகத்தில் எழுத்தராகப் பணியாற்றி வந்தார்.

பின் பத்திரப்பதிவு அலுவலராக பதவியுயர்வுப் பெற்று வேலூருக்கு மாற்றப்பட்டார். இங்கு வந்ததும் ஆவி பற்றிய தகவல் அவருக்குத் தெரியவந்தது. திருப்பதி வெங்கடாசலபதி பக்தரான இவரின் கனவில் ஒருநாள் பெருமாள் வந்து மன்னர் சிறை வைக்கப்பட்ட அந்த அறையை திறக்கும்படி தனக்கு பெருமாள் கட்டளையிட்டிருப்பதாகக் கூறி, பூஜைகள் செய்து தைரியமாக கண்டி ராஜா அடைக்கப்பட்டிருந்த சிறைக் கதவைத் திறந்து அனைவரையும் அழைத்துச் சென்று காண்பித்தார்.



அந்த அறையை திறந்ததற்குப் பிறகு அதில் அரசு ஆவண கோப்புகள் வைக்கும் அறையாக அதனை என்.டி.ராமராவ் பயன்படுத்தினார்.

பல வருடங்களாக பூட்டிக்கிடந்த கண்டி மன்னரின் சிறையைத் திறந்து வைத்ததற்குப் பிறகு என்.டி.ஆரின் வாழ்க்கையில் பெரு மாற்றங்கள் நடைபெற்றன.

ஆறு மாதத்திலேயே வேலூர், பத்திரப்பதிவு அலுவலர் பதவியை இராஜிநாமாச் செய்த என்.டி.ராமராவ் ஆந்திராவுக்கு சென்று சினிமாவில் நடிகராக அவதாரம் எடுத்து சூப்பர் ஸ்டாராக உச்சம் தொட்டார். அவர்தான் என்.டி.ஆர். - அவர் ஆந்திர மாநிலத்தின் முதல்வரானார்.

அதன் பிறகு வேலூர் பத்திரப்பதிவு அலுவலகம் வேறொரு புதிய இடத்துக்கு மாற்றப்பட்டதால் அந்தக் கட்டடம் கைவிடப்பட்டு புதர் மண்டி பாழடைந்து கிடக்கிறது.




வேலூரில் மன்னர் சிறை வைக்கப்பட்டிருந்த சிறைச்சாலையின் உட்புறத்தோற்றம்

இது குறித்து கண்டி மன்னரின் ஏழாவது தலைமுறை வாரிசுகளில் ஒருவரான அசோக்ராஜா கூறும்போது,

"வேலூர் கோட்டையில் கண்டி மன்னர் சிறை வைக்கப்பட்ட 'கண்டி மஹால்' இன்று கவனிப்பாரற்று பாழடைந்து கிடக்கிறது. அதனை மத்திய மாநில அரசுகள் மறுசீரமைத்து, மன்னரின் நினைவு இல்லமாக மாற்றுவதோடு கொழும்பு, சிலிங்கோ மன்னர் நினைவு இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள சிலையைப்போன்று ஒரு சிலையையும் வடிவமைத்து அதனை மக்கள் பார்வைக்கு வைக்கவேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்" - என்று அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

இதேவேளை, அசோக்ராஜா இலங்கை மக்களுக்காகவும் ஒரு செய்தியை எம்மிடம் பகிர்ந்துகொண்டார்.

"கண்டியின் முதல் மந்திரியாக இருந்த பிலிமத்தலாவ மன்னருக்கு எதிராக சதித்திட்டம் தீட்டியதற்காக அவர் சிரச்சேதம் செய்யப்பட்டார்.

அதன் பிறகு அந்தப் பதவியில் எகலபொல நிலமே மகா அதிகாரமாக பதவிக்கு வந்தார். இந்தச் சம்பவம், மகா அதிகாரம் பதவிக்கு ஆசைப்பட்டு ஏமாந்துபோன இரண்டாம் மந்திரி மொல்லிகொடையின் கோபத்தை அதிகமாக்கியது.

எனவே, மன்னரை பழிவாங்க தக்க சமயம் பார்த்துக் காத்திருந்தான். அப்போது வரிவசூல் செய்வதற்காக சப்ரகமுவ பகுதிக்குச் சென்று எகலபொல திரும்பி வராமல் ஆங்கிலேயர்களுடன் கூட்டணி அமைத்துக்கொண்டானாம்.

இந்த விடயம் மன்னருக்கு கடுங் கோபத்தை உண்டாக்கியது.

நேரம் கைக்கூடி வந்ததையடுத்து மொல்லிகொட தனது சதித் திட்டத்துக்கு அடித்தளம் போட்டான்.

அரசு உறுப்பினர்கள் சிலரைத் தன்னுடன் இணைத்துக்கொண்டு மன்னருக்கு மதுவை ஊற்றிக் கொடுத்து மன்னரை போதையில் மிதக்க வைத்துவிட்டு அரசு ஆவணங்கள் சிலவற்றில் மன்னரின் கையெழுத்துகளை வாங்கினார்கள்.

அப்படி வாங்கிய கையெழுத்தில் எகலபொலயின் குடும்பத்தினரை சிரச்சேதம் செய்வதற்கான கட்டளையும் இருந்திருக்கிறது. மன்னர் அதனை கவனிக்காமல் கையெழுத்திடுகிறார்.

அதன் பிறகு எகலபொலயின் பிள்ளைகள் நால்வரையும் பிடித்து வந்து அவர்களின் தலைகளை சிரச்சேதம் செய்து அந்தத் தலைகளை ஓர் இரும்பு உரலில் போட்டு அந்தப் பிள்ளைகளின் தாயான குமாரி ஹாமினியைகொண்டே அந்தத் தலைகளை இரும்பு உலக்கையால் இடிக்க வைத்தார்கள்.

இந்தச் சம்பவம் கண்டி பிரதேசத்தை மட்டுமின்றி முழுநாட்டையுமே அதிர்ச்சியில் உறைய வைத்திருக்கிறது. தண்டணை நிறைவேற்றப்பட்ட பின் குமாரி ஹாமினேயை ஒரு கருங்கல்லில் கட்டி கண்டி வாவியினுள் வீசவும் செய்தார்களாம்.

இந்தச் சம்பவம் மன்னர் அதுவரை செய்த நல்ல செயல்கள் அனைத்தையும் மறைத்து மன்னரின் வரலாற்றில் அழிக்க முடியாத கறையாகப் படிந்துவிட்டது.

எனவே, இந்த துயரச் சம்பவத்துக்கு மன்னரான எனது தாத்தா காரணமல்ல என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆனாலும் அப்படி நடந்த சம்பவத்துக்காக நான் எமது மன்னரின் குடும்பத்தின் சார்பில் எனது வருத்தத்தை தெரிவித்துக்கொள்கின்றேன்" - என்றார்.







# அஷ்ரப்புடன் ஒரு நடைவண்டிப் பயணம்

## அத்தியாயம் 01

**கங்கத்தியப்பா**

அச்சொட்டாக அந்த ஆண்டு இப்போது எனது நினைவில் இல்லை. அது என்னைப் பாடசாலைக்குச் சேர்ப்பதற்கு முன்னரான காலம். ஆனால், அன்று நடந்த அந்த ஒரு சம்பவம் மட்டும் என் நினைவில் நிற்கின்றது. அது எனது 'சுன்னத்' கல்யாண வைபவம்.

அந்த வருடத்தின் ஹஜ்ஜுப் பெருநாள் மாதத்தில் அது நடந்தது. அந்த ஹஜ்ஜுப் பெருநாளைக்கு எங்கள் வீட்டில் எனக்கு மட்டும் இரண்டு 'செற்' உடைகள் வாங்கப்பட்டிருந்தன. எனக்கு சுன்னத் எடுப்பது தொடர்பான திடுக்கத்தைவிட இரண்டு செற் உடுப்பு என்பதே அந்த வயதில் என்னைக் கவர்ச்சிப்படுத்திய விடயமாகும். அது சுன்னத் கல்யாண மாப்பிள்ளைக்கான உடை என்பது பின்னர் எனக்குத் தெரியவந்தது. அந்த வைபவம் எனது மூத்த சகோதரியின் இல்லத்தில் நடைபெற்றது.

பெரிய ராத்தா சபியா உம்மாவின் திருமணம் முடிந்து நாலைந்து மாதங்கள் கழிந்த பின்னர்தான் அந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கும் என்பதே எனது கணிப்பு. ராத்தாவின் கல்யாணம் 'மீரா கந்திரி (கந்தூரி)' மாதம் என்று உம்மா கல்யாணம் 'திட்டக்கட்டிய'தன் பின்னர் தனது அயல் வீட்டுத் தோழிகளிடம் பெருமையாகக் கூறியதை அப்போது நான் கேட்டிருக்கின்றேன். அந்த வருடத்துத் 'தலக் (தலைக்) கந்திரி' மாதத்திலேயே புது வீட்டுக்குக் குடிபுகுதல் - 'கிரகப்பிரவேசம்' நடந்தது.

சென்ற நூற்றாண்டு முடியும் வரை கிழக்கு மாகான முஸ்லிம் பெண்கள் சமூகத்தில் இஸ்லாமிய மாதங்களை வேறு பெயர் கொண்டும் வேறு ஒழுங்கிலும் அழைக்கும் வழக்கம் இருந்தது. 'தலைக் கந்தூரி' என்பது ரபீயுல் அவ்வல் மாதத்தைக் குறிக்கும். இது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்த மாதம்.

தலைக்கந்தூரி மாதம், அதன் பின்னர் கடக் (கடைக்) கந்தூரி மாதம், அதன் பின்னர் காதர் கந்தூரி மாதம், அதன் பின்னர் மீரா கந்தூரி மாதம், தோகத்து மாதம், வராத்து (பாராஅத்து) மாதம், ரமழான் மாதம் - பெருநாள் மாதம், இடையிட்ட மாதம் - ஹஜ்ஜு மாதம், ஆஷூரா மாதம், நெயினார் முடைகிடந்த மாதம் என அந்த நாளைய உம்மாக்களின் மாதங்கள் நீளும். இஸ்லாமிய வருடக்கணிப்பில் முஹர்ரம் என்பதே முதல் மாதமாக இருக்க, உம்மாமார் பெருமானார் (ஸல்) அவர்கள் பிறந்த மாதத்தை ஏனோ வருடத்தின் முதல் மாதமாக அப்போது கணித்திருந்தனர்.

மூத்த ராத்தாவுக்கு என கட்டிய புது வீட்டுக்கு அவரின் திருமணத்துக்காகவே நாங்கள் 'குடிபுகுந்து' இருந்தோம். அதன் நிமித்தம் ஆடு அறுத்து ஒரு குடும்ப விருந்தும் புதிய வீட்டில் நடைபெற்றது. பெரிய மச்சான் உதுமாலெப்பை அப்போது திருமணம் முடித்திருக்காவிட்டாலும் அவரின் நண்பரான எங்கள் அப்துல் ரஹீம் மாஸ்டர் மாமாவுடன் சமுகமளித்திருந்தமை எனக்கு சற்றுக் கருகலான நினைவு.

ராத்தாவின் திருமணம் முடிந்து ஆறு மாதங்கள் முடிந்த கையோடும் எங்கள் பழைய வீட்டுக்கு நாங்கள் திரும்பிச் செல்லவில்லை என்பது நினைவில் நிற்கின்றது. ஆறு மாதங்கள் முடிந்த பின்னர்தான் பெண்ணைப் பெற்ற பெற்றோர் தங்கள் பழைய இல்லத்துக்குத் திரும்புவர். எனது சுன்னத் வைபவத்தையும் புது வீட்டிலேயே நடத்த என் பெற்றோர் ஆசைப்பட்டிருக்கலாம். தனது பெண்மகள் திருமணம் முடித்துக் கொடுக்கப்பட்டும் அந்த மகளுக்காக அவர்கள் அன்பளிப்புச் செய்யும் வீட்டில் ஆறு மாதங்கள் சேர்ந்து வாழ்ந்திருந்து அவர்களை நெறிப்படுத்துவர். சிலர் தலைப்பிள்ளை பிறந்து அது தவழும் வரைக்குமாவது ஒன்றாக இருந்து மகளுக்கு உதவுவர். இது இன்னும் கிழக்கிலங்கையில் வழக்கிலுள்ள ஒரு சம்பிரதாயம்.

சுன்னத் வைபவம் முடிந்து மூன்றாவது நாள் என நினைக்கிறேன், சில விடலை இளைஞர்கள் எங்கள் வீட்டின் முன் ஹோலிலிருந்து 'ஜோக்'குகள் அடித்துச் சிரித்துக்கொண்டு இருந்தமை உள்ளறையில் இருந்த என் காதுகளுக்கும் கேட்டது.

நான் கழுத்துவரை வெள்ளைத் துணிகொண்டு போர்த்தப்பட்டிருந்தாலும் அந்தத் துணியின் நடுப்பகுதி நூல் கொண்டு தொடுக்கப்பட்டு மேலே உயர்த்தப்பட்டு இருந்தது. இது 'கத்னா' செய்யப்பட்டு முடிந்த பின்னரான உடனடி வழக்கமாகும். காயம் ஆறத் தொடங்கும்போதுதான் அந்தச் சீலை அகற்றப்படும்.

வெளியே கதைத்துச் சிரித்துக் கொண்டிருந்த இளைஞர்கள் நான் கிடத்தி வைக்கப்பட்டிருந்த அறையின் கதவு நிலையின் மேல் போடப்பட்டிருந்த திரைச் சீலையை விலக்கி உள்ளே வந்தனர். அவர்களில் ஒருவர் "ஆ... மாப்பிளே.." என்று என்னை அழைக்க அந்த இளைஞர் கூட்டம் உட்பிரவேசித்தனர். சுன்னத் செய்யப்பட்ட சிறுவனை அப்போது மாப்பிள்ளை என்றே அழைப்பர். என்னை மாப்பிளே என்று அழைத்த அந்த மங்கலான - ஆனால், 'கட்டளைக்குரல்' நைனா முஹம்மத் ஜீ.எஸ். அவர்களுடையது.

அந்த இளைஞர்களில் சிலர் எனது மச்சான் முறையான ஏ.எல்.எம்.சுபையிர் (அஹமத் லெப்பை விதானை என அழைக்கப்பட்ட எனது மாமா ஒருவரின் மகன்). எனது காக்கா முறையான மற்றொருவர் ஏ.எல்.எம்.சுபையிர் (பொக்கிஷாதிபதி என அழைக்கப்பட்ட எனது சின்னாப்பா ஒருவரின் மகன்- பிற்காலங்களில் அவர் கொழும்பு மாநகர சபையின் சொத்து மதிப்பீட்டு அதிகாரியாக கடமையாற்றி ஓய்வுபெற்றவர். இன்னும் தனது வாண்மைத் துறையில் ஒரு நிபுணராகத் தொழிற்படுகின்றார்.)

எனது இன்னொரு காக்கா முறையான எம்.ஜி.ஆர். எனச் செல்லமாக தோழர்களால் அழைக்கப்பட்ட இஸ்மாலெவ்வை (நாங்கள் பால் பெரியப்பா என அழைக்கும் வாப்பாவின் ஒன்றுவிட்ட சகோதரனின் மகன்). எனது மூத்த மச்சானின் உறவினரான தௌபீக் காரியப்பர் மற்றும் நெய்னா முஹம்மது எனும் வேட்டி உடுத்த ஒருவர் (பின்னாட்களில் அவர் ஜீ.எஸ்.). இவர்கள் அனைவரும் மட்டக்களப்பிலுள்ள பிரபல கல்லூரிகளில் ஆங்கில மொழிமூலம் கற்கும் உயர்வகுப்பு மாணவர்கள். அவர்களோடு நான் ஏற்கனவே கண்டிராத தோற்றப் பொலிவான ஒரு சிவப்பு கலந்த வெள்ளை நிற இளைஞனும் காணப்பட்டார்.

அவர்கள் அனைவரும் எனது காக்கா புஹாரியைத் தேடிக்கொண்டு வந்திருந்தனர். எங்கள் மச்சான் உதுமாலெப்பை மாஸ்டர் புதிதாக வாங்கியிருந்த பிலிப் ரக ரேடியோவில் 'மண்ணுக்கு மரம் பாரமா மரத்துக்கு இலை பாரமா கொடிக்கு காய் பாரமா' என்ற பாடல் குறைந்த 'வொலுயுமில்' அப்போது ஒலித்துக் கொண்டிருந்தது. எங்கள் வீடு ஓர் ஆலிமின் வீடு என்பதால் சினிமா பாட்டுகளை சத்தமாகப் போடமாட்டார்கள். ரேடியோ



இருப்பது செய்தி கேட்க என்பதே வாப்பாவின் சித்தாந்தம். சுன்னத் வீடு என்பதால் அந்தக் கடுமையான சட்டம் சற்று தளர்த்தப்பட்டிருந்தது.

அந்தப் பாடலை அவர்களும் இரசித்தவாறு எனது காக்காவுடனும் மச்சானுடனும் நான் இருந்த அறையில் தரையில் விரிக்கப்பட்டிருந்த பாய்களில் அமர்ந்து பின்னர் மீண்டும் பேச்சைத் தொடர்ந்தனர். எனது மூத்த மச்சான் உதுமா லெவ்வை மாஸ்டரை அவர்களில் இளையாம்பி காக்கா என இடையிடையே அழைத்தனர். எனது மச்சானை அவர்கள் வீட்டில் இளையாம்பி என அழைப்பதை நான் பார்த்துள்ளேன்.

பேச்சினிடையே எங்கள் ஊரில் ஒரு கொலை நடந்ததாகவும் அதனைப் போய் பார்த்துவிட்டு வருவதாகவும் அவர்கள் உரையாடிக்கொண்டிருந்தனர். அவர்களின் உரையாடலின் இடையில் குறுக்கிட்ட எனது வாப்பா ''அந்த இடங்களுக்கெல்லாம் நீங்கள் போகக்கூடாது மக்காள்'' என்று அவர்களுக்கு அறிவுரை கூறிக்கொண்டிருந்தார். அது அப்போதைய எம்.பீ.சி.எஸ். யூனியனின் மனேஜராக இருந்த அப்துல் ரஷீத் என்பதை பிறகு நான் அறிந்துகொண்டேன்.

மீண்டும் வாப்பா எங்கள் உம்மாவை அழைத்து எனக்கு அறிமுகம் இல்லாமல் இருந்த அந்த அழகான வாலிபரை உம்மாவுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

"இவர் நம்மட ஆலிமுத் தம்பியின் (ஆலிமுத்தம்பி என்பது சுலைமா லெப்பை என்ற இயற்பெயர் கொண்ட சம்மாந்துறைப் பட்டின சபையின் முன்னாள் தவிசாளர். அஷ்ரப்பின் தாய் மாமன். அந்த நேரம் சம்மாந்துறையின் பிரதம நம்பிக்கையாளர்.) தங்கச்சியின் மகன்" என்று அந்த இளைஞரை நோக்கி வாப்பா கூறினார்.

அதனைக் கேட்ட உம்மா தன்னுடைய முக்காட்டை இன்னும் தீவிரமாக்கி "மதீனாக் கிளியின் மகனா வாப்பா நீங்க" என்று அவரிடம் வினாத் தொடுத்தார். அவரும் ஆம் என்றார்.

எங்கள் உம்மாவும் அவரின் உம்மாவும் சம்மாந்துறை பழைய மார்கட், ஆலையடிச் சந்தை ஒழுங்கையில் எதிர் எதிர் வீடுகளில் தங்கள் இளமைக் காலத்தை கொண்டாடியவர்கள். தோம்புதோர் வளவில் பிறந்தாலும் மரைக்கார் வளவில் தினசரி வந்துபோகும் மதீனாக்கிளியும் பக்கீர்ப் போடியார் வளவில் வாழ்ந்த கதீஜா உம்மாவும் அருகருகே ஒருவருக்கு ஒருவர் மருதாணி போட்டு மகிழ்ந்து வாழ்ந்தவர்கள். பெண்புத்தி மாலை, தலை பாத்திஹா, மகுசூக்கு மாலை, நல்ல தங்காள் கண்டிராசன் ஒப்பாரி முதலிய காவியங்களை ஊஞ்சலில் உட்கார்ந்து ஆடியும் பாடியும் மகிழ்ந்தவர்கள். "உங்கட உம்மாக்கு கதீஜா மாமி ஸலாம் சொன்னதாகச் சொல்லுங்க வாப்பா" என்று மிகுந்த இரக்கத்துடன் அவரிடம் உம்மா கூறினார்.

அவரின் பெயர் அஷ்ரப் என்று அவர்கள் போன பின்னர் வீட்டில் பேசிக்கொண்டனர். அந்தச் சந்தர்ப்பத்தில் வானொலியில் இன்றைய நேயரின் சில பாடல்களையும் அறிவிப்பாளர் மயில்வாகனத்தின் காந்தக் குரல் 'கோபால் பல்பொடி' விளம்பரத்தையும் கேட்காத இழப்பு எனக்கு மட்டுமே ஒரு 'பீலிங்காக' இருந்தது.

1968ஆம் ஆண்டு என்பது எனக்கு சரியாக நினைவில் இருக்கிறது. நான் எட்டாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன். அந்த வகுப்பில் எங்கள் வகுப்பாசிரியரும் தமிழ் ஆசிரியருமான மர்ஹூம் எஸ்.ஏ.றாசிக் சேர் அவர்களாவர்.

அவர் கம்பீரமான - ஆனால் ஒரு கட்டளைக் குரலின் (Commanding Voice) சொந்தக்காரர். இலாவகமான மேடைப் பேச்சில் தனது மொழி ஆற்றலாலும் சிந்தனைத் திறனினாலும் அற்புதங்கள் செய்பவர். மேடைப் பேச்சு என்ற பஞ்சகல்யாணிப் போர்க் குதிரையை சாட்டை இன்றியே இலாவகமாக கையாளத் தெரிந்தவர். அது விரும்பிய பக்கம் எல்லாம் ஓடிச்செல்ல விடாமல் அதன் கடிவாளத்தைக் கையகப்படுத்தி அதனை அடக்கியாண்டு தான் விரும்பிய திசைக்கு அதனை வளைத்துப் பிடித்துச் செலுத்தும் ஆண்மையும் ஆளுமையும் மிக்கவர். மேலதிகமாக இலக்கிய மன்றத்துக்கும் அவரே பொறுப்பாசிரியரும் கூட. மேடைப் பேச்சுக்கு எங்களை ஆர்வப்படுத்தி தயார்படுத்துபவரும் அவரே. பிற்காலங்களில் எங்கள் ஊரில் நடைபெற்ற ஆக்கபூர்வமான சமூக மற்றும் அரசியல் மாற்றங்களில் ஒரு 'பிஸ்மார்க்' போன்று தொழிற்பட்டவர்.

அந்தக் காலத்தில் இஸ்லாமிய சோஷலிச முன்னணி (ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் முஸ்லிம் பிரிவு) என்ற ஓர் அமைப்பு அகில இலங்கை ரீதியான பேச்சுப் போட்டி ஒன்றை கல்முனையில் நடத்தியது. அதில் ஆரம்பப் பிரிவில் நான் போட்டியிட எனது வகுப்பாசிரியர் எஸ்.ஏ.றாசிக் சேர் பாடசாலை மூலமாக விண்ணப்பித்து வழக்கம்போல பேச்சொன்றையும் எழுதித் தந்து என்னைப் பயிற்றுவித்தார். எனக்கு வழங்கப்பட்ட தலைப்பு "கலை மறை முஹம்மத் என்னும் காரணம் இல்லையாயின்...." என்பதாகும்.

அது உமருப் புலவரின் சீறாவில் வரும் ஓர் அடி என்பதை பின்னாட்களில் அறிந்துகொண்டேன்.

***"கலை மறை முஹம்மத் என்னும் காரணம் இல்லையாயின்***
***உலகு விண் இரவி திங்கள் ஒளிர் உடுக்கணம் சுவர்க்கம்***
***மலை கடல் நதி பாதாளம் வானவர் முதலாயும்மை***
***நிலையுறப் படைத்ததில்லை என இறை நிகழ்த்தினானே"***

என்ற சீறாப்புராண வரிகளை றாசிக் சேர் அற்புதமாய் கையாண்டு அந்தப் பேச்சுக்கான நகலை வரைந்திருந்தார். அதில் அதிசயமான பல வார்த்தைப் பிரயோகங்கள் இன்னும் என் நெஞ்சில் நிழலாடுகின்றன.

கல்முனை ஸாஹிராக் கல்லூரி வீதியில் அமைந்திருந்த பல கிடுகுக் கொட்டில்கள் அமைக்கப்பட்டிருந்த ஓர் வெட்டவெளியில் போட்டிகள் நடைபெற்றன. அந்தப் போட்டிக்கு எங்கள் பாடசாலையிலிருந்து முனாஸ் காரியப்பரும் ஏ.எல்.எம்.இஸ்மாயில் என்பவரும் மேற்பிரிவிலும் இன்னும் சிலர் மத்திய பிரிவிலும் பலர் பங்குபற்ற வந்திருந்தனர்.

எனது போட்டி நடைபெற்று முடிந்து நான் கொட்டிலுக்கு வெளியே வந்ததும் முன்னர் எங்கள் வீட்டுக்கு வந்திருந்த அதே அழகான இளைஞர் என்னைத் தேடி வந்து எனது கையைப் பிடித்து அவரின் வாழ்த்துகளைத் தெரிவித்தார். நான் ஐந்தாறு வருடங்களின் முன்னர் நடைபெற்ற எனது சுன்னத் கலியாண நேரம் அவர் வருகை தந்ததை நினைவுபடுத்தவும் அவர் பூரித்துப் போனமையை நான் உணர்ந்தேன். எனது ஞாபக சக்தியை அவர் மெச்சினார். ஆனால், அவருக்கோ பயங்கர ஞாபகசக்தி இருந்தமையை பின்னாட்களில் நான் அவதானித்தேன்.


"நீங்கள் கட்டாயம் முதலாம் இடத்துக்கு வருவீர்கள் மன்சூர்" என்று என்னை மகிழ்ச்சிப்படுத்தினார். முடிவு அட்வகேற் சம்சுதீன் அவர்களால் அறிவிக்கப்பட்டபோது அஷ்ரப் கூறியது அப்படியே நடந்திருந்தது. நான் வானத்தில் மிதந்தேன். ஏனெனில், அதுவே நான் பங்குபற்றிய முதலாவது அகில இலங்கை ரீதியிலான பேச்சுப் போட்டி.

பின்னர் அங்கே இருந்த இன்னொரு கொட்டிலில் மேல் பிரிவினருக்கான திறந்த பேச்சுப் போட்டி நடைபெற்றது. நானும் கொட்டகை ஓரத்தே நின்று அதனை ரசித்துக்கொண்டிருந்தேன். இடையில் முஹம்மது ஹுஸைன் முஹம்மது அஷ்ரப் என்ற அந்த இளைஞன் அழைக்கப்பட்டார். கிழக்கில் பிரபல்யம் மிக்க தம்பி நெய்ந்தைக் காரியப்பர் குடும்பத்தின் வாரிசு என்பதனாலும் ஹுஸைன் விதானையின் மகன் என்பதினாலும் ஹுஸைன் என்ற நீதவானின் மைத்துனர் என்பதனாலும் ஒரு extraordinary கவர்ச்சியான தோற்றத்தைக் கொண்டவர் என்பதினாலும் ஏற்கனவே அந்த அல்லயலில் அவர் பலராலும் அறியப்பட்டிருந்தார். அதனால் அந்தக் கொட்டகையை சூழ வர சனக்கூட்டம் அதிகரித்திருந்தது.

(தொடரும்...)

# சாதனைப் பெண்களுக்கு இந்தியாவில் கௌரவம்







சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு திருச்சியில் இயங்கிவரும் நந்தவனம் பௌண்டேசன், லிம்ரா பேக்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் அனுசரணையில் சர்வதேச அளவில் பல துறைகளில் சாதனை படைத்த பெண்களை விருது வழங்கி கௌரவித்தது.

இது தொடர்பான நிகழ்வு நந்தவனம் பௌண்டேசன் தலைவர் நந்தவனம் சந்திரசேகரன் தலைமையில் மார்ச்-09 சென்னை அரும்பாக்கத்திலுள்ள விஜய் பார்க் ஹோட்டலில் நடைபெற்றது.

இதன்போது இலங்கை, மலேசியா, பின்லாந்து போன்ற நாடுகளிலிருந்தும் கேரளா மற்றும் தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 25 சாதனைப் பெண்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முன்னாள் ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர் சாதனைப் பெண்களுக்கு விருது வழங்கி கௌரவித்தார்.

இந்தியன் ரெட்கிராஸ் சொசைட்டி திருச்சிக் கிளைத் தலைவர் ச.மு.சீனிவாசன், தினகரன் - வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர், வீரகேசரி பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது கே.தேவராணி (மலேசியா), விஜயராணி செல்லப்பா (மலேசியா), புஷ்பா சங்கரன் (மலேசியா), வி.சரஸ்வதி வீரபத்திரன் (மலேசியா), மகேஸ்வரி (மலேசியா), முனைவர் விமலா பெருமாள் (மலேசியா), சசிலேகா குணசேகரன் (மலேசியா), கலைச்செல்வி பெருமாள் (மலேசியா), கஸ்தூரி மாசிலன் (பின்லாந்து), கே.விஜயலட்சுமி (திருவனந்தபுரம்), கீர்த்தனா தர்சன் (இலங்கை), சண்முகப் பிரியா கார்த்திகேசு (இலங்கை), கிருஷ்ணராஜ் மேகலா (இலங்கை), சம்சூல் ஹுதாபானு (சென்னை), முனைவர் சுலோச்சனா (சென்னை), நித்யா கோபாலன் (திருச்சி), எஸ்.சிசிலி (திருச்சி), பி.வித்தியாலட்சுமி (பள்ளத்தூர்), ஆர்.கலைச்செல்வி (சிவகங்கை), கவிதா பழனிகுமார் (கரூர்), என்.கீதா (புதுச்சேரி), கலாவிசு (புதுச்சேரி) சுசிலாதேவி (புதுக்கோட்டை), சு.கிருஷ்ணமூர்த்தி (கோயம்புத்தூர்), எம்.வி.சரண்யா (ஈரோடு) ஆகியோர் விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.

# மலையக சிறார்களின் கல்வி நிலையை திட்டமிட்டுச் சீரழிக்கும் இ.போ.ச. நடத்துநர்கள்..!

**சந்தனம் சத்தியநாதன்**

நிலையான கல்வி வளர்ச்சியே தரமான பிரஜைகளை உருவாக்குமென்பதோடு, யார் வேண்டுமானாலும் எந்த இடத்திலிருந்தும் கல்வியைக் கற்க வழிவகைகளைச் செய்துகொடுக்க வேண்டிய கடப்பாடு அரசின் பொறுப்பாகும்.

கல்வி என்ற வார்த்தை இன்றைய நிலையில் மிக முக்கிய அம்சமாகவே கருதப்படுகிறது. குறிப்பாக, இன, மத, மொழி, சாதி என்ற வேறுபாடின்றி அது பொதுவாக அனைவருக்கும் கிடைக்கப்பெற வேண்டும்.

தெற்காசியாவில் எழுத்தறிவு வீதம் கூடிய நாடாக இலங்கை இருந்தபோதிலும் மலையகத்தில் அந்த நிலையில் ஏற்றத்தாழ்வு காணப்படுகிறது. இலங்கையில் தற்போது காணப்படும் முறைசார் கல்வியின் பயனாக பலர் இன்று பல்கலைக்கழகம் வரை சென்று தமது உயர்கல்வியைத் தொடர முடிகிறது. 265 மில்லியனுக்கு அதிகமான சிறார்கள் தற்போது பாடசாலையிலிருந்து விலகியுள்ளதாக சில ஆய்வுத் தகவல்கள் கூறுகின்றன. இதில் 22 வீதம் ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்குக் கணிதம் மற்றும் தாய்மொழி வாசிப்பு ஆகியவற்றில் ஆர்வம் குறைவாகக் காணப்படுவதாக ஆராயப்பட்டுள்ளது.

ஆரம்பக் கல்வி என்பது ஒவ்வொரு குழந்தைக்கும் முக்கியத்துவம் வாய்ந்தது. அது பிள்ளையின் அடிப்படை உரிமையாகும். குழந்தைகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி சுயவளர்ச்சியுடன் வாய்ப்புகளின் வழிகளைத் திறந்து தலைமுறைக்கிடையிலான வறுமையைக் குறைத்து மாணவர்களின் உயர் கல்வியை உறுதிப்படுத்துவதில் ஆரம்பக் கல்வியின் பங்கு அளப்பரியது.

கல்வி முறை பொதுவாக ஒரு நாட்டின் தொடர்புடைய சட்டங்களின்படி ஒழுங்கமைக்கப்பட்டாலும் ஒரு நாட்டுக்கான கல்வி முறைமையானது ஒழுங்கமைக்கப்படாத பல அம்சங்கள் பரிமாணங்களையும் கொண்டிருப்பதென்பதும் ஆச்சரியப்படுவதற்கில்லை. பொதுவாக ஒரு கல்வி அமைப்பு ஒரு நாட்டின் சமூகத்தின் அனைத்து பிரிவுகளுக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் கல்வியை வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது. இது மக்கள் கல்வி கற்பதற்குள்ள அனைத்துக் கூறுகளுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் கல்வி அறிவியல் மற்றும் கலாசார அமைப்பு (யுனெஸ்கோ) அதன் சர்வதேச தரக் கல்வி (ISCED) அமைப்பில் நிலை (முன் ஆரம்பக் கல்வி) முதல் 8 வரையுள்ள ஒன்பது நிலைக் கல்வியை அங்கீகரித்துள்ளது. யுனெஸ்கோவின் சர்வதேச கல்விப் பணியகம், நாடு சார்ந்த கல்வி முறைமைகள் மற்றும் அவற்றின் நிலையான தரவுகளைப் பராமரிக்கிறது.

தரமான கல்வி இல்லாததற்கான காரணங்கள் போதுமான பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் பற்றாக்குறை பாடசாலைகளின் மோசமான நிலைமைகள் மற்றும் தோட்டப்புற சிறார்களுக்கு வழங்கப்படும் நியாயமான வாய்ப்புகள் தொடர்பான பிரச்சினைகள், கல்வி வழங்க கல்வி உதவித்தொகை, ஆசிரியர் பயிற்சிப் பட்டறை, பாடசாலைக் கட்டிடம் மற்றும் பாடசாலைகளுக்கு நீர் மற்றும் போக்குவரத்து வசதிகள் போன்றவை இன்னும் குறைபாடாகவே காணப்படுகின்றன.

இவ்வாறானதொரு நிலையில், அண்மையில் - அதாவது கடந்த 06-03-2025 அன்று ஹட்டன் அரச பஸ் நடத்துநரொருவர் கினிகத்தேனை கடவளை தமிழ்ப் பாடசாலை மாணவர்களை பஸ்ஸிலிருந்து பலவந்தமாக வெளியேற்றும் காணொளியொன்று சமூக வலைத்தளங்களில் வைரலாகிவரும் நிலையில், நுவரெலியா மாவட்டத்தில் அரச பஸ்களில் பருவகால சீட்டுகளைப் பெற்ற தமிழ் மாணவர்களைப் புறக்கணிக்கும் நிலையை மிக நீண்டகாலமாக செய்து வருகின்றார்கள்.




*ஹட்டன் அரச பஸ் நடத்துநரொருவர் கினிகத்தேனை கடவளை தமிழ்ப் பாடசாலை மாணவர்களை பஸ்ஸிலிருந்து பலவந்தமாக வெளியேற்றும் காணொளியொன்று சமூக வலைத்தளங்களில் வைரலாகிவரும் நிலையில், நுவரெலியா மாவட்டத்தில் அரச பஸ்களில் பருவகால சீட்டுகளைப் பெற்ற தமிழ் மாணவர்களைப் புறக்கணிக்கும் நிலையை மிக நீண்டகாலமாக செய்து வருகின்றார்கள்.*

இவ்வாறான ஒரு நிலைமை சமூக வலைத்தளங்கள் இருந்ததனால் தெரியவந்தது. ஆனால், இந்நிலை நாடுபூராவும் நடக்கிறது. அவை வெளிவரவில்லை. இ.போ.சவில் கடமை புரிவோரெல்லாம் இப்படியான கீழ்த்தரமான வேலைகள் செய்வதில்லை. நல்ல மனிதர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

அதேவேளை, 2025 பெப்ரவரி மாதம் இ.போ.ச வெளியிட்டுள்ள அறிக்கையின்படி - அதாவது, பருவகாலச் சீட்டை (Season ticket)) வைத்திருக்கும் பாடசாலை மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் முதியவர்களை இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்களில் ஏற்றிச்செல்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அத்தோடு, இலங்கை போக்குவரத்துச் சபை விடுத்துள்ள அறிக்கையில், இவ்விடயங்கள் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

யாரேனும் ஊழியரொருவர் இந்தப் பருவச்சீட்டை (Season ticket) வைத்திருப்பவர்கள் அனைவரையும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களில் ஏற்றிச்செல்ல வேண்டும் என்று அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், அவர்களை ஏற்றிச்செல்ல மறுக்கும் பஸ் ஊழியர்களுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இ.போ.ச. அறிவித்துள்ளது. முறைப்பாடுகள் இருப்பின், 1958 என்ற எண்ணை அழைத்து ஞடுவுடீ தகவல் மையத்துக்குப் பிரச்சினைகளைக் கூறும்படி சொல்லியுள்ளது. எனவே, இதில் இ.போ.ச. தனது நிர்வாகப் பொறிமுறையை செவ்வனே செய்துள்ளது. இருந்தபோதிலும் கடமையில் இருந்த அதிகாரியே தமது கடமையை துஷ்பிரயோகம் செய்திருக்கின்றாரென்பது தெரியவருகிறது.

இவ்வாறான இனவாத போக்குடன் நடந்துகொள்ளும் சிலரால் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம், இன ஒற்றுமை வீணடிக்கப்படுகிறது. மலையக சமூகம் கல்வியில் முன்னோக்கிச் செல்லமுடியாமல் இருப்பதற்கு இதுபோன்ற சம்பவங்கள் காரணமாகின்றன.

கினித்தேனை கடவளை விக்னேஷ்வரா தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த அநீதியை காணொளியில் பார்த்த போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, பாராளுமன்றத்தில் மாணவர்களிடம் தாம் மன்னிப்புக் கேட்பதாக கூறியதோடு, பஸ் நடத்துநருக்கு 07-03-2025 பணியிடைநீக்கம் செய்யப்பட்டதாகக் கூறியதுடன் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறினார். அத்தோடு ஹட்டன் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் சிலர் மாணவர்களுக்கு ஏற்பட்ட இந்த அடிப்படை மனித உரிமை மீறல் இனியும் நடக்காதிருக்கும் வகையில் விசாரணையொன்றை நடத்தக்கோரி ஹட்டன் மனித உரிமை காரியாலயத்தில் முறைப்பாட்டுக் கடிதமொன்றையும் கையளித்துள்ளார்கள்.

இதுபோன்ற அசௌகரியங்கள் பல பிரதேசங்களில் நடக்கின்றன. ஆனாலும் அவை வெளிச்சத்துக்கு வராமல் போய்விடுகின்றன. மாணவர்களுக்கு ஏற்படும் அநீதிக்கு எதிராக குரல் கொடுப்பதற்கு எப்போதும் மாணவர்களாகி நீங்கள் தயாராக இருங்கள்.

நல்லொழுக்கம், நற்பண்புகளை வளர்த்துக் கொள்வதோடு அநீதி எங்கு நடந்தாலும் தட்டிக் கேட்கத் தயாராகுங்கள்.

நாளைய உலகம் உங்கள் கைகளில்!

---

## உள்ளூராட்சி....(11 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

**04. சமூக ஒருமைப்பாட்டைப் பேணுபவர்**

தமிழ், சிங்கள, முஸ்லிம் ஆகிய சமூகங்களையும் இணைக்கக்கூடிய இனவாத அரசியலை விலக்கி சக ஜீவனத்துக்கு முக்கியத்துவம் அளிக்கக்கூடிய தலைவர்கள் தேவைப்படுகின்றனர்.

ஒவ்வொரு சமூகத்தினதும் உரிமைகளை மதிக்கும் சமத்துவமான பார்வை கொண்டிருப்பவர் இருக்கவேண்டும்.

**05. பரிந்துரை இல்லாத திறமைமிக்கவர்கள்**

கட்சித் தலைவர்கள் தங்களது குடும்ப உறுப்பினர்களை முன்வைப்பதை விட உண்மையான திறமைகொண்ட புதிய முகங்களை வழங்கவேண்டும்.

பணத்துக்காக பதவியை வாங்கும் கொள்கையை முறியடித்து கல்வியறிவும் அனுபவமும் உள்ளவர்கள் வாய்ப்புப் பெறவேண்டும்.

**06. நவீன மானிடவியல் மற்றும் திட்டமிடல் திறன் கொண்டவர்கள்**

புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பிரதேச அபிவிருத்திக்கு முனைவராக இயங்கக்கூடிய தலைவர்கள் தேவைப்படுகின்றனர்.

அரசாங்க மற்றும் தனியார் துறைகளுடன் இணைந்து வேலைவாய்ப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற அம்சங்களை மேம்படுத்தக்கூடியவராக இருக்கவேண்டும்.

இவ்வாறான தகைமைகளைக்கொண்ட சிறந்த வேட்பாளர்களை நிறுத்தி வெற்றிபெறச்செய்து நிர்வாகப் பொறுப்புகளை ஒப்படைத்தால் மட்டுமே நடைபெறப்போகும் 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இலங்கையின் எதிர்காலத்துக்கு ஒரு முக்கிய கட்டமாக அமையும்.

பழைய அரசியல் நோய்களை நீக்கி சமூகத்தை நேர்மையாக வழிநடத்தக்கூடிய திறமைமிக்க - மக்கள் நலனில் அக்கறை கொண்ட புதிய தலைமுறையின் வேட்பாளர்கள் முன்வரவேண்டும். அவ்வாறான இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் பாரம்பரிய அரசியல் கட்சிகளில் இடம் கிடைக்காது போனால் அப்பிரதேசத்திலுள்ள இளைய தலைமுறையினர் ஒன்றிணைந்து சுயேச்சை வேட்பாளர்களாகப் போட்டியிட முன்வரவேண்டும்.

இது இலங்கையின் அரசியல் பண்பை, கலாசாரத்தை மாற்றக்கூடிய ஒரு வாய்ப்பாக அமையும். அதிகப்படியான அரசியல்மயமாக்கல், ஊழல் மற்றும் நிதி சுயாட்சி இல்லாமை காரணமாக இலங்கையின் உள்ளூர் அரசாங்க நிறுவனங்கள் பெரும்பாலும் சரியான திசையில் நகரத் தவறிவிட்டன.

அவசர சீர்திருத்தங்கள் இல்லாமல், பிரதேச சபைகள், நகர சபைகள் மற்றும் மாநகர சபைகள் பயனற்றதாகவே இருக்கும். இதன் வெற்றியை உறுதிப்படுத்த, இலங்கை அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும். பயிற்சி மூலம் உள்ளூர்த் தலைமைகளை வலுப்படுத்த வேண்டும்.

வெளிப்படைத்தன்மையை அதிகரிக்க வேண்டும் மற்றும் அரசியல் நலன்களை விட சமூகத் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் நீண்ட கால வளர்ச்சிக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும். இவை முறையாக செயற்படுத்தப்பட்டால் இந்த நடவடிக்கைகள் உள்ளூர் நிர்வாகத்தை மிகவும் பொறுப்புக்கூறக்கூடிய திறமையான மற்றும் மக்கள் மயப்படுத்தப்பட்ட அமைப்பாக மாற்றும்.

வரவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல், இலங்கையின் அடிமட்ட நிர்வாகத்தை வலுப்படுத்த ஒரு வாய்ப்பாக அமையும். இந்த வாய்ப்பை சரியான முறையில் பயன்படுத்தி, வாக்காளர்கள் கட்சி விசுவாசத்தைத் தாண்டி, தங்கள் சமூகங்களுக்கு சிறந்த நபர்களைத் தேர்ந்தெடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

அரசியல் கட்சிகள், திறமையான, நேர்மையான மற்றும் சேவை சார்ந்த வேட்பாளர்களை நிறுத்துவதற்கு பொறுப்பேற்க வேண்டும்.

கிராமப்புற மேம்பாடு உள்ளூர் நிர்வாகத்தின் மையத்தில் இருக்கவேண்டும். இலங்கையின் அரசியல் எதிர்காலம் பாராளுமன்றத்தில் மட்டுமல்ல, உள்ளூராட்சி மன்றங்களிலும் வடிவமைக்கப்படல் வேண்டும் என்பதையே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்கள் அரசியல் செல்வாக்கு, ஊழல் மற்றும் நிதி சுயாட்சியின்மை காரணமாக பெரும்பாலும் தோல்வியடைந்துள்ளன.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க, அதிகாரப் பிரசாதம் வழங்கி, நிர்வாகத் திறனை மேம்படுத்தி, வெளிப்படைத்தன்மை கொண்ட நிர்வாக முறைமையை உருவாக்க வேண்டும். சரியான மாற்றங்கள் செய்யப்பட்டால் மட்டுமே உள்ளூராட்சி மன்றங்கள் ஒரு மக்கள் மயமான செயற்றிறன் கொண்ட ஆட்சிமுறையாக மாறும்.

---



## ஆருப்பையா கங்காணி

**த.யுவராஜ்**

**லெச்சுமி:** *என்ன கங்காணியண்ணே ஒன்னாம் தேதியதுமா மலையில ஒரே கூட்டமா இருக்கு. என்ன விசியம்?*

**கங்காணி:** *ஒனக்கு விசியம் தெரியாதா. இன்னக்கி நம்ம தோட்டத்துல கொழுந்து எடுக்குற போட்டி. அதா மேனேஜர். பெரிய தொர எல்லாரும் வந்துருக்காங்க.*

**லெச்சுமி:** *அது தா வருசா வருசம் செய்றாங்களே. அதுலயும் அந்த ராணியக்கா தா பெஸ்ட் அடிக்கும். இதுல என்ன புதுசா ஏதயும் செய்யப் பொறாங்களா என்ன?*

**கங்காணி:** *அது என்ன புள்ள அப்படி சொல்லிப்புட்ட இதுல எவலோ விசியம் இருக்கு தெரியுமா?*

**லெச்சுமி:** *அப்படி என்ன இருக்கு நல்லா கொழுந்து எடுக்குற பத்து பேர எடுத்து ஒரு அளவு டைம் கொடுத்து கொழுந்து பறிக்க சொல்லுவீங்க. அந்த நேரத்துக்குள்ள அதிகமான கிலோ கொழுந்து எடுக்குற ஆளுக்கு பெஸ்ட் எடம் கொடுப்பீங்க. இவளோ தானே நடக்கும்.*

**கங்காணி** – *அது மட்டும் இல்ல லெச்சுமி. இதுல இன்னொரு அரசியல் விசியமும் இருக்கு ஆனா அது யாருக்கும் தெரியாது.*

**லெச்சுமி** – *அப்படி என்ன அண்ணே இருக்கு எனக்கு தெரியாம?*

**கங்காணி** – *அது என்னன்னா இப்ப ஒவ்வொரு வருசமும் நம்ம மலையகத்துல உள்ள தோட்டங்கள்ள இந்த மாரி கொழுந்து பறிக்கிற போட்டி நடத்துவாங்க அது ஒனக்கு தெரியும்.*

**லெச்சுமி** – *ஆமாண்ணே அது பொதுவா எல்லா ஊர்கள்ளயும் நடக்குது தானே.*

**கங்காணி** – *ஆனா அதுல தா ஒரு விசயம் இருக்கு.*

**லெச்சுமி** – *அப்படி என்ன இருக்கு?*

**கங்காணி** – *சொல்றேன் கேளு. பொதுவா நம்ம தோட்டங்கள்ள நடக்கு இந்த கொழுந்து பறிக்கிற போட்டி தோட்ட மக்களுக்கு சந்தோஷம் தார விசியமாவும் தோட்ட நிர்வாகம் நம்மள நல்லா வச்சிருக்காங்க அப்பாடி தா வெளியில இருந்து பாக்குற எல்லாருக்கும் தெரியும்.*

*இப்படி வெளியில இருந்து பார்க்குறவங்களுக்கு தோட்ட நிர்வாகம் நல்லா நடக்குது அப்படீனு காட்டுறது தா இதோட முதல் விசியம். ஆனா இதயே வேற பக்கம் பாத்தா ஒரு தோட்ட நிர்வாகத்தோட தந்திரமான செயலும் ஒழிஞ்சிருக்கத பாக்க முடியும்.*

*அதாவது, இப்ப நம்ம நாட்ட பொறுத்தவரைக்கும் மலையக மக்களுக்கு பெருசா எந்த சலுகைகளும் கிடைக்கிறது இல்ல. உதாரணத்துக்கு சம்பளம். தனிவீடு, காணி இப்படி பல பிரச்சனைகள் இருக்கு இந்த பிரச்சனைகளுக்கு மத்தில வாழுர மக்களுக்கு இந்த தோட்ட நிர்வாகங்கள் பெருசா எந்த உதவியும் பன்றது இல்ல அது தா உண்ம.*

*ஆனா அத வெளிகாட்டிக்காம எங்ககிட்ட வேல செய்ற மக்கள நாங்க நல்ல முறையில வச்சிருக்கோனு சொல்லி இந்த மாரி சின்ன விளையாட்டுக்கள செய்வாங்க.*

*இதுநால வெளியில இருந்து பாக்குறவங்களுக்கு இந்த தோட்ட நிர்வாகம் அவங்க கிட்ட வேல செய்ற மக்கள நல்லபடியா வச்சிருக்கு அவங்களுக்கு தேவையான எல்லா உதவிகளையும் செய்து அப்படீனு சொல்லுவாங்க. இந்த ஒரு காரணத்துக்காக தா இப்படியான வேலைகள செஞ்சிக்கிட்டு வாராங்க.*

**லெச்சுமி** – *ஆமாண்ணே நீங்க சொல்றத பாக்கும் போது உண்ம மாறித்தா இருக்கு அண்ணே.*

**கங்காணி** – *சரி நீ அன்னக்கி எஸ்டேட் ஒப்பீசுக்கு லெட்டர் ஒன்னு வாங்க போனியே அத ஒடனே கொடுத்துட்டாங்களா.*

**லெச்சுமி** – *எங்கண்ணே சரியா ரெண்டு கெழம போனுச்சி அந்த லெட்டர வாங்குரதுக்கு. இத்தனைக்கும் நா இந்த தோட்டத்துல தா இருக்கே அப்படினு சொல்றதுக்கு வாங்கப் போன லெட்டர் தா அது.*

**கங்காணி** *அதுக்கு என்ன என்ன சொன்னாங்க*

**லெச்சுமி** – *இந்த லெட்டர எஸ்டேட்ல இருந்து கொண்டு வார டயரில வச்சி அனுப்புங்க. பெரிய கணாபுள்ளைகிட்ட கையெழுத்து வாங்கி அனுப்புங்கனு சொன்னாங்க.*

*அடுத்த நாள் போனா மேனேஜர் வரலனு சொன்னாங்க.*

*அடுத்த நாள் போனா இந்த லெட்டர்ல பெழ இருக்கு மாத்தி எழுதிகிட்டு வாங்கனு சொன்னாங்க.*

*அத சரியா எழுதிக்கிட்டுப் போன இன்னக்கி சின்ன தெதொர வாரல நீங்க நாளைக்கு வாங்கனு சொன்னாங்க.*

*அடுத்த நாளும் போனே அதுக்கு மேனேஜர் லீவுல போயிருக்காரு அடுத்த கெழம தா வருவாரு நீங்க அடுத்த கெழம வாங்கனு சொன்னாங்க.*

*இப்படியே ரெண்டு கெழம போயிருச்சி அதுக்கு பெறகு ரெண்டு கெழம கழிச்சி ஒரு மாறி அந்த லெட்டர கொடுத்தாங்க.*

**கங்காணி** – *இப்ப சொல்லு நம்ம தோட்ட நிரிவாகம் நம்மளுக்கு நல்லதா பன்னுது?*

**(தொடரும்...)**

# பிழையற்ற தமிழ் அறிவோம்

**அத்தனைக் குரங்குகளா, அத்தனை குரங்குகளா?**

01. அது, இது, எது முன் மிகாது.
(எ-டு) அது பெரிது, இது சிறிது, எது கரும்பு?

02. அவை, இவை, எவை முன் மிகாது.
(எ-டு) அவை சென்றன, இவை கண்டன, எவை தின்றன?

03. அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு?
(எ-டு) அவ்வாறு சொன்னார், இவ்வாறு செப்பினார், எவ்வாறு கண்டார்?

04. ஒரு, இரு, அறு, எழு என்னும் எண்களின் முன் மிகாது.
(எ-டு) ஒரு கோடி, இரு தாமரை, அறுபதம், எழுசிறப்பு.

05. பல, சில முன் மிகாது
(எ-டு) பல சொற்கள், சில பதர்கள், பல தடைகள், சில கனவுகள்.

06. உகர ஈற்று வினையெச்சங்கள் முன் மிகாது.
(எ-டு) வந்து சென்றான், நின்று கண்டான்.

07. அத்தனை, இத்தனை முன் மிகாது.
(எ-டு) அத்தனை குரங்குகள், இத்தனை பசுக்களா?

**குறிப்பு:** அத்துணை முன் மிகும்.
(எ-டு) அத்துணைப் பெயர்களா? இத்துணைச் சிறப்பா?

08. பெயரெச்சம் முன் மிகாது.
(எ-டு) ஓடாத குதிரை, வந்த பையன், பறந்த புறா

**குறிப்பு:** ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் முன் மிகும்.
(எ-டு) ஓடாக் குதிரை, பாடாத் தேனீ.

09. என்று, வந்து, கண்டு முன் மிகாது.
(எ-டு) என்று சொன்னார், வந்து சென்றார், கண்டு பேசினார்.

வல்லொற்று மிகுமிடங்கள், மிகாவிடங்கள் அனைத்தும் ஈண்டு உரைக்கப்படவில்லை.

சுருக்கமான பட்டியலொன்று தரப்பட்டுள்ளது. இதனில் வரும் சில இலக்கணச் செய்திகளையும் அறிந்துகொள்ள வேண்டும்.

வேற்றுமை உருபுகள் (2 முதல் 7 முடிய) விரிந்து (வெளிப்படையாக) இருப்பின் வேற்றுமை விரி எனப்படும். நூலைக் கற்றான் - இதில் ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்பாடாக உள்ளது. உருபு மறைந்துவரின் வேற்றுமைத் தொகை எனப்படும். பால் பருகினான் - இதில் பாலைப் பருகினான் எனும் பொருள் புலப்பட்டாலும் ஐ என்னும் உருபு மறைந்துள்ளது.

ஒரு வினைச்சொல் நிற்க, அது பொருள் நிறைவு பெறாமல் இருந்து, வேறொரு வினைச்சொல் கொண்டு நிறைவுற்றால் அது வினையெச்சம். (எ-டு) வந்து (முற்றுப் பெறாத வினை) நின்றான் என்ற வினைமுற்றைக் கொண்டு நிறைவுபெறும்.

இதுபோல் முற்றுப்பெறாத வினை, ஒரு பெயர்ச்சொல்லைக்கொண்டு முடிந்தால் பெயரெச்சம் எனப்படும். வந்த (முற்றுப் பெறாத வினை) பையன் என்னும் பெயரைக் கொண்டு முடிந்தது. இந்த வகையான பெயரெச்சத்தில் ஈற்றெழுத்து (வினையின் கடைசி எழுத்து) இல்லாமற்போயிருந்தால் (கெட்டிருந்தால்) அது ஈறு கெட்ட பெயரெச்சம்; அதுவே எதிர்மறைப் பொருளும் (இல்லை என்பது) தருமானால் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

(எ-டு) உலவாத் தென்றல் - உலவாத தென்றல் என்பதில் 'த்' என்னும் ஈற்றெழுத்துக் கெட்டு (இல்லாமற் போய்) உலவா என நின்று 'த்' வல்லொற்றுடன் கூடி உலவாத் தென்றல் ஆயிற்று. தென்றல் உலவும் (அசையும்) இது உலவாத (அசையாத) என்னும் எதிர்மறைப் பொருள் தருதல் காண்க.

ஆறு தொகையுள் ஒன்று பண்புத் தொகை. பண்பு உருபு ஆகி மறைந்து கெட்டிருக்கும். 'மை' விகுதியும் கெட்டிருக்கும். (எ-டு) செந்தாமரை - இதனைச் செம்மை ஆகிய தாமரை என விரித்தல் வேண்டும். இருபெயர் ஒட்டிப் பண்புத் தொகையாக வரின் அது இரு பெயரொட்டுப் பண்புத் தொகை எனப்படும். (எ-டு) வட்டக்கல் - வட்டமாகிய கல். கல்லே வட்டம். வட்டமே கல்.

**(தமிழ் வளரும்)**
**(நன்றி தினமணி)**

# வேகமாக அழிந்துகொண்டிருக்கும் சிலந்திச் சங்குகள்!


ராமேஸ்வரம் முதல் கன்னியாகுமரி வரையான மன்னார் வளைகுடா கடற்பகுதி கடற்கரையோரங்களில் மிக அதிகமாக வாழும் சங்கு வகைகளில் வித்தியாசமான உடலமைப்பைக்கொண்டதே சிலந்திச் சங்கு.

இது பார்ப்பதற்கு சிலந்தியைப்போல் இருப்பதாலும் ஐந்து விரல்களைக் கொண்டு இருப்பதாலும் இதனை 'சிலந்திச் சங்கு' என்றும் 'ஐவிரல் சங்கு' என்றும் மீனவர்கள் அழைக்கின்றனர். ஸ்ட்ரோம்பிடே எனப்படும் குடும்பத்தைச் சேர்ந்த இந்தச் சிலந்திச் சங்குகளின் விலங்கியல் பெயர் 'லேம்பிஸ்' (Lambis) என்பதாகும்.

குறைந்தபட்சம் 18 செ.மீ. முதல் 29 செ.மீ. நீளம் வரை வளரும் உயிரினம். அதிக கனமுடையதாகவும் அளவில் பெரியதாகவும் இருக்கும் இந்தச் சங்கின் பின்புறம் இயற்கையாகவே மிகவும் பளபளப்பாக மேற்புற ஓடு வெள்ளை நிறத்திலும் பழுப்பு நிறப் புள்ளிகளை உடையதாகவும் இருக்கும். இச்சங்கிலுள்ள திடமான கால் பாதத்தின் உதவியால் கனமான அந்த ஓட்டைத் தூக்கிக்கொண்டு இடம் விட்டு இடம் பெயர்ந்து இரை தேடிக்கொள்கின்றன.

இதனுள்ளே இருக்கும் பூச்சி போன்ற உயிரினம் சுவை மிகுந்த இறைச்சியாக மீனவ மக்களால் பயன்படுத்தப்படுகிறது.

இறைச்சியை எடுத்த பிறகு, அதன் ஓடு சுத்தப்படுத்தப்பட்டு மேலும் பளபளப்பாக்கி அலங்காரப் பொருட்களாக மாற்றி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.



இவ்வகைச் சங்குகளில் ஆண் சிலந்திச் சங்கின் சிறு விரல்கள் கீழ் நோக்கி வளைந்தும் பெண் சிலந்திச் சங்கின் சிறு விரல்கள் மேல் நோக்கி வளைந்தும் காணப்படும். ஓரஞ்சு மற்றும் பிங்க் நிறத்தில் இவை காணப்படுகின்றன. சிலந்திச் சங்குகள் அவை நகரும் இடத்தின் நிறத்துக்கேற்ப அதன் மேற்புற ஓட்டின் நிறத்தையும் அடிக்கடி மாற்றிக்கொண்டே இருக்கக் கூடியவை. எனவே, இவை எளிதில் கண்களுக்குத் தெரிவதில்லை. இந்த வசதியைத் தங்களைப் பாதுகாக்கவும் இவை பயன்படுத்திக்கொள்கின்றன.

மாங்குரோவ்ஸ் எனப்படும் சதுப்பு நில காடுகளிலும் பவளப்பாறைகள் அதிகமாகவுள்ள பகுதிகளிலும் இவை வாழ்கின்றன. உலகம் முழுவதுமுள்ள வெப்ப மண்டலக் கடல்களில் அதிகமாக வாழ்ந்தாலும் தீவுப்பகுதிகளின் கரையோரங்களில் சுமார் 5 மீற்றர் ஆழத்திலும் கூட இவை வசிக்கின்றன.

கடலிலுள்ள பாசி வகைகளில் ஒருவகையான சிவப்பு நிறப் பாசிகளைத் தின்று உயிர் வாழும் இவ்வினங்கள், ஆழம் குறைவான இடங்களில் வசிக்கின்றன.

# Puffer Fish பற்றிய சில சுவாரஸ்ய தகவல்கள்...



கடல்களில் வாழும் பல அதிசய உயிரினங்களில் ஒன்றுதான் பஃபர் மீன் (Puffer Fish). தன்னைத் தற்காத்துக் கொள்ளும் விதமாக தன் உடலை பல மடங்கு பெரிதாக்கிக்கொள்ளும் திறன் கொண்ட இந்த மீன், தனது வித்தியாசமான தோற்றம் காரணமாக உலகெங்கிலும் பிரபலமாகவுள்ளது.

**பஃபர் மீனைப் பற்றிய சில சுவாரஸ்யமான உண்மைகள்:**

**உடல் வடிவம்:** பஃபர் மீன்கள் தங்கள் உடலைப் பல மடங்கு பெரிதாக்கிக் கொள்ளும் திறன் கொண்டவை. இதற்குக் காரணம் அவற்றின் உடலிலுள்ள நீர் நிரப்பப்பட்ட பைகள். பொதுவாக, இவை கோள வடிவிலும் பல்வேறு வர்ணங்களிலும் காணப்படும். சில பஃபர் மீன்கள் மிகவும் பிரகாசமான நிறங்களில் இருக்கும். இது அவற்றை கடல்வாழ் உயிரினங்களில் மிகவும் அழகான ஒன்றாக ஆக்குகிறது.

**தற்காப்பு முறை:** பஃபர் மீன்கள் தங்களைக் கொல்லும் நோக்கில் மற்ற உயிரினங்கள் தாக்கும்போது, தங்கள் உடலை பல மடங்கு பெரிதாக்கிக்கொள்ளும். இது வேட்டையாடுபவர்களை பயமுறுத்தி ஓடிவிட வைக்கும். மேலும், அவற்றின் தோல் முட்கள் நிறைந்ததாக இருப்பதால், இது மற்ற உயிரினங்களைத் தாக்கிக் காயப்படுத்தும்.

**நச்சுத்தன்மை:** இந்த மீன்களின் உடலில் டெட்ரோடாக்சின் என்ற மிகவும் வலிமையான நச்சுப்பொருள் உள்ளது. இந்த நச்சு, சயனைடை விட 1200 மடங்கு வலிமையானது. சிறியளவு நச்சு கூட மனிதனை உடனடியாக கொல்லும் திறன் கொண்டது. இருப்பினும், சில நாடுகளில் பஃபர் மீனை சமையல் செய்து உணவாக உட்கொள்வது வழக்கமாக உள்ளது.

**உணவு:** பஃபர் மீன்கள் பாசிகள், சிறு மீன்கள், இறால் மற்றும் பிற கடல்வாழ் உயிரினங்களை உணவாகக் கொள்ளும். சில இனங்கள் கடற்பாசி மற்றும் கடற்புற்களை உண்ணும் தன்மை கொண்டவை.




**வாழிடம்:** உலகின் அனைத்து கடல்களிலும் இந்த மீன்கள் காணப்படுகின்றன. ஆழ்கடல், பவளப்பாறைகள், கடற்கரைப் பகுதிகள் எனப் பல்வேறு வாழிடங்களில் இவை வாழ்கின்றன.

**இனப்பெருக்கம்:** பஃபர் மீன்கள் பெரும்பாலும் வெப்பமண்டல மற்றும் துணை வெப்பமண்டல கடல்களில் இனப்பெருக்கம் செய்கின்றன. பெண் மீன்கள் பெரியளவில் முட்டைகளை இடும். ஆண் மீன்கள் முட்டைகளைக் கருவுறச் செய்து பாதுகாக்கும்.

**மனிதர்களுடனான தொடர்பு:** ஒருசில நாடுகளில் இந்த மீன் மிகவும் பிரபலமான உணவு. குறிப்பாக, ஜப்பானில் புஃகு என்ற பெயரில் இது மிகவும் விலையுயர்ந்த உணவாகக் கருதப்படுகிறது. ஆனால், இந்த மீனை சமைக்கும் முறை மிகவும் சிக்கலானது. சிறியளவு நச்சு கூட உயிருக்கு ஆபத்தானதென்பதால், பஃபர் மீனை சமைக்க குறிப்பிட்ட பயிற்சிபெற்ற சமையல்காரர்களே அனுமதிக்கப்படுவார்கள்.

**அழிந்து வரும் இனம்:** சில வகை பஃபர் மீன்கள் அதிகளவில் வேட்டையாடப்படுவதால், அழிந்துவரும் இனமாக உள்ளன. கடல் மாசுபாடு மற்றும் வாழிட அழிவு போன்ற காரணங்களும் இவற்றின் எண்ணிக்கையைக் குறைக்கின்றன.

# குறுக்கெழுத்துப் போட்டி - 59



**இடமிருந்து வலம்**

01. தீபாவளி தினத்திலும் இந்தச் சத்தம் கேட்கும்.
02. இசைக்கருவி.
04. குழந்தைகளின் திருந்தாச் சொல்.
05. ஆறு.
09. தேசம்.
11. முதல் கருக்கொண்ட மனைவிக்கு 7ஆம் மாதம் செய்யும் சடங்கு.
12. புனித இடம் (குழம்பியுள்ளது).
17. மடிப்பு.
20. இளஞ்சந்திரன்.

**மேலிருந்து கீழ்**

01. போட்டியின்போது இதனை எதிர்பார்ப்பர்.
03. ...விட்டு எண்ணுமளவுக்கே மக்கள் இருந்தனர்.
04. நடு (குழம்பியுள்ளது).
08. சோதனை.
09. ஓர் உலோகம்.
12. தன்னைக் காத்துக்கொள்ளல்.
13. நாணுதல்.
14. யோசனை.
15. கையளவு.

**கீழிருந்து மேல்**

06. பெறுமதி.
10. இடை.
17. பச்சை இரத்தினக்கல்.

**வலமிருந்து இடம்**

07. நீரில் ஓடும் மரக்கலம் (குழம்பியுள்ளது).
10. அவமதித்தல்.
15. கலகம்.
16. ஜூரம் (குழம்பியுள்ளது).
18. மின்சாரக் கம்பிவழிச் செய்தி (குழம்பியுள்ளது).
19. தஞ்சம் (குழம்பியுள்ளது).

**குறுக்கெழுத்துப் போட்டிக்கான சரியான விடையை எழுதி அனுப்பும் இருவருக்கு தலா 1000 ரூபா பணப்பரிசு வழங்கப்படும்**

**சரியான விடையை thamilanweekly@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதி அனுப்பலாம். வாட்ஸ்அப் இல: 0761393805**

## குறுக்கெழுத்துப் போட்டி - 58க்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 கா | ர | ம் | | 2 நா | ட | 3 க | ம் | | 4 அ |
| வ | | ட | | ட் | | னி | | 5 பி | ள |
| ல | | 6 மே | ள | கா | ர | ன் | | | ந் |
| ன் | | | | ட் | | | ய் | | து |
| | | 7 ம | ண் | டி | | தி | 8 தா | | |
| ரோ | | | 9 ப | | 10 கோ | | ந் | து | 11 நீ |
| 12 ப | ட் | 13 சி | | 14 பீ | டை | | றா | | தி |
| ட் | | ர | | தி | | 15 நா | ற் | | |
| டா | | ங் | | | ரு | | 16 மா | லு | 17 மி |
| | றி | 18 கு | | 19 கை | 20 தி | | | 21 கொ | தி |

**சரியான விடைகளை அனுப்பியவர்**
**ஏ.எல்.எம். சித்தீக் - காத்தான்குடி -06**



# டான்சர் என்ற முத்திரையை உடைக்க விரும்பும் ஸ்ரீலீலா

தெலுங்கு சினிமாவில் வேகமாக வளர்ந்துவரும் இளம் முன்னணி நடிகை ஸ்ரீலீலா. தற்போது தமிழில் சிவகார்த்திகேயனின் பராசக்தி படத்தில் நடிக்கிறார். இதுதவிர ஹிந்தியிலும் நடிக்கிறார்.

நடிப்பைத் தாண்டி நடனத்திலும் பெயர் பெற்றவர் ஸ்ரீலீலா. மகேஷ் பாபுவுடன் ஆடிய மடக்கி தட்டு, அல்லு அர்ஜுனுடன் ஆடிய கிஸ்ஸிக் ஆகிய பாடல்களில் இவரது நடனம் பெரிதும் பேசப்பட்டது.

தற்போது தெலுங்கில் நிதினுடன் ராபின்ஹுட் என்ற படத்தில் நடித்துள்ளார். இப்பட விழாவில் பேசிய தொகுப்பாளர், லீலா என்றால் பாட்டு, பாட்டு என்றால் நடனம், நடனம் என்றால் லீலா என்றார். இதற்கு உடனடியாக பதிலளித்த ஸ்ரீலீலா, லீலா என்றால் வசனம், வசனம் என்றால் நடிப்பு, நடிப்பு என்றால் லீலா. இதற்காகவே இந்தப் படத்தில் நடித்தேன் - என்றார்.

தனது நடிப்பு பேசப்படுவதை விட நடனம் ஆடுவதுதான் பேசப்படுகிறது. இதனால் தன் மீது டான்சர் என்ற முத்திரை விழுந்துவிட்டது. இதை உடைத்து நடிகை என்று கூற வேண்டும் என்பதற்காகவே இப்படி ஒரு பதிலை அளித்துள்ளார் ஸ்ரீலீலா.




# இயக்குநராக அவதாரம் எடுக்கும் ஜெயம் ரவி!



தமிழ்ச் சினிமாவில் முன்னணி நடிகராக வலம் வருபவர் ஜெயம் ரவி. 'ஜெயம்' படத்தின் மூலம் அறிமுகமான இவர், ஆரம்பத்திலிருந்தே வித்தியாசமான கதைகளைத் தேர்ந்தெடுத்து நடித்து வருகிறார். சமீபத்தில் இவரது நடிப்பில் 'காதலிக்க நேரமில்லை', 'பிரதர்' ஆகிய படங்கள் வெளியாகின. அதனைத் தொடர்ந்து கராத்தே பாபு, ஜீனி, பராசக்தி ஆகிய படங்களை தன் கைவசம் வைத்துள்ளார். இதற்கிடையில், ரவிமோகன் புதிய படமொன்றை இயக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தப் படத்தில் நடிகர் யோகி பாபு கதாநாயகனாக நடிப்பாரென்று கூறப்படுகிறது. முன்னதாக கோமாளி படத்தில் ஜெயம் ரவி மற்றும் யோகி பாபு இருவரும் இணைந்து நடித்திருந்தார்கள். அந்தப் படம் நல்ல வரவேற்பைப் பெற்றது. ரவிமோகன் இந்த புதிய படத்தை தன் வாழ்க்கையில் எதிர்கொண்ட சவால்களை ஒரு நகைச்சுவையான பேமிலி என்டர்டெயினர் படமாக இயக்க திட்டமிட்டுள்ளார். இப்படத்தின் படப்பிடிப்பு பணிகள் அடுத்த ஆண்டு ஜூன் மாதம் தொடங்குமென்று கூறப்படுகிறது. விரைவில் இப்படம் தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

# 'சரண்டர்' படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியீடு





அப்பிட் பிக்சர்ஸ் நிறுவனம் தனது முதல் பிரமாண்ட படைப்பாக சரண்டர் திரைப்படத்தை பெருமையுடன் வழங்கவிருக்கிறது. கிரைம்-ஆக்சன் திரில்லராகவும் உணர்வுபூர்வமாகவும் உருவாகியுள்ள இந்தப் படம், தமிழ்ச் சினிமாவில் முற்றிலும் புதுமையான அனுபவத்தைக் கொடுக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. படத்தின் தலைப்பு மற்றும் பெர்ஸ்ட் லுக் போஸ்டரை நடிகர் விஜய் சேதுபதி வெளியிட்டுள்ளார். விக்டர் குமார் தயாரிப்பில் உருவாகும் சரண்டர், அருமையான திரையரங்க அனுபவம் கொடுக்குமென படக்குழு நம்பிக்கை கொடுக்கிறது.

திரைக்கதை, இயக்கம் கௌதமன் கணபதி. இவர் பிரபல இயக்குநர் அறிவழகனுடன் துணை இயக்குநராக பணியாற்றியிருக்கிறார். தற்போது சரண்டர் படத்தின் மூலமாக இயக்குனராக அறிமுகமாகவிருக்கிறார். படத்தின் கதாநாயகனாக தர்ஷன் முதன்முறையாக பொலிஸ் அதிகாரியாக நடிக்கிறார். அவரது தீவிரமான நடிப்பு, கதாபாத்திரத்துக்கு உயிர் கொடுத்திருக்கிறதென இயக்குநர் பெருமிதத்துடன் கூறுகிறார். அதுமட்டுமல்ல, லால், சுஜித் சங்கர், முனிஷ்காந்த், மன்சூர் அலிகான், பதினே குமார் உள்ளிட்ட திறமையான நடிகர்கள் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்தப் படத்துக்காக, பிரபல இசையமைப்பாளர் விகாஸ் பதீசா தமிழில் முதல் முறையாக இசையமைக்கிறார்.

பிரபல இசையமைப்பாளர்களான தேவி ஸ்ரீ பிரசாத் உட்பட பலருடன் பணியாற்றிய இவர், தனித்துவமான இசை அமைப்புகளுக்காக பாராட்டப்பட்டவர்.படப்பிடிப்பு வெற்றிகரமாக நிறைவடைந்து, தற்போது சரண்டர் திரைப்படம் போஸ்ட் புரொடக்ஷன் பணிகளில் இருக்கிறது. தமிழ்ச் சினிமாவில் விறுவிறுப்பான புதிய அனுபவத்தை வழங்கும் இந்தப் படம் விரைவில் திரையரங்குகளில் வெளியாகும். பிக்பாஸ் நிகழ்ச்சிக்கு பிறகு தர்ஷன் கூகுள் குட்டப்பன் என்ற படத்தில் நடித்துள்ளார்.

# எம்.ஜி.ஆருக்குத் தங்கையாக ஜொலித்த தாரகைகள்!





அன்று மக்கள் திலகம் எம்.ஜி.ஆருக்குத் தங்கையாக பல தாரகைகள் நடித்திருந்தார்கள். அவர்களுள் ஒருசிலரை எடுத்துக்காட்டுவதே எம் நோக்கம். அவர்களுள் முதலாவதாக 1952ஆம் ஆண்டு வெளிவந்த 'என் தங்கை' படத்தில் ஈ.வி.சரோஜா, எம்.ஜி.ஆருக்குத் தங்கையாக வந்து இறுதியில் இறப்பதாக நடித்திருந்தார்.

ஏற்கனவே 1960ஆம் ஆண்டுகளில் வெளிவந்த 'மன்னாதி மன்னன்', 'ராஜா தேசிங்கு' போன்ற படங்களில் எம்.ஜி.ஆருடன் இணைந்த பத்மினி, 1961ஆம் ஆண்டு 'அரசிளங் குமரி' படத்தில் அவருக்குத் தங்கையாக நடித்தார்.

1963ஆம் ஆண்டு வெளிவந்த விஞ்ஞானக் கற்பனைப் படமான 'கலையரசி' படத்தில் வீ.சச்சு, எம்.ஜி.ஆருக்குத் தங்கையாக நடித்தார்.

அதே ஆண்டில் கலைஞர் கருணாநிதியின் கதை வசனத்தில் உருவான சரித்திரப் படமான 'காஞ்சித் தலைவன்' படத்தில் விஜயகுமாரி எம்.ஜி.ஆரின் பாசத் தங்கையாக வந்து ''ஒரு கொடியில் இரு மலர்கள் பிறந்ததம்மா'' பாடல் மூலம் அண்ணன் - தங்கை பாசத்தை தனிச் சிறப்பாக உணர்த்தினார். அதே விஜயகுமாரி எம்.ஜி.ஆருக்கு ஜோடியாக அதே ஆண்டு இறுதிப் பகுதியில் 'பரிசு' படத்தில் நடிக்க அழைத்தும் இவர் இனிமேல் தொடர்ந்து எம்.ஜி.ஆருக்குத் தங்கையாக மட்டுமே நடிப்பதாக உறுதிபூண்டார். இவர் 'விவசாயி' (1967) படத்தில் கே.ஆர்.விஜயாவின் அக்காவாக சில காட்சிகளில் வந்துபோனார். விஜயகுமாரி தொடர்ந்து 1968ஆம் ஆண்டு வெளிவந்த 'தேர்த்திருவிழா', 'கணவன்' போன்ற இரு படங்களிலும் தங்கையாக ஜொலித்தார்.

நடிகை புஷ்பலதா 'எங்கள் தங்கம்' (1970) படத்தில் எம்.ஜி.ஆரின் குருட்டுத் தங்கையாக நடித்திருந்தார். 1971ஆம் ஆண்டு வெளிவந்த 'ஒரு தாய் மக்கள்' படத்தில் உதயசந்திரிக்கா என்ற புதுமுக நடிகை எம்.ஜி.ஆருக்குத் தங்கையாக நடித்தார். 'இதய வீணை' (1972) படத்தில் லட்சுமி எம்.ஜி.ஆருக்குத் தங்கையாக அழகுசுந்தரியாக வந்து போனார்.

ஹிந்தியில் ராஜேஷ்கன்னா நடித்த 'சச்சா ஜூத்தா' படத்தைத் தழுவி எம்.ஜி.ஆர். இரு வேடங்களில் நடித்த 'நினைத்ததை முடிப்பவன்' (1975) படத்தில் ஊர்வசி சாரதா கால் ஊனமுற்ற தங்கையாக நடித்திருந்தார்.

எம்.ஜி.ஆரின் 'குலேபகாவலி' (1955), 'அரசிளங்குமரி' (1961) போன்ற படங்களில் நடித்திருந்த ராஜசுலோசனா அவருக்கு 'பரிசு' (1963) படத்தில் தங்கையாக ஜொலித்தார்.

1964இல் வெளிவந்த 'என் கடமை'யில் விஜயலட்சுமி எம்.ஜி.ஆருக்குத் தங்கையாக ஜொலித்தார். பின்னர் இவர் 'ஆயிரத்தில் ஒருவன்' (1965) படத்தில் நம்பியாரின் மனைவியாக ஒருசில காட்சிகளில் வந்துபோனார். நடனத் தாரகையான இவர் 'எங்க வீட்டுப் பிள்ளை' (1965) படத்தில் ''கண்களும் காவடிச் சிந்தாகட்டும்'' என்ற பாடல் ஆடல் காட்சியில் ஜொலித்தார்.

இன்றைய இளைய தலைமுறையினரும் விரும்பிக் கேட்கும் பாடலான 'குடியிருந்த கோயில்' (1968) படத்தில் இடம்பெற்ற ''ஆடலுடன் பாடலைக் கேட்டு ரசிப்பதினால் சுகம் சுகம்....'' பாடலை யாருக்குத்தான் மறக்க முடியும். இப்பாடலில் எம்.ஜி.ஆருடன் இணைந்த இவர் ஆடிய நடனம் பலே!

எம்.ஜி.ஆரின் 'பெரிய இடத்துப் பெண்', 'தாழம்பூ' போன்ற படங்களில் ஏற்கனவே நடித்திருந்த மணிமாலா 'பணக்கார குடும்பம்' (1964) படத்தில் தங்கையாக வந்தார். இப்படத்தில் இவர் எம்.ஜி.ஆருடன் ''ஒன்று எங்கள் ஜாதியே ஒன்று எங்கள் நீதியே...'' என்ற பாடல் காட்சியில் அண்ணன் தங்கையாக இணைந்து பாடிய மணிமாலாவை ரசிகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

1962இல் எம்.ஜி.ஆரின் 'பாசம்' படத்தின் மூலம் திரையுலகில் காலடி வைத்தவர் ஷீலா. இவர் 'புதிய பூமி' (1968) படத்திலும் நடித்திருந்தார். ஷீலா எம்.ஜி.ஆருக்குத் தங்கையாக 'என் அண்ணன்' (1970) படத்தில் நடித்தார். எம்.ஜி.ஆர். திரையுலகிலிருந்து ஒதுங்கிய காலகட்டத்தில் உருவான படம்தான் 'புரட்சிப்பித்தன்'.

அன்றைய காலம் புதுமுகமான ஸ்ரீதேவி இவருக்கு தங்கையாக நடிக்க ஒப்புக்கொண்டார். ஏனோ அப்படம் பாதியில் நின்றுபோனது.

**கலாபூஷணம்**
**கல்லொளுவை பாரிஸ்.**

# பணம் படைத்தவன்

## ஸ்வீட் கிக்ஸ்டி

**ச.சுந்தரதாஸ்**



எம்.ஜி.ஆருடன் பி.பானுமதி, பத்மினி, சரோஜாதேவி, ஜெயலலிதா என்று பலர் ஜோடியாக நடித்துள்ளார்கள். ஆனால், சௌகார் ஜானகியும் ஒரு படத்தில் ஜோடியாக நடித்துள்ளார். அந்தப் படம்தான் 'பணம் படைத்தவன்'. ஆர்ஆர் பிக்சர்ஸ் தயாரித்த இந்தப் படத்துக்கு இப்போது வயது அறுபது.

'சௌகார்' என்ற தெலுங்கு படத்தின் மூலம் அறிமுகமாகி குணச்சித்திர நடிகையாக புகழ் பெற்றவர் சௌகார் ஜானகி. தமிழில் சிவாஜி, ஜெமினி ஆகியோருடன் இணைந்து நடித்த இவருக்கு எம்.ஜி.ஆருடன் இணைந்து நடிக்கும் வாய்ப்பு 1962இல் 'மாடப்புறா' படத்தின் மூலம் கிட்டியது. ஆனால், அது நிறைவேறவில்லை. படப்பிடிப்புத் தளத்துக்கு எம்.ஜி.ஆர். வரும்போது சௌகார் ஜானகி கால் மீது கால் போட்டு அமர்ந்திருந்ததை எம்.ஜி.ஆர். ரசிக்கவில்லை. விளைவு படத்திலிருந்து அவர் தூக்கப்பட்டார்.

இப்போது மூன்றாண்டுகள் கழித்து மீண்டும் எம்.ஜி.ஆருடன் இணையும் வாய்ப்புக் கிட்டியது. இந்த வாய்ப்பை ஏற்படுத்தி தந்தவர் இயக்குநர் ராமண்ணா. 'புதிய பறவை' படத்தில் நவநாகரீகப் பெண்ணாக சௌகார் நடித்ததைப் பார்த்து விட்டு தனது படத்திலும் ஏறக்குறைய அதே மாதிரியான பாத்திரத்தில் நடிக்க அவரை தெரிவுசெய்தார்.

எம்.ஜி.ஆரும் இம்முறை அதற்கு ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. ஆனால், பதிலுக்கு எம்.ஜி.ஆரும் ஒரு நிபந்தனையை விதித்தார். அதுவரைகாலமும் எம்.ஜி.ஆர். நடிப்பில் ராமண்ணா இயக்கிய எல்லா படங்களுக்கும் கண்ணதாசன் தான் பாடல்களை இயற்றி அப்பாடல்கள் ஹிட் அடித்தன. இப்போது அவருடன் ஏற்பட்ட மனக்கசப்பு காரணமாக இந்தப் படத்துக்கு எல்லாப் பாடல்களையும் வாலிதான் எழுத வேண்டுமென்று சொல்லி விட்டார் எம்.ஜி.ஆர். வேறு வழியின்றி ராமண்ணாவும் உடன்பட்டார்.



கிராமத்தில் பணம் படைத்தவரான சண்முகம்பிள்ளையின் பிள்ளைகளான ராஜா, பாலு இருவரும் விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்ள கல்கத்தா செல்கிறார்கள். அங்கே தந்தையின் நண்பரான ரத்தினத்தின் அறிமுகம் ஏற்பட்டு அவர் வீட்டிலேயே சில நாட்கள் தங்குகிறார்கள். ரத்தினத்தின் மகள்கள் ராமா, உமா. ரமா மேல்நாட்டு நாகரீகத்தில் மோகம் கொண்டவள். ஆனாலும் ராஜாவை விரும்புகிறாள். ராஜாவோ அதே வீட்டில் வேலை செய்யும் சாந்தியை காதலிக்கிறான். உமாவும் பாலுவும் தீவிரமாக காதலிக்கிறார்கள். தனது இரு மகள்களும் ராஜா, பாலுவை மணக்க வேண்டும் இல்லையேல் பாலு, உமா கல்யாணம் நடக்காதென ரத்தினம் நிபந்தனை விதிக்கிறார். தனது தம்பி பாலுவின் காதல் நிறைவேற வேண்டுமென்பதற்காக ராஜா, சாந்தி மீதான காதலை துறக்கிறான். ராமாவை கரம் பற்றுகிறான். ஆனால், முதல் இரவன்றே ராமாவுக்கு ராஜா மீது வெறுப்பு ஏற்படுகிறது. அவனை பழி வாங்குவதாக எண்ணி தன்னையே பலியாக்குகிறாள் அவள்.

இடைவேளையுடன் முடிந்துவிடக்கூடிய படத்தின் கதைக்கு ஒரு திருப்பத்தைக் கொடுத்து மீதி படத்தை நகர்த்தியுள்ளார் கதாசிரியர். படத்தின் கதையையும் வசனத்தையும் சக்தி கிருஷ்ணசாமி எழுதியிருந்தார். எம்.ஜி.ஆருக்கு இது சற்று வித்தியாசமான கதை. அதற்கு வலுச்சேர்க்கும் விதத்தில் சக்தியின் வசனங்களும் கருத்தோடு நறுக்குடன் தெறித்தாற்போல் அமைந்தது.

படத்தில் எம்.ஜி.ஆருக்கு உணர்ச்சிகரமாக நடிக்கவும் காதலிக்கவும் காதலியை எண்ணி கவலைப்படவும் தம்பியின் நிலை நினைத்து வருந்தவும் சண்டை காட்சிகளில் கலக்கவும் நல்ல வாய்ப்பு. அதனைத் தவற விடவில்லை அவர்.

காட்சிக்குக் காட்சி சிரிப்பூட்டும் நாகேஷ் கூட சில இடங்களில் உருக்கமாக நடித்துக் கவருகிறார். சௌகார் நாகரீக நங்கையாக வந்து நிறைவாகச் செய்கிறார். கே.ஆர்.விஜயா இளமையாகக் காட்சியளிக்கிறார். நீண்ட நாட்களுக்கு பின் எம்.ஜி.ஆர். படத்தில் டி.எஸ்.பாலையா. இவர்களுடன் அசோகன், மனோகர், சேதுபதி, கீதாஞ்சலி, ஏ.கே.வீராசாமி, சீதாலஷ்மி ஆகியோரும் நடித்திருந்தனர்.



கண்ணதாசனுக்கு பதில் வாலியை பாடல் எழுதும்படி எம்.ஜி.ஆர். சொன்னது வீண் போகவில்லை. படத்தின் அனைத்துப் பாடல்களும் ஹிட் அடித்தன. ரீ.எம்.எஸ். சுசிலா குரலில் ஒலித்த சிருங்கார ரசனையை வெளிப்படுத்தும் ''அந்த மாப்பிள்ளை காதலிச்சான் கையை புடிச்சான்'' பாடல் படம் வெளிவந்தபோது இளைஞர்களை வசியம் செய்து முணுமுணுக்க வைத்தது.

கண் போன போக்கிலே கால் போகலாமா, பவளக் கொடியிலே



முத்துக்கள் பூத்தால், எனக்கொரு மகன் பிறப்பான், தன்னுயிர் பிரிவதை பார்த்தவர் இல்லை, மாணிக்கத் தொட்டில் இங்கிருக்க ஆகிய பாடல்கள் விஸ்வநாதன், ராமமூர்த்தி இசையில் ரசிகர்களைப் பரவசப்படுத்தின.

படத்தின் சில காட்சிகள் கல்கத்தாவில் படமாக்கப்பட்டன. எம்.ஏ.ரஹ்மான் படத்தை ஒளிப்பதிவு செய்திருந்தார். ஆர்.எம்.நம்பியார் அமைத்த எம்.ஜி.ஆர்., மனோகர் சண்டைக்காட்சி விறுவிறுப்பாக அமைந்தது.

எம்.எஸ்.விஸ்வநாதனிடம் உதவி இசையமைப்பாளராக இருந்தவர் ஜோசப் கிருஷ்ணா. இவர் ஆரம்பத்தில் டான்ஸ் மாஸ்டராகவே திரையுலகில் பணிபுரிந்தார். இந்தப் படத்தில் அவர் அமைத்த, கண் போன போக்கிலேயே, பருவத்தில் கொஞ்சம் பாடல்களுக்கான நடனம் ரசிக்கும்படி அமைந்தன. போதாக்குறைக்கு ஒரு கவர்ச்சி நடனத்தையும் அவர் அமைத்திருந்தார்.

எம்.ஜி.ஆர். ரசிகர்களுக்கு விருந்தாகவே படம் அமைந்தபோதும் படம் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. பொதுவாக எம்.ஜி.ஆர். இரு தாரம் மணப்பதை அவரின் ரசிகர்கள் விரும்புவதில்லை. அதுவும் படத்தின் வெற்றிக்குத் தடையானது. ராமண்ணா தனது இயக்கத்தில் குறை வைக்காத போதும் ரசிகர்களின் எதிர்பார்ப்பு வேறுவிதமாக அமைந்து விட்டது. ஆனாலும் படத்தின் பாடல்கள் அறுபது ஆண்டுகள் கடந்தும் ரசிகர்களின் காதுகளில் ஒலித்த வண்ணம் உள்ளன.

suntheradas@hotmail.com

# தடை விலக்கும் கொடை!

கொடை கொடுத்தால்
தடை விலகும்!
தலைவிதியை
தவறாது தடுக்கும்!
வீண்வம்புகளுக்கு
விடை கொடுக்கும்!
விடிவுகள் எல்லாம்
வாழ்விலே கிடைக்கும்!

அன்னக் கொடை அது
நன்மை கொடையாகும்!
உண்ண உணவளிக்கும்
உண்மை கொடையாகும்!
பசிபட்டினியை
பனிபோல் நீக்கும்!
பசுமை வாழ்க்கையை
வாழ்விலே ஆக்கும்!
வாட்டும் வறுமையை
வரிசையாகப் போக்கும்!

உதிரக்கொடை அது
உயர்வுக் கொடை!
உண்மையில் உதிரக்கொடை
உயிர்களை காக்கும்!
உணர்வுகளாக
உயிர்களைப் பார்க்கும்!
உறவுகளை எல்லாம்
ஒனறாக நோக்கும்!

இல்லாதோருக்கு இரங்கு!
இல்லாமை நீங்கும்!
கல்லாதோருக்கு கல்வி
கருத்துடன் கொடு!
வல்லமை ஓங்கும்
நல்லதை கொடு!
தீயதை தடு
வாழ்வு வளமாக்கும்!
எல்லாம் நலமாகும்!
ஆமாம் மானிடா!
கொடை கொடுப்போமா?
விதிக்கு வாழ்வில்
விடை காண்போமா?

**காத்தான்குடி**
**எச்.எம்.இக்பால்கான்**



# மங்கையின் மகிமை

குழந்தையாக இருக்கும்போது
அவள் மனதுக்கு
மகிழ்ச்சி தரும்
பொம்மை விளையாட்டு

சிறுமியாக வளரும்போது
அம்மாவின் சேலையை அணிந்து
ஆசிரியர் விளையாட்டுடன்
அறிவைப் பெற
பள்ளியில் கல்வி பயிலல்

மங்கையாக மலரும்போது
கல்லூரி கற்கைநெறியுடன்
பல்கலைக்கழகம் புகும் ஆர்வம்

அறிவை பெருக்க ஆவலுடன்
கணினியில் தேடல்கள்

அரிவையானதும் மனதுக்குப்
பிடித்த ஆடை அலங்காரம்
கனவுகள் தோய
இனிய காதல் நினைவுகள்
சினிமா செல்போன்கள்
சிணுங்கல்கள்
வண்ண வண்ணக் கனவுகள்

மனைவியாக மாறும்போது
காதல் கணவனுடன்
உணர்வுகளை பங்கிடும்

உறவுகள் கூடிய இனிய
இல்லறை பந்தம் சமையலறை
பாத்திரங்களுடன் சமர்

அன்னையான பின்பு
பாசம் அன்பு அரவணைப்புடன்
மழலையின் மகிழ்ச்சியில்
தாய்மையுடன் கூடிய
தியாகத்தின் பிரதிபலிப்பு

பாட்டியான பின் பேரப்பிள்ளைகள்
அள்ளி அணைத்து கொஞ்சி மகிழ்ந்து
ஆனந்தமாய் வாழும் அந்திம காலம்
இதுவே யதார்த்த வாழ்வில்
மங்கையரின் மகிமை .

**பலாங்கொடை வேணி**

# கோடை!

சுள்ளெனவே சூரியனும்
சுட்டெரிக்கும் கோடை
சோலையிலும் பாலையலை
சூழ வைக்கும் கோடை!

கள்ளிகளும் வாடி முளை
கருக வைக்கு கோடை
கானருவி ஆறுகளை
காய வைக்கும் கோடை!


வெள்ளமெனத் தேகமதை
வியர்க்க வைக்கும் கோடை
விசிறிகளை ஓய்வில்லாமல்
வேலை வாங்கும் கோடை!

அங்கமெல்லாம் வேர்க்குருவை
அள்ளித் தரும் கோடை
அரிப்பெடுத்து இராப்பகலாய்
அவதி தரும் கோடை!

உள்ளமதில் தாகமதை
ஓங்க வைக்கும் கோடை
உதடுவர்த்தி நாவறட்சி
உண்டுபண்ணும் கோடை!

குளிர்பானம் செவ்விளநீர்
விற்க வரும் கோடை
விருப்பமூட்டிக் காசு பணம்
விரயமாக்கும் கோடை!

**கலாபூஷணம்**
**கல்லொளுவை பாரிஸ்**




# மலையகமே என் உயிர் மலையகமே



தேயிலை செடியில் தேன்தரும் மலையகமே
எத்தனை மலைகள் எத்தனை நதிகள்
உன் அழகில் கண்ணுக்கு அழகாய் காட்சி தரும்
என் மலையகமே

உன் அழகை பார்க்க வரும்
வெளிநாட்டவரும் உள்நாட்டவரும்

பாதையில் எத்தனை வளைவு உண்டு
பார்த்து விட்டால் மன நிறைவு உண்டு

சித்திரையில் உன்னை பார்க்க வரும்
சிறியோர் பெரியோர் எண்ணிலில்லை

பணம் படைத்தவர் ஏழை எனும்
பேதம் இல்லை

வீணைகொடியோன் வாழ்ந்த இடம்
சீதையும் சிறையில் இருந்த இடம்

ராமன் வந்து மீட்ட இடம்
அனுமன் தீயால் எரித்த இடம்

குதிரைப் பந்தயம் பார்த்திடலாம்
பல பூக்களின் அழகை ரசித்திடலாம்


பீட்ரூ மலையும் பார்த்திடலாம்
உலகம் முடிவும் பார்த்திடலாம்

**ஜோன் சித்திரன்**
**– கோட்பில் கந்தப்பளை**

# உன்னை நம்பு!

ஓர் ஊரில் ஏழை ஒருவர் சிறிய அலுவலகமொன்றில் வேலை பார்த்து வந்தார். கிடைத்த ஊதியத்தை வைத்து குடும்பத்தை நடத்தி வந்தார்.

ஒருநாள் அவர் நடந்து போய்க்கொண்டிருந்தபோது, ஒரு பழைய நாணயத்தைப் பார்த்து, அதை எடுத்து தூசி தட்டினார். அந்த நாணயத்தின் நடுவில் துளை இருந்தது. அந்தக் காலத்தில் துளை இருந்த நாணயம் கிடைத்தால், அது நல்லது, இராசி என்ற நம்பிக்கை உண்டு. அந்த மனிதருக்கும் அது கிடைத்ததில் அதிக ஆனந்தம். இனிமேல் எனது கஷ்டம் எல்லாம் தீர்ந்துவிடுமென்று மகிழ்ந்து, அந்த நாணயத்தைப் பத்திரமாக தனது மேல் சட்டைப்பைக்குள் போட்டு வைத்தார். அதை ஒருநாளும் வெளியே எடுக்கமாட்டார்.



ஆனால், அதை அடிக்கடி தொட்டுப் பார்த்துக்கொள்வார். சிறிது காலம் சென்று, நல்வாய்ப்புகள் உண்மையாகவே அவரைத் தேடிவரத் தொடங்கின. செல்வம், பணம், புகழ், பதவி போன்ற எல்லாம் வந்துசேர்ந்தன. சமுதாயத்தில் அவர் பெரிய மனிதரானார். எல்லோரும் அவரைப் பாராட்டினார்கள். அவர் எதைத் தொட்டாலும் வெற்றிதான். எல்லாம் அந்த நாணயத்தின் மகிமை என்று மனதுக்குள்ளே நினைத்துக்கொண்டார். ஒவ்வொரு நாளும் அந்த மேல் சட்டையைப் போட்டுக்கொண்டு தான் வெளியில் கிளம்புவார். வெளியே புறப்படுவதற்கு முன், சட்டைப் பையில் அந்த நாணயம் இருக்கிறதா என்று தொட்டுப் பார்த்துக்கொள்வார். இப்படி பல ஆண்டுகள் உருண்டோடின.

ஒருநாள் அந்த துளையுள்ள நாணயத்தைக் கண்ணால் பார்க்கவேண்டும் என்ற ஆசை வந்தது. அன்று காலையில் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது தன் மனைவியிடம் தனது ஆசையைச் சொன்னார். ஆனால், மனைவியோ, இப்ப எதுக்கு அதைப் பார்க்கணும், வேண்டாமே என்று இழுத்தார். இல்லை இன்று பார்த்தே தீருவேனென அதை சட்டைப் பையிலிருந்து வெளியே எடுத்துப் பார்த்தார். அந்த நாணயத்தில் துளையே இல்லை. அப்போது அவரது மனைவி அவரிடம், ‘‘உங்க சட்டை தூசியா இருக்கேன்னு, நான் அதை உதறினேன். அப்போ அந்த நாணயம் சன்னல் வழியாக தெருவில் விழுந்துவிட்டது. நானும் எவ்வளவோ நேரம் தேடினேன். கிடைக்கவில்லை. யாரோ அதற்குள் எடுத்துவிட்டார்கள் போலும். உங்களுக்குத் தெரிந்தால் வருத்தப்படுவீர்களே என்று நினைத்து, உங்களது சட்டைப் பைக்குள் ஒரு காசை போட்டு வைத்தேன்’’ என்றார்.

‘‘சரி இது நடந்தது எப்போது’’ என கணவர் கேட்க,

‘‘நீங்க அந்தக் காசை எடுத்த மறுநாளே நடந்தது’’ என்று மனைவி சொன்னார்.

ஆம்,அந்த மனிதருக்கு நல்வாய்ப்பைக் கொடுத்தது அந்த நாணயமில்லை, அவரது நம்பிக்கை. அதாவது தன்னம்பிக்கை. அதுதான் அவரில் வேலை செய்துள்ளது. எனவே, வாழ்வில் முன்னேற விரும்புகிறவர்களுக்கு தன்னம்பிக்கை மிகவும் முக்கியம்.

“உன் மீது உனக்கே நம்பிக்கை இல்லையென்றால் கடவுளே நேரில் வந்தாலும் பயனில்லை’’

(சுவாமி விவேகானந்தர்)

## தமிழன் தர்பார்

இது எங்க ஏரியா

# சிகரெட் பிடிக்கும் ஆசையை விடுங்கள்!

சிகரெட்டை விட்ட இரண்டு வருடங்களுக்குப் பிறகு இதயத்தை பலமாகத் தாக்கியது. அடைப்புகள் ஏற்பட்டன. இரண்டாயிரத்தில் பைபாஸ் செய்துகொண்டேன்.

அப்போதும் சிகரெட் பிடிப்பவனாக இருந்திருந்தால் மரணம் அன்றே குறிக்கப்பட்டிருக்கும். சிகரெட்டை நிறுத்தி ஆரோக்கியத்தை அதிகப்படுத்தியதால் அந்த ஆபரேஷனை சமாளிக்க முடிந்தது.

பிறகு பத்து வருடங்கள் எந்தவித இம்சையும் இல்லாமல் அழகாக வாழ்க்கை ஓடியது.

இரண்டாயிரத்து பதினொன்றில் நீரிழிவு காரணமாக இரத்தக்கொதிப்பின் காரணமாக மறுபடியும் அடைப்பு ஏற்பட, இரண்டாவது தடவை பைபாஸ் செய்துகொண்டேன்.

சுவாசப் பயிற்சி செய்திருந்ததால், மூச்சு பற்றிய ஞானம் இருந்ததால், தினந்தோறும் காலையும் மாலையும் வேகமாக நடந்ததால், மெல்லிய உடற்பயிற்சிகள் செய்ததால் இரண்டாவது பைபாஸையும் தாண்டிவர முடிந்தது.

ஆனால், இரண்டாயிரத்து பன்னிரெண்டில் அடுத்த சோதனை. பத்தொன்பது வயதில் பிடித்த சிகரெட்டுகள் அறுபத்தாறு வயதில் தன் விஷத்தன்மையைக் காட்டியது. தன் வக்கிரத்தை நிரூபித்தது.

நுரையீரலின் அடிப்பக்கம் முழுவதும் நிகோடினால் ஏற்பட்ட சளி அடைப்புகள். நுரையீரல் முழு திறனோடு வேலை செய்யவில்லை. அதற்கான திறனை மெல்ல மெல்ல இழந்தது. அதோடு சளி அடைப்பும் சேர்ந்து பழிவாங்கியது. மூச்சுத் திணறல் ஏற்பட்டது.

ஒரு பிடி சாதத்தக்கு அவஸ்தை படும் நிலைமை. முகம் முழுவதும் மூடி ஒக்சிஜனை செலுத்தினால்தான் உயிரோடு இருப்பேன் என்கிற நிலைமை. என்.ஐ.வி என்கிற அந்த விஷயத்தோடுதான் இரவு தூங்க முடியுமென்கிற நிலைமை. பிராங்கோஸ்கோபி என்று மூச்சுக் குழலுக்குள் கருவியை விட்டு சோதனை செய்து அங்கே அடி நுரையீரலில் அடர்த்தியாக அசைக்க முடியாதபடிக்கு கெட்டியாக சளி இருப்பதை தெரிந்துகொண்டார்கள்.

இதை எப்படி சரிசெய்வது?

வலியைப் பொறுத்துக்கொள்ளலாம். வேறு ஏதேனும் பத்தியமாக இருந்தால் அவ்விதமே நடந்துகொள்ளலாம். மூச்சு இழுத்து பிராணவாயு உள்ளே போய் வெளியே வருவதே கடினமானால் எப்படிச் சமாளிப்பது? தினசரி மரண போராட்டமாக மாறிவிட்டது.

மூச்சு வேகமாக இழுத்து இழுத்து இன்னும் சில நிமிடங்களில் பாலகுமாரன் செத்துவிடுவான் என்ற எண்ணத்தை மற்றவருக்கு ஏற்படுத்தியது.

வீடு தவித்தது. வீட்டுக்குள் மூன்று நான்கு நாட்கள் ஒக்சிஜன் சிலிண்டர்கள் வைக்கும்படி நேரிட்டது. வேகமாகக் காற்றைச் செலுத்தக்கூடிய கருவி தனியாக இருந்தது.

வைத்தியசாலையிலிருந்து வீடு வந்தவுடன் வீடு வைத்தியசாலையாக மாறியது. எப்போதும் மூக்கில் ஒக்சிஜன் இருக்கும்படி ஒரு அவஸ்தை. ஸ்கூட்டர் எடுத்துக்கொண்டு மயிலாப்பூர் முழுவதும் சுற்றித் திரிந்தவனுக்கு சிறைத்தண்டனைபோல வீட்டில் அதே அறையில் இருக்கும்படி நேரிட்டது. மிகப் பெரிய வலியில்லை. ஜுரம் இல்லை. ஆனால், ஒக்சிஜன் குழாயை எடுத்துவிட்டால் மூச்சுத் திணற ஆரம்பிக்கும். அது இல்லாமல் நடக்க முடியாது, பேச முடியாது, உண்ண முடியாது, எதுவும் செய்ய முடியாது. காலில் சங்கிலி கட்டி கையில் இரும்புக்குண்டை கொடுத்ததுபோன்ற மிகப் பெரிய தண்டனை. வேறு எந்த வழியும் இல்லாமல் அமைதியாக உட்கார்ந்துகொண்டேன்.

ஒரு நாளைக்கு நூற்றியிருபது சிகரெட் பிடிக்க வேண்டும் என்கிற நிலையில் இருந்ததை நினைத்து சிரித்துக்கொண்டேன். அப்படி புகைத்தால் தான் கதை எழுத வரும் என்று முட்டாள்தனமாக நம்பியதை நொந்துகொண்டேன்.

மரணம் எல்லோருக்கும் வரும். எப்பொழுது வேண்டுமானாலும் வரும். எந்த ரூபத்தில் வேண்டுமானாலும் வரும். ஆனால், மூச்சுத் திணறி இதோ..... இதோ... என்று பயம் காட்டுகின்ற ஒரு நிலைமை யாருக்கும் வரக்கூடாது.

நெஞ்சு வலித்தது. ஐந்து நிமிடம் துடித்தார். உயிர் நீங்கியது என்பது பரவாயில்லை.

மூச்சு விட முடியாமல் உள்ளுக்குள் போன மூச்சை வெளியே செலுத்த முடியாமல் வெளியே இருக்கின்ற பிராண வாயுவை உள்ளே இழுக்க முடியாமல் திணறி கதறுகின்ற வேதனை யாருக்கும் வரக்கூடாது. சிகரெட் பிடிக்கலாம் என்கிற ஆசையுள்ளவர்கள் தயவுசெய்து அந்த எண்ணத்தை அழித்து விடுங்கள்.

***பாலகுமாரனின் நாட்குறிப்பிலிருந்து...***

# முட்டாளாக இருங்கள்



ஒரு கிராமத்தில் ஓர் அறிஞர் இருந்தார். அவர் ஒரு பொருளாதார மேதையாயிருந்தார். பல மன்னர்கள் தங்கள் நாட்டுப் பொருளாதாரத்தைச் சீர்படுத்த அவர் ஆலோசனையை நாடினர்.

ஒருநாள் ஊர்த்தலைவர் அவர் முன் வந்து அவரைப் பார்த்துக் கிண்டலாகச் சொன்னார் “ஐயா! அறிஞரே! நீங்கள் பெரிய அறிஞர் என்று உலகமே பாராட்டுகிறது. ஆனால், உங்கள் பையன் ஓர் அடி முட்டாளாக இருக்கிறானே! தங்கம், வெள்ளி இவற்றுள் அதிகம் மதிப்பு வாய்ந்தது எது என்று அவனைக் கேட்டால் அவன் வெள்ளி என்று சொல்கிறான். வெட்கக்கேடு!” அறிஞர் மிக வருத்தமடைந்தார்.

பையனை அழைத்தார்...கேட்டார்.

“தங்கம், வெள்ளி இவை இரண்டில் அதிகம் மதிப்பு வாய்ந்தது எது?”

பையன் சொன்னான் “தங்கம்”.

அவர் கேட்டார் “பின் ஏன் ஊர்த் தலைவர் கேட்கும்போது வெள்ளி என்று சொன்னாய்?”

பையன் சொன்னான், “தினமும் நான் பாடசாலை செல்லும்போது அவர் ஒரு கையில் தங்க நாணயமும் மறு கையில் வெள்ளி நாணயமும் வைத்துக்கொண்டு என்னை, அறிஞரின் மகனே என அழைத்துச் சொல்வார். இவ்விரண்டில் மதிப்பு வாய்ந்ததை நீ எடுத்துக்கொள்”.

“நான் உடனே வெள்ளியை எடுத்துக்கொள்வேன். உடனே அவரும் சுற்றியிருப்பவர்களும் சிரித்துக் கிண்டல் செய்வார்கள். நான் அந்த நாணயத்துடன் போய் விடுவேன். இது ஓராண்டாக நடக்கிறது. தினம் எனக்கு ஒரு வெள்ளி நாணயம் கிடைக்கிறது. நான் தங்கம் என்று சொல்லி எடுத்துக்கொண்டால் அன்றோடு இந்த விளையாட்டு நின்றுவிடும். எனக்கு நாணயம் கிடைப்பதும் நின்றுபோகும். எனவேதான்..”

அறிஞர் திகைத்தார்!!

வாழ்க்கையில் பல நேரங்களில் நாம் முட்டாள்களாக வேடம் அணிகிறோம், மற்றவர்கள் அதைப் பார்த்து மகிழ்வதற்கு. ஆனால், நாம் தோற்பதில்லை. அவர்கள் வெல்வதாக எண்ணிக் கொண்டிருப்பார்கள். ஆனால், வேறு கோணத்தில் பார்க்கும்போது நாம் வென்றிருப்போம்.

“எந்தக் கோணம் நமக்கு முக்கியம் என்பதை நாம்தான் தீர்மானிக்க வேண்டும்”



# நம்ம தோட்டம் 06

## “மருத வீரனும் அந்தோனி சாமியும்”

**அருணா**

அட பொங்கல் முடிஞ்சோடன வேலைக்கெல்லாம் போயிற ஏழுமா?

இந்த நேரத்தில மட்டுந்தானே கொஞ்சம் லீவு எடுத்துக்கலாம்.

அந்தக் காலத்திலேருந்தே நம்ம ஆளுக வெள்ளைக்காரன்களேயே ‘கரிநாள்’ அப்பிடின்னு சொல்லி வேலைக்கு போறதுக்கு குறைஞ்சது ஒரு கிழமை ஆகிடும்.

அது வரைக்கும் தோட்டத்தில இருக்கிற குலதெய்வ கோயில்கள்லேயும் விசேசமாத்தான் இருக்கும்.

காளி, மருதவீரன், மாடசாமி, வேட்டக்கருப்பு, முனியாண்டி, வல்லடியான், அஞ்சி முனியாண்டி, நல்லதண்ணி, நல்லதங்கா இப்பிடி நெறைய கோயில்கள் இருக்கும்.

இந்த கோயில்கள் இருக்கிற இடங்களுக்கு பக்கத்தில் இருக்கிறவங்க பொறுப்பா எல்லாத்துக்கிட்டேயும் சல்லி சேத்து பூசைகளை ஒழுங்கு செய்வாங்க.

நேத்திக்கடன் போட்டவங்க ஆடு, கோழின்னு பழி கொடுப்பாங்க. ஆட்டெறைச்சி, கோழி எறைச்சினு ஒரே வேட்டையாதான் இருக்கும்.

பொங்கலுக்கு மட்டுமில்ல, மாசத்துக்கு ஒருத்தராவது நேத்திக்கடன் வைச்சி விருந்து போடுவாங்க. எல்லாத்துக்கும் பகிர்ந்து கொடுக்கிறதுனால கொஞ்சமாதான் இருக்கும்.

ரொம்ப டேஸ்டா இருக்கும். சோறு ஆக்கி ஆட்டு கறிய வைச்சி, இரண்டையும் ஒன்னா போட்டு பெனஞ்ச சோற வாழ எலையில வாங்கி சாப்பிட்டு பார்க்கணும்.

சோறு மட்டுமா? தண்ணி வெண்ணியும் தான். தண்ணி சரி சாப்பிட்டு குடிக்கணும். வெண்ணினா? அது பெரியவங்க குடிக்கிறது.

இந்த மாதிரி விசேசமான நாள்கள்ல கல் (சாராயம்) போத்தலும் இருக்கும். எவ்வளவு பேரு இருந்தாலும் ஒரு பத்து பன்னெண்டு போத்தலோட முடிஞ்சிரும்.

மருந்து மாதிரி குடிப்பாங்க, கொஞ்சம் வயசு பொடியங்க பெரியவங்களுக்கு தெரியாமதான் குடிப்பாங்க.

பெரும்பாலும் தோட்டங்கள்ல பொடியங்க வெத்தலை பாக்கோட நிப்பாட்டிக்குருவாங்க.

புதுவருசம், தீவாளிக்கு மட்டும்தான் வீட்டுக்கு கொண்டாருவாங்க. அப்பிட இருந்திச்சி. இப்ப என்னடானா?

ஒரு தோட்டத்தில கொறைஞ்சது ஏழு எட்டு சிறு தெய்வ கோயில்களாவது இருக்கும்.

கூரைக இல்லாத கோயில்கள்தான். தேவைப்பட்டா மட்டும் பந்தல போட்டுக்க வேண்டியதுதான்.

இயற்கை நேசிச்ச நம்ம ஆளுக என்னமா? அழகியல் உணர்வோட இந்த இடத்துகல வடிவமைச்சிருப்பாங்க தெரியுமா?

நம ஆளுககவுட்டு கட்டரம் கட்டுற திறமைகளுக்கும் அழகியல் உணர்வுகளுக்கும் இந்த இடங்கள்தானே சாட்சிகளா விளங்குது.

இதெல்லாம் பத்தி நம்ம ஆய்வாளர்கள் ஆய்வு செய்ய மாட்டாங்க. அரைச்சதையே போட்டு அரைச்சி நம்மல இயலாதவங்களா காட்றதுதானே பொழப்பா போச்சி.

வறுமையை மட்டும் காட்டி பொழப்பு நடத்திற மேதாவிக நம்ம பலமான அம்சங்களை வெளிக்காட்டிறது இல்லையே!

இப்பிடி சின்ன சின்ன கோயில்கள் நம்ம சமூக அடையாளமா இருக்கு. அதையெல்லாம் பராமரிக்க தவறி விட்டுட்டோம்.

இந்த இடங்கல மாதிரியே தோட்டங்களும் கலை எழந்து போயிரிச்சி. இந்த தெய்வங்க மேலவுள்ள பாசத்தில் நம்ம சாப்பிடற சாப்பாட்டுகள படைச்சி சாராயம் வைச்சும் படைச்சோம்.

பலி கொடுக்கிற நேரமும் நம்ம பூசாரி கேள்வி சொல்ற நேரத்திலயும் ரொம்ப பயமா இருக்கும்.

கோழியானா கட்டைய வைச்சி வெட்டுவாங்க. ஆட ஒரே வெட்டுத்தான். வெட்டிட்டு அந்த கத்தி மேல ஏறி நின்னு கேள்வி சொல்லுவாறு.

கத்தினா மத்த பக்கம் இல்ல. ஆட்டு தலைய பதம் பாத்திச்சே அந்த பக்கம். சும்மா பள பளன்னு பதமா இருக்கும்.

நம்ம பூசாரிமாறு ஒருவகையில் மனங்களை அறிஞ்சவங்களா இருப்பாங்க. ஊர் நலன்களையும். ஒத்துமையா ஆக்கிறமிலையும் அக்கறை செலுத்துவாங்க.

இருந்தாலும் சின்ன சின்ன கொழப்பங்கள் இருக்குத்தான். ஆனாலும் ஊர்ல இவரு பேச்சை எல்லாரும் கேப்பாங்க.

நம்ம தோட்டங்கள் புள்ளைங்க பொறந்தா இந்த சாமிகவுட்டு பேறாதான் வைப்பாங்க. அது ஒரு காலம்தான்.

நம்ம தோட்டங்கல்ல யாருமே கிறிஸ்தவர்கள் இருந்ததில்லை. வெள்ளைக்காரங்ககிட்ட சலுகைய வாங்கிக்கிறதுக்காகதான் மதம் மாறுனாங்கனும் பேசிக்கிருவாங்க.

இப்பையெல்லாம் எத்தனை சபைகள் இருக்குது. தோட்டத்துக்கு பத்து சபைகள் வந்திட்டு போறாங்கனா பாத்துக்கிருங்களே.

அப்பையெல்லாம் சபைகள் இல்ல. ரோமன் கத்தோலிக்ககாரவுங்க மட்டும்தான். தோட்டத்துக்கு ஏழு பத்து குடும்பம் இப்பிடி மாறி இருப்பாங்க.

முனியாண்டி, மூக்கன் அப்பிடின்றதாதான் தாத்தாமாறுவுட்டு பேருக இருக்கும். அவுங்கவுட்டு புள்ளைங்க அந்தோனி, ஸ்டீபன், ராயர் அப்பிடின்னு இருப்பாங்க.

சரி இப்பிடி கிறிஸ்தவர்களா மாறுனவங்க முனியாண்டி, காளி கோயில்களுக்கு வர்ரது இல்லை.

இந்த கோயில்கள்ல அனுபவிக்கிற சந்தோசங்கள மதம் மாறுனவங்க அனுபவிக்கிற வாய்ப்பு கிடைக்காம போச்சி.

இது மதத்தை மாத்திரவங்களுக்கு பெரிய சவாலா போயிரிச்சி. திரும்பவும் அவுங்க மதத்துக்கே போகணும்னு நினைச்சாங்க.

இந்த ஏக்கத்தை தெரிஞ்சிக்கிட்டுத்தான் சிறு தெய்வங்களை மாதிரி ஒரு தெய்வத்தை அறிமுகப்படுத்துறாங்க.

அவருதான் “வனத்து சின்னப்பர்” இந்த வழிபாட்டு முறைகள் பெரும்பாலும் தோட்டப்பகுதிகள்ல மட்டும்தான் இருக்குது.

வெள்ளைக்காரவுங்க நம்மல ஏமாத்துன பல விசயங்கல்ல இதுவும் ஒன்னு.

அந்தோனியும் ஸ்டீபனும் ஜெபமாலையும் முனியாண்டி கோயில்ல மாதிரியே சந்தோசத்தை அனுபவிச்சாங்க.

நம்மாலுக இங்கேயும் விடுவாங்களா? இந்த கோயில்ல வந்து பொங்கல் வைக்கிறது, மெழுகுத்திரி பத்தவைக்கிறதுனு நம்பிக்கைய வளர்த்துக்கிட்டாங்க.

அது மட்டுமில்லாம அன்னதானங்களுக்கு பொருள் கொடுக்கிறது, ஆக்கிறதுக்கு உதவி செய்றதுன்னு அந்த சமாச்சாரத்திலயும் பங்கெடுத்திருவாங்க.

இரண்டு தோட்டம் மூணு தோட்டங்களுக்கு ஒரு “வனத்து சின்னப்பர் கோயில்” கட்டாயமா அமைச்சிருப்பாங்க.


அதிலயும் நம்ம ஆளுகவுட்டு கட்டிடம் அமைக்கிற திறமையை பாக்கலாம்.

அழகான சூழல்ல பொருத்தமான இடத்தில் இந்த கோயில்கள அமைச்சிருக்கிறத பாக்கலாம்.

பொதுவா பாத்திங்கனா தோட்டங்கல்ல நம்ம மரபுரிமை இடமுன்னா இந்த வழிபாட்டு இடங்கதான் தெரியுமா?

தோட்டத்தில் வலம் வருவோம்.

# பேசவேண்டியவை மூடியே கிடக்கின்றன



**– ஷாமிலா ஷெரீப்**

**பரிதாபங்கள் 01**

## தலைநகரில் போர்டிங், வாடகை வீடு பரிதாபங்கள்

***இக்மன் டொட் எல்கேயில் அந்த விளம்பரத்தைப் பார்த்தேன். வாடகை பேசித் தீர்க்கப்படுமென்று இருந்தது. தொலைபேசி இலக்கத்தைப் பார்த்து டயல் செய்தபோது அந்த இலக்கம் ஏற்கனவே என் அலைபேசியில் பதிவாகியிருந்தது.***

***பெற்றோல் நெருக்கடி நேரம் அம்மணியை முச்சக்கரவண்டியில் அழைத்துச் சென்றிருந்தேன். எனவே, அறிமுகமாகுவது இலகுவாக இருந்தது. 42 ஆயிரம் வாடகையை 40 ஆயிரமாகக் குறைத்துக்கொண்டு குடியிருக்கத் தொடங்கினேன்.***

***பொதுவாக வாடகைக்கு இருப்பது துரதிர்ஷ்டம்தான். சொந்த வீடில்லாமல் தாம் பிறந்த மண்ணில் வாழக் கிடைக்காமல் அவசரத்துக்கு வர முடியா தூரத்தில் இருப்பதைவிட தாய்நாட்டில் வாடகைக்கு இருப்பதென்னவோ திருப்தியென எண்ணிக்கொண்டிருந்தேன். இப்போதுள்ள பொருளாதார சூழ்நிலையிலே சொந்த வீடு இருந்திருந்தால் வாடகைச் செலவு மிகுதியாகுமே என அடிக்கடி நினைப்பதுண்டு. "கொழும்பில் வாடகைக்கு இருப்பதென்றால் அந்த ஏரியாவிலேயே ஹவுஸ் ஓனர் இருக்கக் கூடாது" என சக ஆசிரியர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். அதற்கான காரணம் ஆரம்பத்தில் தெரியவில்லை. காலம் செல்லச் செல்லத்தான் புரிந்தது.***

***நான் வாடகை வீட்டில் இருந்தாலும் உணவுக் கழிவுகளை உடனடியாக அன்றன்றைக்கு அகற்றி விடுவேன். வீட்டுச் சொந்தக்காரரோ கிழமையில் ஒரு தரம் மாநகர சபை லொறிக்கு புழுக்களை வழங்குவதை வாடிக்கையாக வைத்திருந்தார். குப்பை அழுகி புழு வந்ததனை முதன் முதலில் அங்குதான் கண்டேன். பழங்கள் மிகவும் பழுத்து அழுகிய பின் வருகின்ற சிறிய புழுக்களைக் கண்ட எனக்கு அழுகிய குப்பைகள் புழுக்களாக மாறி வழிந்து ஓடுவதை அந்த வீட்டில் கண்டு பயந்து போனேன். ஆனால், உரிமையாளருக்கோ இதுபற்றி எந்தவிதமான கவலையும் இல்லை. பெரியதொரு வாளி வைத்திருக்கின்றார்கள். அதனுள் குப்பையைப்போடுவது ஒருவாரத்தின் பின் ஒரு வாளி புழுக்களை மாநகர சபைக்கு வழங்குவது.***

***இவர்கள் என்ன மாதிரியான மனிதர்கள். மாநகர சபையில் வேலை செய்கின்ற ஊழியனும் சாதாரண மனிதன்தானே என்று அந்த அடிப்படை உணர்வு கூட இல்லாமல் மனிதம் செத்துவிட்டிருந்தது. வாரா வாரம் புழுக்களை அள்ளி ஏற்றுகிறார்களே கழுகுப் பேய்கள் என மனதுள் கடிந்துகொள்வது பழகிப்போனதெனக்கு.***

***கணவனைப் பிரிந்து மூன்று பிள்ளைகளுடன் தனியாக வாழத் தொடங்கியபோதுதான் வீட்டில் குடியிருந்தேன். உரிமையாளர் கீழ் வீட்டிலிருப்பது பாதுகாப்பாக இருக்கும் என்று நம்பினேன். பிள்ளைகளின் சின்னச் சின்னக் குறும்புகளைக் கடிந்துகொண்டார்கள். நான் கடைகளுக்குச் சென்று திரும்பும் வரை பிள்ளைகள் தனியாய் வீட்டிலிருப்பது பதற்றமாக இருந்தாலும் கீழ் வீட்டில் அவர்கள் இருப்பார்களே என்ற வகையில் திருப்தி கொள்ளலாமே என நினைத்தேன். ஒரு மாதம் முடியுமுன்னமே ஏன்டா இங்க வந்தோம் என அலுத்துக்கொண்டேன்.ஏதாவது ஒரு குறையை சொல்லிக்கொண்டே இருப்பார்கள்.***

***பணத்தைக் கொடுத்து தலைவலியை வாங்கிக்கொண்டோமே என்றிருந்தது எலித்தொல்லை. ஒருமுறை எலி செத்து துர்நாற்றம் வீசத் தொடங்கியது. பின் புழுக்கள் கொட்டத்தொடங்கியதும் அவர்களே சுத்தம் செய்தனர். ஆறு மாதங்கள் பல்லைக்கடித்துக்கொண்டிருக்க காலம் ஓடியது.***

***போகவேண்டிய நாளும் வந்தது. வாடகை முற்பணத்தைச் சுருட்டிக்கொள்ளத் திட்டம் தீட்டியதன் வெளிப்பாடு வெளிச்சுவரில் கீறல் உள்ளதாகவும் அதனை சரிசெய்யும்படியும் கூறினார்கள். பென்சிலால் பூசனிக்காயளவு இரண்டு மூன்று வட்டங்களை மகள் கிறுக்கியிருந்தாள். அவற்றை அளிக்கப் போராடினான் போகவில்லை.***

***இதற்கிடையில் அந்த நிறப்பூச்சு, அதன் விலை, கீறல் விழாமல் தங்கள் பிள்ளைகளை வளர்த்த விதம் என பல வகுப்புகள் எனக்கெடுத்தார்கள். எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு முற்பணத்தை பெற்றுக்கொண்டு போய்விட வேண்டுமென இருந்தேன். விடுவதாக இல்லை. அழித்தாலும் கீறல் மங்கலாகத் தெரிவதாகக் கூறினார்கள்.***

***கைக்குழந்தையுடன் முழு வீட்டையும் சுத்தப்படுத்தி பொருட்களை ஏற்றி வீட்டுக்கு பெயிண்ட் அடித்து வீட்டு திறப்பையும் கொடுக்கும்போது அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தக் கீறலைச் சரிசெய்யும்படி கூறினார்கள். கண்ணுக்குத் தெரியாத அந்த கீறல் யாருக்கு தெரிந்துவிடப்போகிறது. ஆனாலும் அந்த நிற பூச்சை தேடியலைந்தேன். ஒருவாறு கண்டுபிடித்து வாங்கி வந்து சுவருக்கு அடித்துக்கொடுத்துவிட்டு விடைபெற்றேன்.***

***இரண்டு வார காலம் நான் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்திருந்தேன். அந்த நிறப்பூச்சு கிடைத்து விட வேண்டுமென இறைவனை மன்றாடினேன்.***

***இறுதியாக வரும்போது, "நீங்க நல்லாவே இருக்கமாட்டிங்க அல்லாஹ் உங்களைச் சோதிப்பான்'' என கண்கலங்கிக் கூறினேன்.***

***அண்மையில் அறிந்தேன் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட உரிமையாளரைக் குணப்படுத்த பணம் திரட்டுகிறார்களாம். இந்த நோன்பில் அவர்களுக்காக பிரார்த்தனை செய்கிறேன்.***

**தொடர்வாள்...**



# மக்கா முஸ்லிம் தலைவர்கள் மாநாட்டில் உலகளாவிய ஒற்றுமைக்கு அழைப்பு

சவூதி அரேபியாவின் மன்னர் சல்மானின் ஆதரவில் 90க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த இஸ்லாமிய அறிஞர்கள், பல்வேறு முகாம்களுக்கிடையிலான கலந்துரையாடலை வலுப்படுத்துவதற்காக அண்மையில் ஒன்றுகூடினர்.

சவூதி அரேபியாவின் மக்காவில் நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான “இஸ்லாமிய சிந்தனை முகாம்களுக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்தல்”(Building Bridges Between Islamic Schools of Thought) எனும் 2ஆவது மாநாட்டில், 90க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த முஸ்லிம் தலைவர்கள் மற்றும் அறிஞர்கள் உலகளாவிய இஸ்லாமிய ஒற்றுமைக்கு வலுவான அழைப்பு விடுத்துள்ளனர்.

மன்னர் சல்மானின் ஆதரவில் உலக முஸ்லிம் லீக் (Muslim World League - MWL) ஏற்பாடு செய்த இந்த மாநாடு, “பயனுள்ள இஸ்லாமிய கூட்டணியை நோக்கி'' (Towards an effective Islamic alliance) எனும் கருப்பொருளுடன் தொடங்கியது.

இதில் பல்வேறு இஸ்லாமிய பிரிவுகளைச் சேர்ந்த மூத்த முஃப்திகள், அறிஞர்கள், புலமையாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். பலஸ்தீன், சூடான், சிரியா போன்ற நாடுகளில் நடைபெறும் மோதல்கள் மற்றும் உலகம் முழுவதுமுள்ள முஸ்லிம் சிறுபான்மையினரின் சவால்கள் குறித்து மாநாட்டின் தொடக்க அமர்வுகளில் விவாதிக்கப்பட்டது.

சவூதி அரேபியாவின் கிராண்ட் முஃப்தி ஷேக் அப்துலாஸிஸ் அல்-அஷெய்க், தனது ஆரம்ப உரையில் முஸ்லிம்களின் ஒற்றுமையை வளர்ப்பதில் இஸ்லாமிய அறிஞர்களின் பொறுப்பை வலியுறுத்தினார். மூத்த அறிஞர்கள் கவுன்சிலின்



(Council of Senior Scholars) செயலாளர் டாக்டர் பஹத் அல்-மஜீத் மூலம் வாசிக்கப்பட்ட அவரது உரையில்,

“முஸ்லிம்களின் ஒற்றுமைக்காக உறவுகளை வலுப்படுத்துவதும் நம்பிக்கையை ஏற்படுத்துவதும் சகோதரத்துவத்தை பலப்படுத்துவதும் நமது கடமை” என்று குறிப்பிட்டார். இஸ்லாமிய உலகின் சவால்கள் “பிளவைத் தூண்டுவதற்குப் பதிலாக ஒற்றுமையின் வாய்ப்பாக மாற வேண்டும்” என்றும் அவர் தெரிவித்தார். ‘‘சவூதி அரேபியா முஸ்லிம் உலகின் இதயம்” என்று பாராட்டிய அஷ்ஷெய்க், பல்வேறு சிந்தனைகளை ஒன்றிணைக்கும் அரசின் முயற்சிகளைப் புகழ்ந்தார்.

உலக முஸ்லிம் லீகின் செயலாளர் முஹம்மது பின் அப்துல் கரீம் அல்-இஸ்ஸா, கடந்த ரமழானில் நடைபெற்ற தொடக்க மாநாட்டின் அடிப்படைகளை இந்த மாநாடு மேலும் வலுப்படுத்துகிறது எனக் குறிப்பிட்டார்.

இஸ்லாமிய முகாம்களுக்கிடையிலான வேறுபாடுகள் இயல்பானவை; ஆனால், அவற்றை சரியான முறையில் நிர்வகிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

அல்-இஸ்ஸா, மேலும் குறிப்பிடும்போது, எதிர்மறை கோட்பாட்டு விவாதங்கள் வரலாற்றில் பாதிப்பை ஏற்படுத்தியதுடன், இதில் ஈடுபட்டவர்களை முஸ்லிம் சமூகத்தையும் பாதிப்படையச் செய்கின்ற விவாதங்களைத் தவிர்க்க வேண்டுமென எச்சரித்தார்.



உண்மையான ஒற்றுமைக்கு முழுமையான ஒப்புசமை தேவையில்லை, மாறாக பரஸ்பர புரிதலும் மதிப்பும் முக்கியமென்று அவர் வலியுறுத்தினார். இந்த மாநாடு, இஸ்லாமிய முகாம்களுக்கிடையேயான உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தைக் குறிக்கிறது.

சவூதியின் மத இராஜதந்திர பங்கு மற்றும் பிளவுகளை சமாளிக்கும் உறுதிப்பாடு ஆகியவை இதில் பிரதிபலித்துள்ளன. மாநாட்டில் கலந்துகொள்பவர்கள், ஒற்றுமைக்கான குறிப்பிட்ட கட்டமைப்புகளை உருவாக்குவதுடன், ஒவ்வொரு பாரம்பரியத்தின் தனித்துவத்தையும் பேணுவதற்கான சமநிலையை ஏற்படுத்த முயல்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த “பயனுள்ள இஸ்லாமிய கூட்டணி” கருப்பொருள் வெற்றி பெற, மதத் தலைவர்கள் இந்த சமநிலை முக்கியம் என்று வலியுறுத்துகின்றனர். ஆய்வாளர்களின் கூற்றுப்படி, இன்றைய உலகில் இத்தகைய முயற்சிகள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன.

ஏனெனில், தீவிரவாதக் குழுக்கள் மதப் பிளவுகளை தங்களின் நலனுக்காக பயன்படுத்துகின்றன. இந்த மாநாடு வெறும் கருத்துகளைப் பகிர்வதை மட்டும் நோக்கமாகக்கொள்ளாமல், முஸ்லிம்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான நடைமுறை நடவடிக்கைகளில் கவனம் செலுத்துகிறது. இதுவே, இஸ்லாமிய சமூகம் நீண்ட காலமாக எதிர்கொண்டுள்ள பிரிவினைப் பிரச்சினைகளைத் தீர்க்க உதவும் மாற்றத்துக்குரிய அணுகுமுறையாக அமையக்கூடும்.

மாநாடு முன்னோக்கி நகரும்போதே, பங்கேற்பாளர்கள் தங்கள் தனித்துவமான மரபுகளைப் பேணிக்கொண்டே, இஸ்லாமிய கோட்பாட்டு வேறுபாடுகளுக்கிடையே ஒத்துழைப்புக்கான தெளிவான கட்டமைப்புகளை உருவாக்குவார்கள்.

மதத் தலைவர்கள் கூறுவதன்படி, இது மாநாட்டின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள “பயனுள்ள இஸ்லாமிய கூட்டணி” நோக்கத்தை அடைவதற்கான முக்கியமான ஒரு படியாகும்.

**கலாநிதி ஜே.டி.கரீம்தீன்**
**சிரேஷ்ட விரிவுரையாளர்**
**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

# “பீலிச்சண்டை”



தமிழன் சிறுகதை

பசறையூர் ஏ.எஸ். பாலச்சந்திரன்

எங்கு பார்த்தாலும் பசுமை நிறைந்த தேயிலைக் காடு, ஈர்க்கும் அழகை வைத்தே எழில் கொஞ்சும் மலைநாட்டு தேயிலைப் பூவனம் என்று தெரிந்துகொள்வார்கள். காடாய் இருந்த மலைகள் எங்கும் கால்கள் ஊன்றிய தேயிலையோடு ஆங்காங்கே விதைத்து விட்டதுபோல் லயன்கள் என்னும் தோட்டத் தொழிலாளர் குடியிருப்புகளும் உள்ளன.

மாலை மங்கும்வேளை மாடுகள், ஆடுகளோடு மலையிறங்கும் மனிதர் கூட்டம். ஆண்களின் கைகளில் மண்வெட்டியும் கவ்வாத்துக்கத்தியும் இருக்க, பெண்களின் கைகளில் மட்டக்கம்பும் தலையில் கொழுந்துக்கூடையுமாக ஓட்டமும் நடையுமாய் வீடு நோக்கி ஓடும் படலம். சிலர் வேலை முடிந்து வரும் வழியிலேயே கால்நடைகளுக்கு உணவாக இலைகுழைகளையும் வெட்டிக்கொண்டே வருவார்கள். சிலர் காய்ந்த தேயிலை மிளாறுகளைப் பொறுக்கி ஒரு கட்டுகட்டி தூக்கிக்கொண்டும் வருவார்கள். சிலர் சவுக்குச்சருகுகளை ஒன்றுசேர்த்து ஒரு மூட்டையாகக் கட்டிக்கொண்டு வருவார்கள். சவுக்குச்சருகு அடுப்பைப் பற்றவைக்க இலகுவாக இருக்கும். சில பெண்கள் அடுப்பை மெழுகுவதற்காக அப்போதே போட்ட மாட்டுச் சாணத்தையும் சேகரித்துக்கொண்டு வருவார்கள். இதுதான் மலையகத்தின் உண்மை நிலை.

இப்படித்தான் வள்ளியம்மையும் தலையில் கொழுந்து கூடையுடன் பாதை மருங்கில் ஆங்காங்கே கிடந்த விறகுக் குச்சுகளையும் கோர்த்துக்கட்டிய கட்டுடன் வீடு நோக்கி வந்துகொண்டிருந்தாள். அந்த பன்னிரெண்டு காம்பறா லயத்தில்தான் அவள் வீடும் இருந்தது. அவள் கணவன் மருதமுத்துவும் இதே தோட்டத்தில்தான் தொழிலாளியாக வேலை புரிகிறான். ஆண்களுக்கு இரண்டு மணிக்கே வேலை முடிந்துவிடும். கவ்வாத்து, கானுவெட்டு, உரம் போடுதல், மருந்தடித்தல், குழிதோண்டல் என்று ஆண்களுக்குக் கடுமையான வேலைதான் கொடுப்பார்கள்.

இதனால் உடம்பு உளைச்சல் காரணமாக மாலை வேளைகளில் அவர்களில் அநேகமானோர் ராக்கம்மாவின் கள்ளுக்கடையிலாவது அல்லது சுடலைமணியின் கசிப்புக்கடையிலாவது நின்றுகொண்டிருப்பார்கள். வள்ளியம்மையின் கணவன் குப்புசாமி கூட அங்குதான் நிற்பான். வள்ளியம்மைக்கு மூன்று பிள்ளைகள். மூத்தவளை தலைநகரிலுள்ள ஒரு தனவந்தர் வீட்டிலேயே, வீட்டு வேலைக்கு அனுப்பியிருந்தார். இளையவன் சுருட்டைச் சுந்தரும் சின்னவள் தாரணியும் தோட்டப் பாடசாலையிலேயே கல்வி கற்றுவந்தார்கள். இதைத் தவிர, வள்ளியம்மையைப் பற்றிச் சொல்ல பெரிதாக ஒன்றுமில்லை.

எல்லா வீட்டுக்கூரையூடாகவும் புகைமண்டலம் பரவிக்கொண்டிருந்தது. அவள் வீட்டிலும் புகை பரவுவதைக்கண்டு பூரித்துப்போனாள் வள்ளியம்மை. ‘அப்படியானால் என் மகளும் அடுப்பை மூட்டியிருக்கிறாள். அப்போ கேத்தலில் தண்ணீர் சுட்டுக்கொண்டிருக்கும். போனவுடன் தேநீரை ஊற்றிக் குடித்துவிட்டு பீலியடிக்குப் போகலாம்” என்று தன்னுள்ளே எண்ணிக் கொண்டவளாக வீட்டுக்குள் நுழைவதற்கு முன் கோடிப்பக்கம் சென்று பீலியடியையும் ஒரு முறை பார்த்துவிட்டு வருவோம் என்று சென்றவளுக்கு அங்கு நிரம்பி வழிந்த பாத்திரங்களைப் பார்க்க மலைப்பாக இருந்தது.

அநேகமாக தோட்டப்பகுதிகளில் பன்னிரெண்டு காம்பறா லயமாகட்டும் ஆறு கம்பறா லயமாகட்டும் ஒரேயொரு தண்ணீர்ப்பிலிதான் பொருத்தப்பட்டிருக்கும். அந்த ஒரு பீலியில்தான் எல்லா அலுவல் களையும் செய்து கொள்ள வேண்டும். யார் முந்திக் கொள்கிறார் களோ அதன் அடிப்படை யில்தான் படிப்படியாக இடம் கிடைக்கும்.

தலையில் இருந்த விறகுக்கட்டையை இறக்கி வைத்துவிட்டு, கொழுந்துக் கூடையையும் உரிய இடத்தில் தொங்க வைத்துவிட்டு வாசலில் நின்றபடியே சேலையில் ஒட்டிக்கிடக்கும் ஒட்டுண்ணி போன்ற முட்களைப் பிடிங்கிக் கொண்டிருந்தாள். அவள் கைகளிலிருந்த பித்தளை வளையல் சத்தம் கேட்டு அம்மா வந்து விட்டாள் என்று வெளியே வந்தாள் தாரணி. ‘‘அம்மா வந்துட்டியா?’’

“ஆமா, புள்ள தண்ணி சுட்டுடிச்சா.....”

“இல்லம்மா வெறகு பச்சபோல எரியுது இல்ல.’’

‘‘அந்த வெறக கொஞ்சம் ஓடிச்சி வையம்மா நல்லா காஞ்சிருக்கு”.... என்று தான் சுமந்து வந்த விறகுக்கட்டையை மகளிடம் காண்பித்தாள். ‘‘அம்மா தாரணி, நான் அடுப்ப பார்க்குறேன். பீலியடியிலே சரியான கூட்டமா இருக்கு. இன்னைக்கு எத்தனை மணியாகுமோ தெரியல்ல நீ போயி நம்ம பாத்திரங் களையும் வச்சிக்கிட்டு நில்லு” என்று மகளிடம் சொல்லிவிட்டு வீட்டு விறாந்தையில் உடுப்புகளை மாற்றிக் கொண்டு தேநீர் ஊற்ற போனபோது ஏதோ அசரீரியான சத்தம் கேட்டு திடுக்கிட்டாள்.

உடனே பீலியடியை நோக்கி ஓடோடிச் சென்றாள். அதற்கிடையில் அந்த லயமே கிடு கிடுத்து நின்றது. ஒரு நொடிப்பொழுதில் அனைவரும் குழுமி நின்றார்கள். அங்கே பீலியடியில் முதல் காம்பறாவில் இருக்கும் முத்தையா கீழே விழுந்து மயக்க நிலையில் கிடந்தான். சிலர் அவன் மூக்கில் கையை வைத்து பார்த்துவிட்டு, “முடிஞ்சு போச்சு முடிஞ்சு போச்சு... போலீசுக்கு சொல்லணும்” என்று முடிவு பண்ணினார்கள்.

அந்தத் தோட்டமே கதிகலங்கிப் போய் அந்த இடத்தில் கூடி நின்றது. அதற்கிடையில் யாரோ தொலைபேசியில் விடயத்தைப் பொலிஸாருக்கு அறிவிக்க, சற்றுநேரத்தில் பொலிஸாரும் வந்திறங்கினார்கள். பொலிஸார் நடந்ததை விசாரித்தார்கள். நடந்தது என்ன?

மூன்றாம் காம்பறாவில் இருக்கும் சுப்பம்மா ரொம்பவும் மோசமானவள். ஆணவக்காரி, சண்டை பிடிப்பதில் சாமர்த்தியசாலி. இது அந்தத் தோட்டத்துக்கே தெரியும். நான்கு மணிக்கு தண்ணீர் வந்தவுடன் முதன்முதலில் முத்தையாதான் பாத்திரங்களைக் கொண்டுபோய் பீலிக்கரையில் வைத்திருக்கிறான். அதற்குப்பிறகு வந்த சுப்பம்மா அவனை வீண்வம்புக்கு இழுத்திருக்கிறாள். அவனுடைய பாத்திரங்களைத் தள்ளிவிட்டு, இவளுடைய பாத்திரங்களை வைக்க முற்பட்டபோது முத்தையா அவளுடைய கையைப்பிடித்து தள்ளி விட்டிருக்கிறான்.

உடனே சுப்பம்மா....”ஐயோ... ஐயோ... எல்லாரும் வாங்களேன்.. முத்தையா என் கையைப்பிடித்து இழுத்து பலாத்காரம் பண்ணுறான். இந்த அநியாயத்தைக் கேக்க யாரும் இல்லையா... கடவுளே’’ என்று கூச்சலிட்டிருக்கிறாள்.

அதைக் கேட்டுக்கொண்டிருந்த சுப்பம்மாவின் மகன் தவசீலன் சுற்றும் முற்றும் பார்த்தபோது உலக்கை அவன் கண்ணில் பட்டிருக்கிறது. உடனே உலக்கையை எடுத்து வந்து ஆத்திரத்தில் முத்தையாவைத் தாக்கியிருக்கிறான். ஓர் அன்னைக்கு இப்படியொரு அசம்பாவிதம் நடந்தால் எந்த மகனால்தான் பார்த்துக்கொண்டிருக்க முடியும். அதைத்தான் தவசீலனும் செய்திருக்கிறான்.

முத்தையாவின் உடல் பிரேதப் பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. பொலிஸார் தவசீலனைத் தேடி அவன் வீட்டை முற்றுகையிட்டார்கள். அதற்கிடையில் அவன் தலைமறைவாகி விட்டிருந்தான். பொலிஸார் அவனைத்தேடி வலை வீசினார்கள். பிரேதப் பரிசோதனையின் பின் முத்தையாவின் சடலம் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. தோட்ட மக்கள் அனைவரின் கண்ணீர் அஞ்சலியோடு முத்தையாவின் சடலம் தோட்ட மைதானத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது. முத்தையா நல்லவன். யாரிடமும் அப்படி சண்டைசச்சரவுகளுக்கு போகக்கூடியவன் அல்லன். திருமணமாகி இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தை. அவன் மனைவி மல்லிகாவும் அதே தோட்டத்திலேயே வேலை செய்தாள். முத்தையா இல்லாமல் மல்லிகா எப்படி வாழப்போகிறாளோ சின்னஞ்சிறு பிள்ளைகளை எப்படி கரைசேர்க்கப் போகிறாளோ என்று எல்லோரும் பரிதாபப்பட்டார்கள். அவளுக்கும் பெரிதாக உறவினர்கள் என்று யாருமில்லை. எல்லாம் ஆண்டவன் கிருபைதான். யாருமற்ற அநாதைகளுக்கு ஆண்டவன்தானே அடைக்கலம் தர வேண்டும்.

வழமையாக பீலிக்கரையில் அடிக்கடி இப்படி சண்டை சச்சரவுகள் தினம்தினம் நடைபெறுவது வழக்கம். இருப் பினும், இந்தளவுக்குப் போனதில்லை. எல்லாம் தண்ணீர்ப் பிரச்சினையால் வந்த விளைவு.

மறுநாள் யாரும் வேலைக்குப்போகவில்லை. தோட்டமே சோகமயமாகத் திகழ்ந்தது. விடயத்தைக் கேள்விப்பட்டு ஏதோ ஓர் அதிசயத்தைப் பார்ப்பதுபோல அக்கம் பக்கத்து தோட்டங்களிலிருந்தும் கிராமப்புறங்களிலிருந்தும் சனக்கூட்டம் வழிந்து நின்றது. அதைவிட வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை என்று ஊடகத்துறையினரும் குழுமி நின்றனர். இது அவர்களைப் பொறுத்தவரை சூடான செய்தி. ஒருவாறு முத்தையாவின் சடலம் தோட்ட மயானத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது. அநேகமாக ஒவ்வொரு தோட்டங்களிலும் இதற்காக பிரத்தியேக இடம் ஒதுக்கப்பட்டிருக்கும். முத்தையாவின் மனைவியும் பிள்ளைகளும் ஓவென்று அழுது புலம்பினார்கள். அக்காட்சியைக் காண்பவர்களின் கண்களிலெல்லாம் கண்ணீர் ஆறாகப் பெருகியது. தனக்குத் தெரிந்த காலத்திலிருந்தே ஓடி ஆடி திரிந்த அந்தத் தோட்டத்தையும் உடனிருந்தவர்களையும் விட்டு முத்தையா மீளாத்துயிலோடு விடைபெற்றுச்சென்றான்.

அன்றிரவே தோட்டத் தலைவர்களும் சில முக்கியஸ்தர்களும் கோயில் மண்டபத்தில் கூடிப்பேசி ஒரு முடிவுக்கு வந்தார்கள். முத்தையாவின் மரணத்தோடு இந்த தண்ணீர்ப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்டவேண்டும். ஒவ்வொரு வீட்டுக்கும் தனித்தனி தண்ணீர்ப்பீலி போட நிர்வாகத்திடம் கோரப்போவதாக முடிவு செய்தார்கள். விடிந்ததும் ஒட்டுமொத்தமாகச்சேர்ந்து தோட்ட அலுவலகத்துக்குச் செல்வதென்று தீர்மானித்தார்கள்.

கிழக்குச் சூரியனின் வரவை எல்லோருக்கும் முன்பதாக தெரிந்துகொண்ட சேவல்கள் எல்லாம் ஒன்றிணைந்து கூவத்தொடங்கின. சேவல் கூவும் சிங்கார ஒலிகேட்டு பொழுதுபுலர்ந்துவிட்டதைப் புரிந்துகொண்ட அந்தத் தோட்ட மக்கள் அனைவரும் கண்விழித்து தத்தம் கடமைகளில் ஈடுபட்டார்கள். ஏற்கனவே தீர்மானித்தபடி குறித்த சிலர் நிர்வாகத்தினரைச் சந்திக்க புறப்பட்டார்கள்.

நிர்வாகம் இவர்களின் கோரிக்கைக்கு உடன்படவில்லை. விடயம் யூனியன் வரை சென்றது. யூனியன் என்பது தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் கட்சிக்கூடம். யூனியனும் நிர்வாகத்தினரிடம் கேட்டுப்பார்த்தும் அதற்கும் நிர்வாகத்தினர் செவிசாய்க்கவில்லை. வேறு வழியில்லை. சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது. இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் என்று தொடர்ந்தது. இருந்தும் தோட்ட நிர்வாகம் கண்டுகொள்ளவே இல்லை.

சத்தியாக்கிரகப் போராட்டத்தைத் தொடர்ந்து, உண்ணாவிரதப் போராட்டமும் நடந்தது. பலர் மயங்கி விழுந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்கள். விடயம் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையதளம் மூலம் உலகமே பரவியது. மேலிடத்திலிருந்து தோட்ட நிர்வாகத்துக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. வேறு வழியின்றி நிர்வாகம் கோரிக்கைக்கு உடன்பட்டது. நீர் விநியோகத்துக்கு மட்டுமல்ல, லயன் காம்பிறாக்களுக்குப் பதிலாக தனித்தனி வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டன.

இப்போது அந்த தேயிலைத்தோட்டமே உருமாறியிருந்தது. முத்தையாவின் மரணத்தினாலேயே இந்தத் தோட்டத்துக்கு விமோசனம் கிடைத்திருக்கிறது. ஆகவே, முத்தையாவுக்கு சிலை வைக்க வேண்டுமென்று சிலர் அபிப்பிராயம் தெரிவித்தார்கள். அதுவும் நிறைவேற்றப்பட்டது. அதுமட்டுமல்ல.

அந்தத் தோட்டத்துக்கு ‘முத்தையாபுரம்’ என்ற பெயரும் சூட்டப்பட்டது.

**முற்றும். (யாவும் கதாசிரியரின் கற்பனையே).**

## மலையகத்தின் சொல்ல மறந்த கதை

### வலிகள்

கோப்பி செடிகள் எல்லாம் வாடி வதங்கி
போயி மரணித்து நின்றதுபோல் மக்கள்
ஜனங்கள் இங்கே
மரணித்து போனாங்க.....

கருகிப்போன கோப்பியிலே
துரைமாரின் சொத்து மட்டு
தனியாக கரையவில்லை
மக்கள் மனுஷர் எல்லாம்
சேர்த்து வைத்த சந்தோஷமும்
நிம்மதியும் சேர்ந்தே தான்
கோப்பியோடு கரைந்ததங்கே...

டிக்கோயாவ விட்டு வேறு ஊர் தேடி
எல்லாம் முனியாண்டி
புறப்பட்டு நிற்கையிலே
கோப்பிச்செடி தூறில் நின்று கத்தி
கதறிவிட்டார்....

எப்படிப்பட்ட ஊர் எது திக்கு தெரியாது
இந்த சிலோன் சீமையிலே உறவுகளை
உதிரிவிட்டு ஒத்தையாய் நிற்கையிலே
உறவு தந்த ஊரு அது...

காக்க முத்து ஐயாவின் அன்பான
தகவலே அவரோடு மகனாக
அங்கேயே இருந்ததெல்லாம்
இப்போது மனசுக்குள்ளே நீங்காத
வடுவாக அப்படியே இருக்கிறது.....

சொந்த தங்கசாட்டம் அவர் பொண்ணு
கட்டிக் கொடுத்துவிட்டு பாசத்துக்கு
ஒருவாட்டி கண்டிக்கி அந்தப் பக்கம்
நூல் கண்டு ரா தோட்டத்திலே
பாக்க போன நெனப்பு எல்லாம்
நெஞ்சை விட்டு அகழ்ந்திடுமா....

இந்தக் கோப்பி தேசத்திலே
பட்ட துன்பங்களோ ஓராயிரம் தாண்டி
நிக்கும் அப்படி இருந்தும் கூட
துன்பத்திலே இன்பம் போல
இந்தக் கோபி காடு எங்கே
கொஞ்சம் நிம்மதியா தராமல்
இருக்கவில்லை...

இப்ப கோப்பிக்கு மரண செய்தி
கிட்டத்திலே வந்திருக்க
இத நட்டு வச்ச மக்களுக்கும்
மரணங்கள் இப்பவெல்லாம்
துரத்திக் கொண்டு வருகிறது.....

முனியாண்டி மடியினிலே
தல சாய்ந்து படுத்து இருக்கா
தங்கச்சி பாப்பாத்தி
அண்ணன் என்று சொல்லிவிட்டு
அப்புறமா வார்த்தை ஏதும் வரவில்லை

கண்கள் ரெண்டும் பேசுகிற
பழைய நினைப்புகளில்
பசுமை நினைவு எல்லாம்
படமாக வந்து போக
பதில் வார்த்தை ஏதுமின்றி
பதில் சொல்ல வருகிறத
இருவருக்கும் கண்ணீரு.....

உன்னுடைய இறுதி நேரத்திலா
இந்த இறுதி நெனப்பு எல்லாம்
நெருப்பு போல வந்திடணும்
ஐயோ பாப்பாத்தி உன் இறுதி
காலத்திலே உன் இறுதி பேச்சைக்
கேட்டிட வா இம்புட்டு காலம்
காத்திருந்தேன்....

இப்படியெல்லாம் பேசிவிட முனியாண்டி
மனசு எது முண்டி எழுந்திருச்சு
தொண்டை குழிக்கு வெளியே
வார்த்தைய ஏதும் வரவில்லை

உச்சி வெயிலு போயி மத்தியானம்
ஆகிறது தலையை சூடாக்கும்
கடுவெப்பம் மாறி அங்கே இதமான
காத்தோட இதமான சூடு ஒன்னு
இதயத்தை தொடுகிறது......

“தண்ணி... தண்ணி....” என்று தயவான
அந்த குரல் அன்னைக்கு படகு
கப்பலிலே புள்ளத்தாச்சி மூக்காயிய
தாங்கிக் கொண்டு வருகையிலே...
“பயப்பட வேணாமுக்கா நான் இருக்கே
“ என்று சொல்லி தேத்தி வந்த
அதே குரல் கொஞ்சம் வத்திப்போன
தொண்டையிலே அப்படியே
இருக்கிறது.....

இருத்தாயி வந்துடுறேன் என்று
சொல்லி தண்ணி எடுக்க போயி
அங்கிருந்த செம்பு ஒன்னில் அரைவாசி
தண்ணியோட வந்து சேர்ந்தார்
முனியாண்டி.....

இந்த தாயி என்று சொல்லி
மீண்டும் மடி மேல பாப்பாத்தியின்
தலையை வைத்து தண்ணி தர
போகையிலே குதிக்கால்கள் இரண்டும்
அங்கே மேலும் கீழுமாக மெதுவாக
துடிக்கிறது.....

இதயத்துடிப்பு எல்லாம் இமயம் வரை
கேட்டு விட புதுமையான காட்சி எல்லாம்
அரங்கேறி நிற்கிறது....
கண்ணு விழிகள் எல்லாம் அகல
விரித்துவிட்டு முனியாண்டி முகத்தை
அவ விரைத்து பார்த்தவைத்திருந்தார்

“மெதுவாக வாய் திறந்தா”
ஒரு சொட்டு... இரண்டு சொட்டு
வாக்குள்ளே மெதுவாக போய்விட
மூன்றாம் சொட்டு அதில் ஏதோ இலை
ஒன்று சேர்ந்தே செல்கிறது பாப்பாத்தி
வாய்க்குள்ளே......

மூச்சை இழுத்து வந்து பாப்பாத்தி
இப்போ மெதுவாக இடைநிறுத்தி நீண்ட
மூச்சு ஒன்ன இழுத்து விடும்போது
அப்போதான் புரிகிறது கோப்பி இல்லை
என்றும் நீரோட சேர்ந்து அங்கு
வாய்க்குள்ளே சென்றதென்று.....

என்னாச்சு என்று சொல்லி முனியாண்டி
வாய்க்குள்ளே கையைவிட பாப்பாத்தி
கையை தடுத்து விட்டு இறுதி மூச்சு
ஒன்னு வேண்டான்னு வீசுகிறா....

(சொல்ல மறந்த கதை இன்னும்
சொல்லப்படும்)

எம்.ராமதாஸ்,
இறம்பொடை.

# புலரும் பொழுது

தமிழன் தொடர்கதை

கலாபூஷணம் சபீனா வைத்துல்லாஹ்

அத்தியாயம் 13



“கவிதா, ஐஸ்வர்யா வாங்களேன். ஐஸ்கிறீம் சாப்பிட்டீங்களா” என்றவாறு கிட்ட வந்தார் மாலா.

“ஆமாம் அண்ணி, சாப்பிட்டோம். நீங்க சாப்பிட்டீங்களா?’’ என்றாள் சுகந்தி.

“சாப்பிட்டேன் சாப்பிட்டேன்” என்றவாறு அவ்விடத்தை விட்டு மெல்ல நகர்ந்தாள் மாலா.

“ஒன்ன இழந்துதான் இன்னொன்னைப் பெற வேணும். இது நம்ம நெலமை. அதுவும் நன்மைதான்” என்று ஆறுதலடைந்தார் நாதன்.

“பெண்ணைப் பெத்து வளத்துப் படிக்க வெச்சிடலாம். பெத்த பெண்ணுக்குச் சீதனம் சேர்த்துக் குடுப்பதுதான் பெருங்கஷ்டம்” என்று பெருமூச்சுவிட்டார்.

அவருக்கு வயல்நிலம் மாடுகன்று விற்றதில் கொஞ்சம் மனவருத்தம்தான். இருந்தாலும், மகளின் திருமணம் நடந்தது மனநிறைவு கொடுத்தது அவருக்கு.

மணம் முடித்துச் சில மாதங்கள் கடந்தன. மலருக்கு வைத்தியராக நியமனம் கிடைத்தது. அவர் வேலை செய்யும் வைத்தியசாலைக்குப் பக்கத்தில் வாடகைக்கு வீடு எடுத்தார்கள். அங்கு மலர் தம்பதியினர் குடியேறினர்.

மாலாவும் நாதனும் மகளைப் பார்க்க அடிக்கடி போய் வருவார்கள். நாதன் வைத்திய கிளீனிக் செல்லும்போது மலருடன் இரண்டு மூன்று நாட்கள் தங்கிவிட்டு வருவார்.

ஆண்டொன்று கழிந்தது. அமுதனும் ஆனந்தனும் வேலை தேடினர். பொறியியலாளருக்கு நிரந்தர வேலை கிடைப்பதென்பது,தாய்நாட்டில் கடினமாகவே இருந்தது. மலருக்கு வீடு கட்டிக் கொடுக்கும் பொறுப்பை அண்ணன்மார் இருவரும் ஏற்றிருந்தார்கள்.

ஆனந்தன் விரும்பிய மீனாவும் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை முடித்திருந்தாள். அமுதனுக்கு நிச்சயம் பண்ணிய பெண்ணும் ஆசிரியராகப் பணி புரிகின்றார். எல்லோரும் தங்களின் எதிர்காலக் கல்யாணக் கனவுகளில் மிதந்துகொண்டிருந்தனர்.

அமுதனும் ஆனந்தனும் வீட்டிலே தாய் தகப்பனுக்கு உதவியாக இருந்தனர்.

நாதனும் மாலாவும் கவலைகளை மறந்து களிப்புடன் இருந்தனர். சில மாதங்களின் பின்னர் மகன்மார் இருவருக்கும் வேலை கிடைத்தது. நகரமொன்றில் கட்டுமானத் திட்டத்துக்குப் பொறியியலாளராகச் சென்றனர். வீடு வெறிச்சோடிவிட்டது. இரவும் பகலும் மாறி மாறி வருவதுபோலத்தான், மனித வாழ்வில் ஏற்படும் சம்பவங்களும் என்று எண்ணி ஆறுதலடைந்தார் மாலா.

வயலில் வேலை செய்யும் சுந்தரத்தாரை அழைத்து வீட்டையும் கவனித்துக் கொள்ளுமாறு சொல்லிவிட்டு, நாதன் தம்பதியினர் ஒருவார காலம் மகளின் வீட்டில் தங்கி நிற்கச்சென்றனர். அங்கு மலர் மகிழ்ச்சியான செய்தி வைத்திருந்தாள். மாலா பாட்டியாகப் போகும் அந்தச் செய்தி கேட்டு நெஞ்சம் நெகிழ்ந்தார். அவர் மகளை அணைத்து உச்சிமோந்தார். குடும்பத்தின் புதிய வரவை மாமன்மார்களும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அங்கு வந்த மலரின் கணவர் குணாளன் பொன்னைப்போன்ற பெண்ணைப் பெற்றுத் தந்த மாமாவையும் மாமியாரையும் கண்டார். “வணக்கம்! வணக்கம். எப்ப வந்தீங்க மாமா. ஒங்களுக்குக் கோல் எடுப்பமெண்டுதான் இருந்தோம்” என்று மகிழ்வுடன் பேசினார் மருமகன் குணாளன்.

அன்றைய நாள் நாதனுக்கு வாழ்வில் மறக்க முடியாத நாளாகத் தெரிந்தது. தானொரு நோயாளியென்ற நினைவை அவர் மறந்து விட்டார்.

“மாலா நான் கடைக்குப் போய்ச் சாமான்கள் கொஞ்சம் வாங்கி வரட்டுமா?” என்றார்.

“சரிங்க நானும் வாறேன் ரெண்டு பேரும் சேர்ந்து போவோம்’’ என்றார் மாலா டீச்சர்.

“மலர், நாங்க கடைப்பக்கம் போயிற்று வாறோம்மா’’ என்றார் தாய் மாலா.

ஓட்டோ ஒன்றை எடுத்துக்கொண்டு, இருவரும் புறப்பட்டனர். அன்றைய சமையலுக்குத் தேவையானதையும் மலர் விரும்பிச் சாப்பிடும் பழங்கள் மாங்காய் போன்றவற்றையும் வாங்கி வந்தனர். மாலா தேசிக்காயை வெட்டி ஊறுகாய் போட்டார். மோர்மிளகாயும் செய்தார்.அன்று மணக்க மணக்கச் சமையலும் செய்து முடித்தார் மாலா.

வேலைக்குச் சென்ற மலர் பகலுணவுக்கு வீடு வந்தாள். அம்மாவின் கைப்பக்குவம் அவளை இன்னும் கொஞ்சம் கூடுதலாக உண்ண வைத்தது.

“இண்டைக்குக் கொஞ்சம் கூடத்தான் சாப்பிட்டேனும்மா’’ என்றாள் மலர்.

“சாப்பிடத்தான் வேணும். புள்ளைக்கும் சேர்த்துச் சாப்பிடணுமே” என்றாள் தாய்.

‘‘காலையில எழும்ப ஏலாம்மா. குணாதான் டீ ஊத்தித்தாறவர்’’ என்று வெட்கப்பட்டுக்கொண்டு சொன்னாள் மலர்.

“ஒடம்புக்கு ஏலாத நேரத்தில ஆளுக்கு ஆள் ஓதவியாத்தான் இருக்கணும் மகள். எங்கட மருமகன் நல்ல மனிசன்” என்று சந்தோசப்பட்டுக்கொண்டார் மாலா.

அப்பா நாதனின் உடலும் நன்கு தேறியது. அவர் கலகலப்பாகச் சிரித்துப் பேசுவது இப்போதெல்லாம் வழக்கமாகிவிட்டது.

அன்று பின்னேரம், அவர் மலரின் வீட்டிலே வெளிவிறாந்தையில் இருந்த சாய்மனையில் அமர்ந்திருந்தார்.

(தொடரும்)



# காயங்களால் பாதிக்கப்பட்ட ஈக்குவடோர் வீரர்கள்

வெனிசுலா, சிலி ஆகிய அணிகளுக்கெதிரான உலகக் கிண்ண தகுதிச் சுற்றுப்போட்டிகளுக்கான ஈக்குவடோர் அணியில் லியோனார்டோ காம்பனாவின் பெயர் இடம்பெறாதென்று தலைமைப் பயிற்சியாளர் செபஸ்டியன் பெக்காசெஸ் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை மேஜர் லீக் கால்பந்தில் பிலடெல்பியாவிடம் நியூ இங்கிலாந்து அணி 2-0 என்ற கணக்கில் தோல்வியடைந்தபோது தொடை தசைநார் கிழிந்ததால் காம்பனா ஒரு மாதம் வரை ஓய்வில் இருப்பார்.

லென்ஸ் இடது-முதுகு ஜோன்னர் சாவேஸ் (தொடை நாண்), செர்கிள் ப்ரூஜ் விங்கர் ஆலன் மிண்டா (தொடை), ஸ்பார்டா பிராகா வலது-முதுகு ஏஞ்சலோ பிரீசியாடோ (முழங்கால்) ஆகியோரும் இந்த மாத இறுதியில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்கமாட்டார்கள் என்று பெக்காசெஸ் கூறினார்.

''அவர்கள் இங்கே இருக்க வேண்டுமென்று நான் விரும்பும் வீரர்கள். ஆனால், துரதிர்ஷ்டவசமாக அவர்கள் இல்லாமல் நாங்கள் சமாளிக்க வேண்டியிருக்கும்'' என்று அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.

''அனைத்து தேசிய அணிகளையும் போலவே இந்த வகையான துன்பங்களை நாங்கள் சமாளிக்க முடியும்.''

மார்ச் 21ஆம் திகதி குயிட்டோவில் வெனிசுலாவையும் நான்கு நாட்களுக்குப் பிறகு சாண்டியாகோவில் சிலியையும் ஈக்குவடோர் சந்திக்கும். 10 அணிகள் கொண்ட தென் அமெரிக்க மண்டல தகுதிச் சுற்றில் ஈக்குவடோர் அணி தற்போது 12 போட்டிகளிலிருந்து 19 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலுள்ளது.





# 6 மில்லியன் லைக்குகளை அள்ளிய புகைப்படம்

சம்பியன்ஸ் கிண்ணத்தை ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணி கைப்பற்றியது. இந்திய அணியின் இந்த வெற்றி இந்திய ரசிகர்கள் மத்தியில் மிகப்பெரிய மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையில், இந்த வெற்றியை இந்திய வீரர்கள் மைதானத்தில் பெரியளவில் மகிழ்ந்து கொண்டாடினர்.

இந்திய அணியின் நட்சத்திர ஓல்ரவுண்டரான ஹார்டிக் பாண்டியா அவரது ஸ்டைலில் இந்தக் கிண்ணத்தைக் கொண்டாடினார். பிட்ச்சின் மத்தியில் கிண்ணத்தை வைத்து இரு கைகளையும் கிண்ணத்தை நோக்கிக் காட்டுவதுபோல அவர் ஸ்டைலாக போஸ் கொடுத்திருந்தார். கடந்த ஆண்டு ரி20 உலக கிண்ணத்தை வென்றபோதும் இதேபோன்ற தனித்துவமான போஸ் கொடுத்திருந்தார்.

அதே மாதிரி இம்முறையும் போஸ் கொடுத்து எடுத்த புகைப்படத்தை தனது சமூக வலைத்தள பக்கத்தில் பதிவிட்டார். அவர் பதிவிட்டிருந்த புகைப்படம்தான் தற்போது இந்திய அளவில் சாதனை படைத்துள்ளது. அவர் பதிவிட்ட அந்தப் புகைப்படமானது வெறும் 6 நிமிடங்களில் ஒரு மில்லியன் லைக்குகளைப் பெற்று அதிவேகமாக ஒரு லைக்குகளை பெற்ற இந்தியர் என்ற சாதனையை அவருக்குப் பெற்றுக்கொடுத்துள்ளது.

அந்தப் புகைப்படமானது தற்போது வரை 16 மில்லியன் லைக்குகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே இந்திய அணியின் நட்சத்திர வீரராகத் திகழ்ந்துவரும் அவர், ஒருவேளை ரோஹித் சர்மா ஓய்வுபெற்றால் அடுத்த கப்டனுக்கான ரேஸிலும் இருக்கிறாரென்பது குறிப்பிடத்தக்கது.

# ஐந்து போட்டிகளில் விளையாட கோரியாவுக்குத் தடை

கெட்டாஃபே அணிக்கு எதிரான 2-1 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்த போட்டியில் ரெட் கார்டு காட்டியதைத் தொடர்ந்து, அத்லெடிகோ மாட்ரிட் ஃபார்வர்ட் ஏஞ்சல் கோரியாவுக்கு ஸ்பானிஷ் கால்பந்து கூட்டமைப்பின் ஒழுங்குமுறைக் குழு ஐந்து ஆட்டங்களில் விளையாடத் தடை விதித்துள்ளது.

ஆட்டத்தின் 87ஆவது நிமிடத்தில் கெடாஃபே அணியின் தற்காப்பு வீரர் டிஜெனை கடுமையாகத் தாக்கியதை VAR ரிவியூவு உறுதிசெய்த பிறகு ஆர்ஜென்ரீன வீரர் வெளியேற்றப்பட்டார். அப்போது அவரது அணி 1-0 என முன்னிலை வகித்தது.

பின்னர் அவர் மைதானத்தைவிட்டு வெளியேறும்போது நடுவர் குவாட்ரா பெர்னாண்டஸை மோசமாகத் திட்டினார். இதுவே அவரது தடை ஒரு ஆட்டத்திலிருந்து ஐந்து ஆட்டங்களாக நீடிக்கப்படுவதற்கு முக்கிய காரணம்.

அடுத்த வார இறுதியில் லீக்கில் முன்னணியிலுள்ள எஃப்சி பார்சிலோனாவுக்கு எதிரான லா லிகா போட்டியையும் எஸ்பான்யோல், செவில்லா, வல்லடோலிட் அணிகளுக்கு எதிரான போட்டிகளையும் கோரியா தவறவிடுவார்.





# டுபாயில் சர்வதேச நீர் விளையாட்டு சம்பியன் போட்டி

டுபாய், ஹம்தான் விளையாட்டு வளாகத்தில் மார்ச் 21 முதல் ஏப்ரல் 20 வரை சர்வதேச நீர் விளையாட்டு சம்பியன்ஷிப் போட்டி நடைபெறும்.

இதில் 40 நாடுகளைச் சேர்ந்த 3,000 விளையாட்டு வீரர்கள் பங்குபற்றுவார்கள்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நீச்சல் கூட்டமைப்பு, உள்ளூர் அகடமிகளுடன் இணைந்து ஏற்பாடுசெய்யப்பட்ட இந்தப் போட்டியில் ஐந்து நீர் விளையாட்டுகள் நடைபெறும்.

டைவிங் (மார்ச் 21-3), வோவாட்டர் போலோ (ஏப்ரல் 5), திறந்த நீர் நீச்சல் (ஏப்ரல் 5-6), ஒத்திசைக்கப்பட்ட நீச்சல் (ஏப்ரல் 12க3), நீச்சல் (ஏப்ரல் 18-20).

# பீபா மீது குற்றஞ்சாட்டுகிறது சர்வதேச தொழிலாளர் சங்கம்

உலகக் கிண்ணப் போட்டி நடைபெறும் அஸ்டெகா மைதானத்தின் புதுப்பித்தல் பணிகளைச் செய்யும் கட்டுமானத் தொழிலாளர்களின் நிலைமைகளை ஆய்வுசெய்ய பீபா அனுமதி மறுத்ததாக சர்வதேச தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பு செவ்வாயன்று தெரிவித்துள்ளது.

கட்டடம், மரத் தொழிலாளர்கள் சர்வதேசத்தின் (BWI) பொதுச் செயலாளர் அம்பெட் யூசன், உள்ளூர் தொழிலாளர்கள் ஏற்கனவே ஒரு தொழிற் சங்கத்தைக் கொண்டிருப் பதாலும் இதுவரை எந்தச் சம்பவங்களும் நடக்கவில்லை என்பதாலும் அவர் களுக்கு ஆய்வுகள் தேவையில்லை என்று பீபா கூறியதாகக் கூறினார்.

கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் இணைந்து மெக்சிகோ நடத்தும் உலகக் கிண்ணப் போட்டிக்காக அஸ்டெகாவில் என்ன மாற்றங்கள் செய்யப்படும் என்பதை நிர்வாகம் முழுமையாக வெளியிடவில்லை.

1966ஆம் ஆண்டு திறக்கப்பட்ட இந்த மைதானத்தில் ஐந்து போட்டிகள் நடைபெறும். மூன்று உலகக் கிண்ணத் தொடக்கப் போட்டிகளை நடத்திய முதல் மைதானமாக இது மாறும். 1970, 1986 ஆண்டுகளில் உலகக் கிண்ணத்தின் தொடக்கப் போட்டிகள் அஸ்டெகா மைதானத்தில் நடைபெற்றன.

BWIஇன் கூற்றுப்படி, மெக்சிகோவிலுள்ள கட்டுமானத் தொழிலாளர்களில் 7% பேர் மட்டுமே தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள். இதனால் அவர்கள் மோசமான நிலைமைகள் மற்றும் ஊதியங்களுக்கு ஆளாக நேரிடும்.

"எல்லா உலகக் கிண்ணங்களிலும் கட்டுமானத் தொழிலாளர்கள் இறக்கின்றனர். ஆனால், மெக்சிகோவில் ஒரு கட்டுமானத் தளத்தில் ஒருவர் இறந்ததாக நாங்கள் கேள்விப்பட்டதில்லை'' என்று யூசன் கூறினார்.

''யாராவது இறக்கும் வரை நாம் காத்திருக்க வேண்டுமா அல்லது ஒரு மரணத்தைத் தடுக்க இப்போது ஆய்வுசெய்ய வேண்டுமா?'' என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

# ரஷ்ய வீரர்கள் நடுநிலையாகப் போட்டியிட அனுமதி

சர்வதேச ஃபென்சிங் யூனியன் போட்டிகளில் ரஷ்யாவின் தேசிய இளைஞர் அணிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விளையாட்டு வீரர்கள் நடுநிலை தடகள வீரர்களாக (AIN-கள்) பங்கேற்க அனுமதிக்கப்படுவார்களென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய வீரர்கள் அடுத்த மாதம் ஏப்ரல் 7 முதல் 15 வரை சீனாவில் நடைபெறும் வுக்ஸி 2025 ஜூனியர், கேடட் ஃபென்சிங் உலக சம்பியன்ஷிப்பில் பங்கேற்க அனுமதிக்கப்படுவதாகத் தீர்ப்பளித்துள்ளது. அதற்குப் பதிலாக அனுமதிக்கப்பட்ட நாட்டின் அணி அதிகாரப்பூர்வ FIE கொடியின் வர்ணங்களைப் பறக்கவிடும்.

சுமார் ஒரு வருடம் முன்பு, சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் பரிந்துரைகளைத் தொடர்ந்து, ரஷ்யா, பெலாரஸ் ஆகிய நாட்டு வீரர்கள் சர்வதேச போட்டிகளில் பங்கேற்க உரிமையை அனுமதிக்க FIE முடிவு செய்தது. இருப்பினும், சிறந்த விளையாட்டு உரிமையாளர்களான CSKA மற்றும் டைனமோவை பிரதிநிதித்துவப்படுத்திய ரஷ்ய ஃபென்சர்களை அனுமதிப்பதிலிருந்து அது விலகியது.






Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7